
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
புரட்டாதி
2020
273ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.**

**பொருள் :** ஒருவன் துன்பம் வராமல் தன்னைத்தான் காக்க நினைத் தானாயின் தன் மனத்தில் கோபம் வராமல் காக்கவேண்டும்; காவாது போனால் அக்கோபம் அவனையே கெடுக்கும்; மிகுந்த துன்பங்களை வருவிக்கும். (305)

**சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.**

**பொருள் :** கோபம் என்னும் நெருப்பு, கோபங்கொண்டவனை மாத்திர மல்லாமல் அவனுக்குப் பாதுகாவலாயுள்ள சுற்றத்தினரையும் சுடும். (306)

---


# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## ஏதும் இயம்ப மாட்டேன்

**கலிவிருத்தம்**



ஒன்றென இரண்டென எண்ணவும் மாட்டேன்
நன்றெனத் தீதென நண்ணவும் மாட்டேன்
அன்றென இன்றென அறையவும் மாட்டேன்
சென்றன வருவன தெரிந்திட மாட்டேன் 01

ஒருபொல்லாப்பு மிலையென ஓரவும் மாட்டேன்
குருவென்றுஞ் சீடனென்றுங் கொள்ளவும் மாட்டேன்
இருவினை யுண்டென இயம்பவும் மாட்டேன்
சுருதியின் முடிவெனச் சொல்லவும் மாட்டேன் 02


இகழ்ச்சி புகழ்ச்சியென ஏங்கவும் மாட்டேன்
மகிழ்ச்சியி லேமனம் வைக்கவும் மாட்டேன்
முகமன்சொல் வாரிலே மோகமும் வையேன்
அகம்பிர மாஸ்மியென் றனுதினம் நையேன் 03

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 273



2020 பொருளடக்கம் புரட்டாதி


| | | |
|---|---|---|
| சிவம் | திருமதி ந. பரமேஸ்வரி | 01 - 04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 - 08 |
| அன்புக்கு உண்டோ... | மு. செல்லத்தம்பி | 09 - 11 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 12 - 15 |
| உலகம் என்பது உயர்ந்தோர்... | கு. சோமசுந்தரம் | 16 - 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 - 21 |
| இசையும் வசையும் | முருகவே பரமநாதன் | 22 - 25 |
| இலட்சுமி கடாட்சம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 26 - 27 |
| வானதி | கு. சிவபாலராஜா | 28 - 33 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 34 - 35 |
| நாயன்மார் பாடல்களில்... | மு. துஸ்யந்தன் | 36 - 39 |
| சைவத்தமிழ் போற்றும்... | மூ. சிவலிங்கம் | 40 - 43 |
| இயங்கும் இயக்கமே இறைவன் | இராம ஜெயபாலன் | 44 - 47 |
| அம்மா என்பது சும்மாவா? | கே.எஸ். சிவஞானராஜா | 48 - 50 |
| சைவப் பெருமக்கள்... | காரை எம்.பி. அருளானந்தன் | 51 - 52 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 53 - 56 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

திருமூலநாயனார் அருளிய

# ஏங்குறள்

## திருமந்திரப் பாயிரம்

இரத்தின சுருக்கவுரை

### பாயிரம்

### 01. கடவுள் வாழ்த்து

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே. 11

எங்கும் நிறைந்து எல்லாம் ஆனவன்.

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. 12

சிவன் அருளே பெரியது.

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. 13

கால எல்லை கடந்தவன்.

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. 14

எல்லாம் கடந்து எங்கும் நிறைந்தவன்.

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 15

சுயம்பான சோதிச்சுடர் சிவன்.

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
கோது குலாவிக் குணம்பயில் வாரே. 16

குறைகள் நீங்கி வளம் பெறுவர்.

காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. 17

இறை அருளே இனிய துணை.

அதிபதி செய்து அளகை வேந்தனை
இதுபதி கொள்என்ற எம்பெரு மானே. 18

ஆண்டியும் அரசனாவான் இறையால்.

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
அதுபதி யாக அமருகின் றானே. 19

உள்ளமே உறைவிடமானவன்.

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
கடிமலர்க் குன்றம் மலையது தானே. 20

கையிலையில் உறைபவன்.

*~திரு சி. யமுனாநந்தா~*

# சுடர் தரும் தகவல்

நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து செல்லும் என்பது பொதுவாக சராசரி மனிதன் ஒருவன் உணர்ந்து கொள்ளுகின்ற கருத்தாகும்.

அனைவரது வாழ்க்கையிலும் இவ்வாறான இயல்பு இடம்பெற்றுக்கொண்டிருந் தாலும் இவ்வாறு இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதைப் புரிந்து கொள்ளமுடியாத சில அன்பர்களையும் நாம் சந்திக்கின்றோம். இது அறியாமையின் வெளிப் பாடாக இருக்கலாம்.

இன்னும் சிலர் இன்பம் துன்பம் என்பவற்றின் காலச் சக்கரத்தை விளங்கிக் கொண்டாலும் துன்பத்தை மட்டுமே பெரிதுபடுத்தி வாழ்க்கையில் துவண்டு போகின்ற வர்களையும் காண்கின்றோம்.

இவற்றிற்கு மேலாக ஒன்றன்பின் ஒன்றாகப் பல துன்பங்கள் ஏற்பட்டோ அல்லது மிக மோசமான துன்பங்களுக்கு உட்பட்டு துன்பச் சுமைகளைத் தாங்கமுடியாது வாழ்க்கை யின் விளிம்பிற்கே செல்லுகின்ற அன்பர்களையும் பார்க்கின்றோம்.

அதிலும் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்காது கடமை உணர்வும் இறை பக்தியும் கொண்டவர்களாக உள்ள அன்பர்களுக்கு இவ்வித சோதனைகள் அல்லது வேதனைகள் ஏற்படும்பொழுது அவர்கள் தமக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு விளக்கம் தெரியாது வேதனைப்பட்டு தத்தளிப்பதையும் பார்க்கின்றோம். இத்தகைய நிலை பலரையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகின்ற நிலையாகும்.

இத்தகைய நிலையை ஆராய்ந்தால் நாம் இதைவிட மோசமாக ஏற்பட இருந்த துன்பத்திலிருந்து அல்லது ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றோம் என்பது பொருளாக இருக்கலாம். அல்லது இறைவன் எம்மை ஆட்கொள்ளும் சூழ்நிலைக்கு நாம் இறைவனை நெருங்கிவிட்டோம் என்பதன் அறிகுறியாகவும் இருக்கலாம்.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதானால் எமக்கு ஏற்பட்ட சோதனை அல்லது அந்த மோசமான துன்பத்தினால் ஏதோ ஒருவகையான நன்மை நமக்கு உண்டென்பதே கருத்தாகும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 20. கொலு வகுப்பு

அதிபகி ரதிபயி ரவிபக வதிசசி
யரம்பை யருமே நிரம்ப வொருபால்
அழகிய கவுரியொ டிலகிய வலவையு
மடைந்து தயவாய் மிடைந்த தொருபால்
மதியர சருநிறை வசியரும் வினைஞரு
மலிந்து முகமே பொலிந்த தொருபால்
வருசிவ னடியவ ரரகர வெனமுறை
வழங்கு கடல்போன் முழங்க வொருபால்
விதிமுறை கருதியை வகைபுரி கருவிகள்
விளைந்த வொலிவா னளைந்த தொருபால்
விதமுட னபிநய வனிதையர் சதிமுறை
விரிந்த நடமே புரிந்த தொருபால்
உதிர்தரு மலர்விரை யுறுபகை ம்ருகமத
முமிழ்ந்த மணமே கமழ்ந்த தொருபால்
ஒழுகிய கிரிதொடு பணிதம தடுசுட
ருவந்த வொளியே நிவந்த தொருபால்:,

அரியக டெனமுக ளவிய வொருகுடை
யமர்ந்த நிழலே சமைந்த தொருபால்
அருமட வனமென விருபுடை கவரிக
ளசைந்த வழகே யிசைந்த தொருபால்
வரிசைசெய் துயலொடு வனமயில் சிவிறியின்
வயங்கு சிறுகா லியங்க வொருபால்
மறுகட லினிலெழு நிறைமதி யமுதென
வரிந்து பனிநீர் சொரிந்த தொருபால்
விரியிருள் வலிதரு கிரணம தெனநல
மிகுஞ்சு மூலில்வீ சுகுஞ்ச மொருபால்
வியன்மர கதமணி மிளிர்தரு களசெதிர்
விரைந்து நிரையாய் நிரைந்த தொருபால்
உரியவெ ளிலையுட னுயரிய கமுகினி
லுகுந்த கனியே பகுந்த தொருபால்
உலகுள வனிதைய ரவரவர் விரதமொ
டுணர்ந்து கனியே கொணர்ந்த தொருபால்:,

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

Dr. K. இராதாகிருஷ்ணன்
(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

இராசையா குகதாசன்
(யாழ்ப்பாணம்)

சி. கனகசபை
(யாழ்ப்பாணம்)

அ. மகேந்திரராசா
(மல்லாகம்)

சி. செல்லையா
(கரவெட்டி)

M.S.K. மகேஸ்வரன்
(கொக்குவில்)

சி. சிவநேசன்
(கொக்குவில்)

வ. கதிர்காமநாதன்
(சுண்ணாகம்)

S. மகாதேவன்
(உரும்பராய்)

க. காசிநாதர்
(நீர்வேலி)

K.S. கணபதிப்பிள்ளை
(கைதடி)

தி. கோபாலகிருஷ்ணன்
(புத்தூர்)

உரிமையாளர்
(விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி)

**வே. தர்மராசா**

(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**

(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**

(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**ப. நடராசாக்குருக்கள்**

(ஆவரங்கால், புத்தூர்)

**இ. ராதாகிருஷ்ணன்**

(ஏழாலை மத்தி, ஏழாலை)

**க. ஸ்ரீஸ்கந்தராசா**

(இளை. அதிபர், அச்சுவேலி)

**சோ. தனராசா**

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**

(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**ஆ. திருநாவுக்கரசு**

(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**

(தபால் வீதி, கொக்குவில்)

**B.R. ரஞ்சன்**

(சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்)

**சி. லிங்கேஸ்வரி**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**பார்த்தசாரதி விஜயகுமார்**

(சுழிபுரம்)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**இ. இந்திரலிங்கம்**

(இணுவில் கிழக்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.சு. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(நீர்வேலி)

**ஐ. ராமச்சந்திரா**

(லவ்லேன், உடுவில்)

சி. சகுந்தலாதேவி

(வங்களாலேன், மல்லாகம்)

அ. ராஜ்சங்கர்

(உரும்பராய்)

ம. நாகேஸ்வரி

(நவிண்டில்)

த. லதாசந்திரிக்கா

(மகாத்மா வீதி, நெல்லியடி)

க. நற்குணராஜா

(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

செ. இராஜேஸ்வரி

(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

ஜெயா

(உப அஞ்சல் அதிபர், நீர்வேலி)

த. பூபாலன்

(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

கா.ஆ. சச்சிதானந்தம்

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

தினேஸ் கவிதா

(ஆவரங்கால்)

க. சிவசுப்பிரமணியம்

(கோப்பாய்)

நா. கமலநாதன்

(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

செ. சோதிப்பெருமாள்

(சரஸ்வதி மஹால், இணுவில்)

சி. வேலாயுதம்

(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

# சிவம்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

சிவ சிவ என்றால் தீவினை மாளும்
சிவ ஒளி தோன்றும் தேவாராம் தன்மையுண்டாகும்.
சிவமே கதியென்ற உண்மை புலனாகும்
அன்பும் சிவமும் ஒன்றேயென்ற உண்மை விளங்கும்
தாமே சிவமாம் தன்மையுண்டான பின் அறிவதற்கு ஒன்றுமில்லை
திருமூலர் தந்த சிவமந்திரத்தின் சாராம்சம் இதுவேயாகும்.

சிவசிந்தனை சீவனை உய்விக்கும். சீவனை உய்விப்பதென்பது சீவனை வாழ வைப்பதென்பதாகும். சீவனை வாழவைப்பது சிவம். சிவம் என்பது அன்பு. அன்புமயமான உலகில்தான் சீவன் ஆனந்த மாக இயல்பான தன் நிலையில் வாழும். அன்பில்லா உலகில் சீவன் தத்தளிக்கும் தடுமாறும் சஞ்சல புத்தி உண்டாகும். அறிவென்னும் ஒளியை இருளென்னும் மாயை மறைப்பதால் செய்வதொன்றறியாத கையறு நிலை தோன் றும். இதனால் உலகின் சமநிலை பாதிக்கப்படும். எங்கும் கூச்சல் குழப்பம் அமைதியின்மை இதனால் சீவனுக்கு உபாதி உண்டாகும். வாழ்வில் வெறுப்பு உண்டாகும். இது பிறவி என்னும் பெருங்கடலிற் சுழியிலகப்பட்டுத் தத்தளிக்கும் நிலையாகும். இச் சம்சாரச் சுழலிலிருந்து எம்மைக் காப்பாற் றிக் கரையேற்றவல்லது சிவசிந்தனை ஒன்றேயாம். சிவசிந்தனை என்பது இறைவனை அன்புடன் நேசித்து உறவாடுவதாகும்.



எம்மைச் சுகமாக வாழவைப்பது சிவசிந்தனையே ஆகும். இறைவன் என்றால் இறைமையுள்ளவன். உலகச் சக்கரவர்த்தியானவன் என்பது பொருளாகும். இந்த உலகச் சக்கரவர்த்தியின் சட்டதிட்டங்களே வேத வாக்கியங்கள். இந்த வேத வாக்கியங்களான சட்ட திட்டங்களுக்கமைய வாழும் வழியை அறிந்து கொண்டால் அதுவே சுகமான, சுவையான ஆனந்தமான வாழ்வாகும். இன்று இவ்வேத வாக்கியங்கள் மனிதர்களின்

மத்தியில் திரிபுபட்டுக் குழப்பநிலையை உருவாக்கி உலகைச் சஞ்சலத்தில் ஆழ்த்தி உள்ளது. காரணம் மனிதனின் அகங்காரமே ஆகும். ஏனெனில் வேதவாக்கியங்களை மனித அறிவால் ஆராய்ந்து அறிய முடியாது. பௌதீக அறிவைக்கொண்டு இறைவனையோ இறைவனின் சட்டங்களையோ அறிந்து கொள்ளவோ புரிந்துகொள்ளவோ முடியாது. அகங்காரம் கொண்ட மனித அறிவு பேதத்தை உண்டாக்கும்.

இன்று மதங்கள் என்ற பெயரால் இறைவனில் பேதம் காண்கின்றது மனித அறிவு மதம் என்பது அளவு கடந்தால் மதியை மயக்கி மயக்கத்தையுண்டாக்கும். மதம் என்பதை விட மார்க்கம் என்பதே இதற்குச் சரியான சொல்லாகும். வாழ்வின் இலட்சியம் இறைவனை அடைவதே. இறைவனை அடையும் மார்க்கங்களே மதம் என்னும் பெயரில் பலவாறாகப் பிரிந்து ஒன்றையொன்று முட்டி மோதிக் குழப்பத்தை உண்டாக்குகின்றது. உண்மை நிலையை அறிய இறைவனை நாடவேண்டும். அன்புடன் எம்மைப் பெற்ற தாயாகத் தந்தையாகக் குருவாகப் பாவித்து உறவாட வேண்டும். அன்புடன் இறைவனைச் சிந்தனை செய்வதே சிவசிந்தனையாகும். இறைவனை நெருங்கி உறவாடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மார்க்கங்களே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை மார்க்கங்களாகும். கீழ் நிலையில் இருக்கும் மனித அறிவு ஒவ்வொரு படியாக மேலே சென்று பேறறிவாகிய ஞானத்தை அடைந்தபின் அமைதி ஆகின்றது.

இந்த ஞான அறிவை விடுதலை, மோட்சம், சுதந்திரம் என்று பலவாறாகச் சொல்வார்கள் ஆனால் இத்துடன் வாழ்க்கை முடிந்து விட்டது இறந்தபின்தான் இந்த விடுதலை நமக்குக் கிடைக்கும் என்பது தவறான கருத்தாகும். இறைவனை அடைய முன் உலக இன்பங்களை அனுபவித்து விட வேண்டும் என்ற அங்கலாய்ப்பே மனிதனை அவசரமான வேகமான வாழ்க்கைக்குத் தூண்டுகின்றது. இதனால் மக்கள் ஓடியோடி உழைக்கின்றனர். ஆனால் எவ்வளவு உழைத்தாலும் போதவில்லை, எதையும் சந்தோஷமாக அனுபவிக்க முடியவில்லை, இதுதான் இன்றைய நிலை.

ஆனால் இறைவனை அன்புடன் சிந்தித்து அவனது அருட்கடாட்சத்தைப் பெற்று வாழ்வின் நெறி முறையைக் கற்றுக் கொள்ளும் அறிவே ஞானம் என்பதாகும். இதன் பிறகே உண்மையான வாழ்க்கை தொடங்குகின்றது. நாம் நலமுடன் வாழ்வதற்கான அறிவே ஞானமாகும். ஆகவே இறந்தபின் மோட்சம் கிடைப்பதால் ஏது பயன்? ஆகவே ஆரம்பக்கல்வி வாழ்வின் நெறிமுறையைக் கற்பிப்பதோடு, இறையன்பு, இறைபக்தி, இறை நம்பிக்கையை ஊட்ட வேண்டும். இதுவே மனிதவாழ்வின் அடித்தளமாகும். இதன் பின்தான் பொருளியற்கல்வி சிறந்த முறையில் அமையும். பொருளை எவ்விதம் சம்பாதிக்க வேண்டும் அதனை எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்பதை ஆரம்பக்கல்வியில் அறிந்து கொண்டபின் பொருளியற் கல்வி அமையும் போது வாழ்க்கை சிறப்பாக அமையும்.

முற்காலத்தில் அரசர்களின் பிள்ளைகள் குருகுலக் கல்வியை மேற்கொண்டனர். குருகுலத்தில் வாழ்வின் சட்ட திட்டங்களாகிய வேதங்களும் அரசர்களுக்குரிய கடமைகளும் மற்றும் போர்க்கலைகளும் அதன் விதிமுறைகளும் அங்கு கற்பிக்கப்பட்டன. இதனால் நல்லாட்சி நிலவியது. மக்கள் சந்தோஷமாகத் தங்கள் கடமைகளைச் செய்து இயல்பாக அச்சமின்றி வாழ்ந்தனர். ஆனால் இன்றைய ஜனநாயக ஆட்சி முறையென்பது மக்கள்

*உண்மையான அறிவு என்பது தயக்கமற்ற உறுதி.*

தம்மைத் தாமே ஆள்வது என்பதாகும். தன் னைத் தான் ஆள்வது என்னும்போது தான் யார் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.

இந்தத் தன்னையறிதல் என்பதே ஞானம் ஆகும். இந்த ஞானத்தைப் பெறுவதற்கு தன்னை உணர்ந்த ஞானியரைக் குருவாகக் கொள்ள வேண்டும். இத்தகைய ஞானிகளுள் ஒருவராக விளங்கிய யோகர் சுவாமிகளும் தனது குருவான செல்லப்பாச் சுவாமிகளின் மகா வாக்கியங்களைக்கொண்டு இலகுவாக அறிந்து கொள்ளலாம் என்று கூறியதோடு, தான் அக்கூற்றின் உதாரண புருஷராக வாழ்ந்து காட்டினார். யாரடா நீ; தேரடா உள்ளே என்பதில் நீ யாரென்பதை உள்ளே தேடிக்கொள் என்பதோடு, நீ உடம்பாயிருந் தால் அது தேர் உள்ளே யார் என்பதைத் தேடிக் கண்டுகொள் என்ற கருத்தையும் கொண்டதாகும். இதையே புத்தரும் இறை வனை உள்ளே தேடிக் கண்டுகொள் என்றே சொன்னார் யேசுநாதரும் கேளுங்கள் கொடுக் கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொன்னார். இவற்றின் உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டின் நாம் உள்ளே போய்த் தேட வேண்டும்.

இதற்குச் சுலபமான வழி நான் இந்த உடம்பல்ல. இந்த உடம்பு இறைவன் வாழும் கோயில் என்பதைத் திருமூலர் முன்பே கூறியிருக்கின்றார். உள்ளே வாழும் சீவனே சிவம். அந்தச் சிவமே அன்புமயமான இறை வன். அந்த இறைவனோடு மனிதனின் அறியும் தன்மையை உணரும் மனமானது எப்போதும் தொடர்பு கொண்டு உறவாட வேண்டும். இதற்கு மனித முயற்சியும் இறைவனின் திருவருளும் ஒன்று சேர வேண்டும். மனம் என்னும் திரைக்கு ஒளியைத் தருவது ஆன்மா. இந்த ஒளியால் மனத்தில் எழும் எண்ணங்கள் தூய்மை யானவையா அல்லவா என்பதை அறிவால் அறிந்துணர முடியும். இதுவே மனச்சாட்சி ஆகும். மனத்தில் எழும் எண்ணங்களுக்குச் சாட்சியாயிருப்பது சிவம்.

ஒவ்வொரு மனித மனங்களிலும் வியாபித்திருக்கும் எண்ணங்களின் தொகுப்பே பிரபஞ்ச மனமாகும். பிரபஞ்ச மன எண்ணத் தொகுப்பின் சக்தியே உலகின் சக்தியாகின் றது. நல்ல எண்ணங்கள் சிந்தனைகள் உல கில் அதிகரிக்கும்போது உலகில் நல்லவை நிகழும் அமைதி பேரானந்தம் உண்டாகும். தீய சிந்தனைகள் அதிகரிக்கும்போது உலகில் குழப்பங்கள் உண்டாகும். ஆகவே மனிதனின் நல்ல எண்ணங்கள் சிந்தனைகளே உலகில் நிகழும் நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகும்.

ஆகவே அமைதியான நிம்மதியான ஒற்றுமையான உலகில் நாம் வாழவேண்டு மாயின் நமது எண்ணங்கள் நல்லவையாக அமைய வேண்டும். நம் எண்ணங்கள் நல்ல வையா கெட்டவையா என்பதை மனத்திற்குச் சாட்சியாக இருக்கும் இறைவனிடம் தொடர்பு கொண்டே அறிய முடியும். அறிந்து கொண்ட பின் தீயதை விலக்கி நல்லவற்றைச் செயற் படுத்த வேண்டும். ஒவ்வொரு மனிதனும் உலகின் ஓர் அங்கம் என்பதை உணர வேண் டும். உலகின் அமைதி கெடுவதற்கும் குழப்பம் கொந்தளிப்பு ஏற்படுவதற்கும் நான் காரணமாக இருக்கக்கூடாது என்பதை ஒவ்வொரு மனி தனும் உணர்ந்து தன் எண்ணங்களை விழிப் புடன் கவனித்துத் தீயவற்றை அழித்து நல்ல வற்றை வளர்க்க வேண்டும். இதற்குச் சுய பரிசோதனை அவசியம். மனத்தில் புலன் களின் ஆதிக்கம் அதிகரித்தால் குழப்பம் உண்டாகும்.

இறைவனின் ஆதிக்கம் அதிகரித்தால் தான் நல்லதை அறிந்து செயற்படுத்த முடி யும். புலன்களின் அறிவால் மனத்தில் ஏற்படும்

தோற்றங்கள் விகாரங்கள் எனப்படும். இவை மனத்திரையில் காட்சிகளாக விரியும் இக் காட்சிகளை ஒழுங்குபடுத்தி உலக நாடகத் தைச் சீராக அமைக்கும் இயக்குநராக விளங் குபவர் இறைவன். இந்த இறைவன்பால் அன் பும் நம்பிக்கையும் வைத்து மனத்தை அவரி டம் ஒப்படைத்தால் வாழ்வியல் நாடகம் சீராக அமையும். இதனால் முழு உலகும் அமைதி யும் ஆனந்தமும் நிறைந்த வாழ்வு வாழலாம்.

தற்போது முடியாட்சி இல்லை, குடி யாட்சி. குடியாட்சி என்பது ஒவ்வொரு குடி மகனும் ஆட்சியின் ஓர் அங்கமாவான். இதுவே ஜனநாயக ஆட்சியாகும். ஆகவே ஒவ்வொரு மனிதனும் உலகியல் சட்ட திட்டங்களை அறிந்திருத்தல் அவசியமாகும். குடிமக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வரும் தலைவர்கள் முதலில் வாழ்வியல் அரசியல் சட்ட திட்டங் களை அறிந்திருத்தல் அவசியம். மக்களுக் கெல்லாம் நாயகனான இறைவனே உலக சபாநாயகன். இந்த சபாநாயகனே உலக மக்கள் யாவர்க்கும் ஒரே தலைவன். ஆகவே இறைவனின் சட்டங்களே உலகம் முழுவதற்கு மான சட்டங்கள் ஆகும். இதுவே உலகில் ஒற்றையாட்சி நிலவுவதற்கான சட்டங்கள் ஆகும். இத்தகைய இறைவனின் சட்டதிட்டங் களுக்கமைய ஆட்சி நடத்துவதே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நிர்வகிக்கும் ஆட்சித் தலை வர்களின் கடமையும் பணியுமாகும். இறைவன் எவ்வாறு தொண்டர்க்கெல்லாம் தொண்டனோ அவ்வாறே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு ஆட்சித் தலைவர்களும் தங்கள் குடிமக்களுக்குச் சேவை செய்யும் பணியாளர்களாகத் தங்களைக் கருத வேண் டும். மக்கள் நலம் பேணுவதே மக்களின் தலைவர்களது கடமையாகும்.

இறைவன் எவ்வாறு தொண்டர்களுக் குத் தொண்டனானான்? தொண்டர்களின் அன்பிற்கும் பண்பிற்கும் நன்னெறிக்கும் கட்டுப் பட்டுத் தொண்டனானான். நான் இறைவன் நான் சொன்னபடி எல்லோரும் செய்ய வேண் டும் ஏன் எதற்கு என்று கேட்கக்கூடாது. என்று இறைவன் தன் மக்களை அடிமைப்படுத்த வில்லை. ஏன் எதற்கு என்பதைப் புரியவைத்து எல்லோரையும் தன்னறிவைப் பெற வைக்கும் ஆன்மீகக் கல்வியை அனைவர்க்கும் பொது வாகவே வகுத்துள்ளான். ஆகவே இறை வனாகிய சக்கரவர்த்தியின் சிற்றரசர்களாகிய நாட்டுத்தலைவர்கள் இந்த ஆன்மீக அறிவில் சித்தியடைந்து தேறியவர்களாக இருந்தால் தான் வீட்டில், நாட்டில், உலகில் அமைதி நிலவும்.

இதை நடைமுறைக்குக் கொண்டுவர உலகச் சக்கரவர்த்தியாகிய இறைமையுள்ள இறைவன் எல்லாவற்றையும் கடந்து உள் உறையும் கடவுள் தன் இன்னருளைச் சுரக்க வேண்டும். அதற்கு இறையரசின் குடிமக்க ளாகிய நாம் ஒவ்வொருவரும் மனமொன்றிப் பிரார்த்தித்தால் நிச்சயம் அவனருள் சுரக்கும் அமைதி பிறக்கும். யாவரும் சேர்ந்து பிரார்த் திப்போமாக.

உன்மேல் நீ வைத்திருக்கும் நம்பிக்கை போன்று இறைவனிடமும் நம்பிக்கை வை. இதுதான் உயர்வின் ரகசியம். நீயே கடவுள். கடவுளே நீதான். நீ ஏன் சந்தேகங்களுக்கு இடமளிக்க வேண்டும்? சந்தேகங்கள் உன்னை அழித்து விடும். ஆகவே சந்தேகங்களை விட்டுவிடுங்கள். சத்தியத்தின் பாதையில் நடந்து, தெய்வீகத்தை உணர்ந்து அனுபவியுங்கள். இதுதான் உண்மையான சாதனை. உண்மையான ஆன்மீகம்.

*வெற்றி பல நண்பர்களைப் பெற்றுத் தரும்.*

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

115. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறும்மட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும் பொன்மேனி நெடுந்தகையே.

**ப-ரை:**

வினையேன் மனத்து ஊறும் மட்டே- பிரார்த்த வினையுடையேனாயினும் பேரருளால் எனது மனத்தின் கண்ணே ஊறுகின்ற தேன் போன்றவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே- நிலைபெறும் உத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே- நீறுபட்டு ஒளி காட்டும் பொன்மேனி நெடுந்தகையே- திருவெண்ணீறு அணியப்பட்டு வெண்மையான ஒளி காட்டும் பொன்போலும் திருமேனியையுடைய பேரருளையுடையவனே, அஞ்சு எனை மாறுபட்டு வஞ்சிப்ப- ஐம்பொறிகளும் சிறியேனை முரண்பட்டு மயக்க, யான் உன்மணிமலர் தாள் வேறுபட்டேனை- அதனால் நினது அழகிய மலர்போன்ற திருவடிகளைப் பிரிந்தேன். அங்ஙனம் பிரிந்த என்னை விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வினையேன் மனத்து ஊறும்மட்டே, உத்தரகோசமங்கைக்கு அரசே, பொன்மேனி நெடுந்தகையே, அஞ்சு எனை மாறுபட்டு வஞ்சிக்க, அதனால் நினது திருவடிகளைப் பிரிந்தேன், அங்ஙனம் பிரிந்த என்னை கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அஞ்சு என்றது குறிப்பினால் ஐம்புலன்களை உணர்த்தியது. ஐம்புலன்களும் என்வழி நில்லாமல் மாறுபட்டு நின்று மயக்குதலின், "மாறுபட்டு அஞ்செனை வஞ்சிப்ப" என்றார். "மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் (கோயிற் 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. வஞ்சிப்ப என்னும் செயவெனெச்சம் மணி மலர்த்தாள் வேறுபடுதற்கு ஏதுப் பொருளில் வந்தது. அஞ்சு எனை மாறுபட்டு வஞ்சித்தமை பிரார்த்த வினையின் அனுபவமுண்மையாலாகும். யான் என்னும் எழுவாய் வேறுபட்டேனை என்பதிலுள்ள வேறு பட்டேன் என்பதனோடு முடியும். வேறுபட்டேன் என்பது வினையாலணையும் பெயராய் ஐ உருபு ஏற்று வேறுபட்டவனாகிய என்னை என்னும் பொருள் தந்து நின்றது.

மட்டு- தேன். இது மட்டே என விளியுரு பேற்றது. மனத்து ஊறு மட்டு- மனத்தின்கண் ஊறுகின்ற தேன்.

*விசுவாசமான நண்பன் தெய்வத்தின் சாயலானவன்.*

"என் உள்ளத்துள்ளே யூறும் அத்தேனை"

நாவு 267:3.

"உருகுமனத் தடியவர்கட்கு ஊறுந்தேனை"

நாவு 297:3

"தித்தித்தென மனத்துள்ளே யூறிந்தேனை"

நாவு 297:7

"கருதுவார் இதயத்துக் கமலத்தூறும், தேனவன் காண்"

நாவு 300:1.

"பாவிப்பர் மனத்தூறுமத்தேனை"

சுந் 59:10.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. இறைவன் அன்பராயினார்க்கு தேன் போன்று இனியனாதலின் "தேனே" என்றார்.

தேனொத் தினியான்" (ஞான 38:3) தெள்ளத் தேறித் தெளிந்துதித்திப்பதோர் உள்ளத்தேறல்" "தேனொத்தடியார்க் கினியார் போலும்" உணர்ந்தார்க் கென்றுந் தேனவன் காண்" நாவு 204:10, 295:1; 298:5) எனத் தேவாரத்து வருவன காண்க.

இறைவன் பொன்போலும் திருமேனியனாதலின் "பொன் மேனி நெடுந்தகையே" என்றார்.

"புண் சுமந்த பொன்மேனி"

அம்மானை 8.

"பொன்னை யழித்த நன்மேனிப் புகழிற் றிகழு மழகன்"

குயிற் 7.

"ஆருடை யம்பொனின் மேனி அமுதினை"

குயிற் 9.

"பொன்னிய லுந்திரு மேனி"

திருப்படை 6.

"பொன் செய்த மேனியன்"

திருக்கோவை 278.

"சிவந்த பொன்மேனி மணி"

திருக்கோவை 36.

என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க. பொற்புயமுடையார்க்கு, பொன் வண்ணருக்கு, பொன்வடிவினருக்கு நமஸ்காரம் என்று தைத்திரீய ஆரணியகம் (20:40) கூறுதலானும் சிவபெருமான் பொன்மேனியனாதல் பெறப்படும். இறைவன் பொன்மேனி திரு வெண்ணீறுபட்டு வெள்ளொளி காட்டுதலின் "நீறுபட்டே யொளிகாட்டும் பொன்மேனி" என்றார். "திருநீற்றை யுத்தூளித் தொளிமிளிரும் வெண்மையனே" (நீத் 22) என வருதலுங் காண்க. நீறுபட்டே, மனத்தே என்பவற்றில் ஏகாரம் அசைநிலை. தகை- அருள். "அருளுங் குணமும் தளர்வுந் தகையே" என்பது பிங்கலந்தை (10:566) நெடுந்தகை- பெரிய அருளையுடையவன். "மணிமலர்த்தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய் நெடுந்தகையே" என்றார். நெடுமை- குணப் பண்பு பற்றி வந்தது. இனி, நெடுந்தகை என்பதற்கு பெரிய தகுதிப்பாடுடையவன்,

பெரிய மேம்பாட்டாளன், அளத்தற்கரிய தன்மையை யுடையவன் என்ற பொருள்களும் அமையும்.

இதன்கண், மாறுபட்டென்னை வஞ்சிப்ப யான் உன் மணி மலர்த்தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 11.

**116. நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யான்ஐம் புலன்கள் கொண்டு**
**விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ**
**அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங் கைக்கரசே**
**கடுந்தகை யேன் உண்ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே.**

**ப-ரை:**

விரவார் வெருவ அடு தகை வேல் வல்ல- உலகிற்குத் தீமை செய்யும் பகைவர் கண்டு அஞ்சும்படி தண்டஞ் செய்து கொல்லும் தன்மையையுடைய மூவிலை வேலைச் செலுத்துதலில் வல்ல, உத்தரகோச மங்கைக்கு அரசே- திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே, கடு தகையேன் உண்ணும் தெள்நீர் அமுத பெருகடலே- மிக்க தளர்ச்சியை யுடையேனாகிய யான் பருகுதற்குரிய தெளிந்த தன்மையையுடைய பெரிய அமுதக் கடலே, நெடுந்தகை- பேரருளையுடையவனே, நீ என்னை ஆட்கொள்ள- நீ என்னை அடிமை கொள்ளவும், யான் ஐம்புலன்கள் கொண்டு விடும் தகையேனை- யான் ஐம்புல நுகர்ச்சிகளை மேற்கொண்டு நின்னை விட்டுப் பிரியும் தன்மையுடையவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கு அரசே, அமுதப் பெருங்கடலே, நீ என்னை ஆட்கொள்ளவும் யான் ஐம்புல நுகர்ச்சியை மேற்கொண்டு நின்னை விட்டுப் பிரியும் தன்மையுடையவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

நெடுந்தகை- அண்மை விளி. அடிகள் நீங்கி நிற்பவும் பேரருளால் வலிய வந்து ஆட்கொண்டமையின் இறைவனை "நெடுந்தகை" என்றார். "கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட விடையவனே" (நீத் 1) "கள்ளேன் ஒழியவும் கண்டு கொண்டாண்டது எக்காரணமே" (நீத் 2) என வருவனவும் காண்க. ஆட்கொள்ளவும் என உம்மை விரித்து அதனை "விடும்" என்பதனோடு முடிக்க, ஐம்புல நுகர்ச்சிகளை மேற்கொண்டு மேனிலைப் படுத்தற்குரிய நின்னை விட்டுப் பிரியும் தன்மையுடையனாயினேன் என்பார், "யான் ஐம்புலன்கள் கொண்டு விடுந்தகையேனை" என்றார். ஐம்புலன்கள் கொண்டு என்பதற்கு ஐம்புலன்கள் செலுத்தும் நெறியை மேற்கொண்டு எனினுமாம். ஐம்புல நுகர்ச்சியை மேற்கொண்டது பிராரத்த வினையுடைமையாலாகும். ஐம்புலன்கள் கொண்டமை விட்டு நீங்குதற்கேதுவாகலின், கொண்டு என்னும் செய்தெனெச்சம் ஏதுப்பொருளில் வந்தது. யான் என்னும் எழுவாய் தகையேன் என்பதனோடு முடியும்.

விரவார்- பகைவர் என்றது உலகிற்குத் தீமை செய்வாரை. வேல்- இங்கே இறைவனுக்குரிய மூவிலை வேலாகிய சூலப்படையை உணர்த்திற்று. "மூவிலைச் சூலப் படையானே"

*சாதுர்யத்தால் நீங்கள் எதையும் கற்றுக்கொள்ளலாம்.*

(திரும்புலம்பல் 2) என வருதல் காண்க. வல்ல என்பதனை வல என்பதன் விரித்தல் விகாரமாகக் கொண்டு, வேலை வலப்பக்கத்திலுடையவனே எனினுமாம். "பொருதலை மூவிலை வேல் வலன் ஏந்திப் பொலிபவனே" (நீத் 9) என வருதலும் காண்க. வல என்பது வலப் பக்கத்தினை உணர்த்துதல், "இடவல" (3:83) என்னும் பரிபாடலினும் காண்க.

தகை- தளர்ச்சி. "அருளுங் குணமும் தளர்வுந் தகையே" (பிங். 10:566) கடுந்தகை- மிக்க தளர்ச்சி என்றது இறைவனைப் பிரிந்தமையாலுளதாகிய தளர்ச்சி. உண்ணும் அமுதக் கடல் என இயையும். நீர்- நீர்மை. "நீணீர் நெறி கதுப்பு" (கலி 98:15) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அமுதம் என்றது ஈண்டு திருவருளை,

இதன்கண், ஐம்புலன்கள் கொண்டு விடுதகையேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 12.

(தொடரும்...

## இராமதாசர் தந்த காவிக் கொடி

மராட்டியப் பேரரசராகிய சிவாஜி தன் குருதேவராக இராமதாசரைக் கொண்டிருந்தார். ஒருநாள், அரண்மனை மேன்மாடத்திலிருந்த சிவாஜி தன் குருதேவர் கையில் திருவோடு ஏந்தியபடி செல்வதைக் கண்டார். அவர் உள்ளம் பதைத்தது. "என் செல்வங்கள் அனைத்தையும் குருதேவருக்காகச் செலவு செய்யத் தயாராக உள்ளேன். இந்த நிலையில் அவர் ஏன் ஒவ்வொரு வீடாகப் பிச்சை கேட்க வேண்டும்" என்றும் நினைத்தார். ஞானிகளின் செயல்களைப் புரிந்துகொள்வது கடினம் என்பது அவருக்குப் புரிந்தது.

ஒரு சீட்டு ஒன்றில் எதையோ எழுதிய அவர் தம் நண்பர் பாலாஜியை அழைத்தார். குருதேவர் அரண்மனைக்கு வரும்போது இந்தச் சீட்டை அவரிடம் தருமாறு சொன்னார். நண்பகல் நேரம். குருதேவர் திருவோட்டுடன் அரண்மனை வாயிலில் நின்றார். அவரைப் பணிவாக வணங்கிய பாலாஜி அந்தச் சீட்டை அவருடைய திருவடிகளில் வைத்தான். அதை எடுத்துப் பார்த்தார் குருதேவர். அதில் "இந்தப் பேரரசு முழுவதையும் குருதேவருக்குப் பணிவுடன் வழங்கி அவருடைய நல்லாசிகளை வேண்டி நிற்கிறேன்" என்று எழுதப்பட்டு இருந்தது. பாலாஜியைப் பார்த்து புன்னகை செய்த அவர், "சரி" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றார். மறுநாள் காலையில் சிவாஜியைச் சந்தித்த அவர், "உன் பேரரசைத்தான் எனக்குத் தந்துவிட்டாய். இனி என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார். குருதேவரின் திருவடிகளில் விழுந்த சிவாஜி, "தங்கள் சேவையில் காலம் கழிக்க வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன்" என்றார். "என் திருவோட்டை எடுத்துக்கொள். நாம் இருவரும் பிச்சை பெற்று வருவோம்" என்றார் இராமதாசர். இருவரும் நகர வீதிகளில் அலைந்து பிச்சை ஏற்றனர். இருவரையும் கண்ட மக்கள் பணிந்து வணங்கி அரிசி வழங்கினார்கள். இராமதாசர் அந்த அரிசியைச் சமைத்து உண்டார். எஞ்சி இருந்த உணவை சிவாஜி உண்டார்.

"குருதேவா! அடியேனைப் பிச்சை ஏற்க வைத்தீர். இன்னும் என்ன செய்யப்போவதாக எண்ணம்" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் சிவாஜி. "சிவாஜி! ஒரு பெரிய குறிக்கோளை நிறைவேற்றத் தகுந்தவேளை வந்துவிட்டது. அதற்குத் தகுதியானவன் நீதான். இன்று முதல் இந்த நாட்டை என் பெயரால் ஆட்சி செய்க. காவிக் கொடியைச் சின்னமாகக் கொண்டு காவி நிறப் பெருமையை வாழ்நாள் முழுவதும் பாதுகாத்து வா. கடவுளின் பிரதிநிதியாக நின்று இந்த நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்" என்றார். இராமதாசரின் பாதுகைகளை அரியணையில் வைத்து அவர் பெயரால் ஆட்சி செய்துவரத் தொடங்கினார் சிவாஜி.

*பிறரிடம் குற்றம் காணாமல் நீ உன்னை ஒழுங்குபடுத்திக்கொள்.*

# அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

"உலகம் சமநிலை பெறவேண்டும்
உயர்வு தாழ்வு இல்லாநிலை வேண்டும்"

உலகம் இயற்கையானது. உண்மையானது, இறைமையானதும்கூட. இன்றைய உலகத்தில் தோன்றிய உயிர் இனங்கள் யாவும் இயற்கையின் பரிணாமமே. இவைகள் யாவும் இன்பத்தை உவப்பது இயல்பானதே. இந்த உயிர் இனங்கள் யாவற்றிலும் மனித வர்க்கமே மிகவும் மேம்பாடுடையதாக விளங்குவது கண்கூடு. இந்த மனித வர்க்கமானது எல்லா விழுமியங்களையும் பெற்று இன்பமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதையே உறுதிப் பாடாக கொண்டிருத்தல் அவசியமாகிறது. இப்படி ஒற்றுமையாகவும் மேன்மையாகவும் வாழ்வதற்கு அவற்றிற்கு முக்கியமாக வேண்டியதுதான் என்ன? சகல ஆளுமைக்கும் முன்னேற்றத்திற்கும் முதன்மையானது அன்பு ஒன்றுதான் என்றால் அது மிகையாகாது.

உயிர்களிடத்து இந்த அன்பை உணர வைத்தது யார்? அவற்றிடம் இந்த அன்பின் மகத்துவத்தை பரிமாறியது யார்? படைத்தவன் படி அளப்பான் என்பது முதுமொழி. படைத் தவனே படியையும் அளந்து விட்டான். இயற்கையின் தாபம் இறைமையுடன் அன்பையும் ஒருங்கே சேர்த்து வாரி வழங்கியது. இறைவன் அன்பே உருவானவன் அல்லவா? இதனையே மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனை "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்று போற்றிப் புகழ்ந்து பாடி மகிழ்ந்தார்.

மனித மனங்கள் மலர்ச்சியுற்று மனிதாபிமானத்துடன் வாழவேண்டுமானால் மாண்புமிகு அன்புடமை அவர்கள் மனங்களில் குடிகொள்ள வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பும் கருணையும் கொள்ள வேண்டும். தன்னைப்போல் பிறரையும் நேசிக்க வேண்டும். உண்மையே பேச வேண்டும். நன்மையே செய்ய வேண்டும். உள்ளன்போடு ஒற்றுமையாய் வாழ வேண்டும். பகைமை வளராது பார்த்துக்கொள்ள வேண்டும். இதனையே

"ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே
வேற்றுமையை வளர்ப்பதனாலே விளையும் தீமையே"

என்று பாடி வைத்தான் கவி அரசு கண்ணதாசன்.

எல்லோரிடமும் அன்பு கலந்த உள்ளத்தோடு ஒருவன் வாழ்ந்து வருவானாகில் அகில உலகமே அவனுக்குச் சொந்தமாகிவிடும். தான்மட்டும் வாழ்ந்தால் போதுமென்று காட்டு மிராண்டித்தனமாக யாவரும் வாழ நேர்ந்தால் உலகமே காடாகத்தான் காட்சியளிக்கும். இதனையே பொய்யாமொழிப் புலவர்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

என்று கூறிச் சென்றார்.

தனிப்பட்ட ஒருவன் கூட தன் குடும்பத்தை புறக்கணித்து மனைவி மக்களை நேசிக்காமல் அன்பு பாராட்டாமல் மிலேச்சத்தனமாக வாழ்வானாகில் அவன் குடும்பம் என்னாகும். மிகவும்

சீரழிவையே சந்திக்க நேரிடும். ஏற்றமிகு சமுதாயத்தில் எழுச்சியுடன் வாழ அவனால் முடியுமா? ஒரு மரமானது வேரூன்றி தளைத்து விழுதுவிட்டு கிளை பரப்பி பெரும் விருட்சமாக செழித் தோங்க நீராகாரம் எத்தனை அவசியமாகின்றதோ அதுபோலவே ஒரு குடும்பமானது எல்லாச் சிறப்புக்களையும் வென்றெடுத்து சிறந்த விருட்சம்போல் வளர்ந்து ஓங்க அன்பு என்னும் நீராகாரம் அவசியம் தேவையாகிறது. இதனை வள்ளுவப் பெருமானும் அன்பின் அவசியத்தை அகிலத்திற்கு உணர்த்தவே,

*"அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது"*

என்று அருளிச் செய்தார்.

சமுதாயமோ சமூகமோ நாடுகளோ கூட அன்பின் அடிச்சுவட்டைக்கூட புரிந்து கொள்ளாமல் இன மத மொழி ரீதியாகவும் நான், எனது, எங்களது என்ற பெரு வேட்கை யாலும் ஆணவம், அதிகாரம், அகம்பாவம், தலைதூக்கி, போட்டி பொறாமைக்கு உற்பட்டு அகிலமே அனற்பிளம்பாக ஆட்டம் காணு வதை எம்மால் அவதானிக்க முடிகிறது. ஏகாதிபத்திய ஆட்சிப்பீட அரசுகளினால் உலகிலேற்பட்ட இன்னல்கள் இழப்புக்களை கடந்த கால வரலாறுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றதைக் காண்கின்றோம். அன்பென்னும் கயிற்றினால் அனைவரும் பின்னிப் பிணைந்து வாழ்ந்தால் உலக நாடுகளில் இத்துணை எண் ணற்ற அவலங்கள் அநியாயங்கள் தோன்றி இருக்குமா? அன்பினால் எதையும் வென்றெடுக் கலாம். அன்பினால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.

ஒன்றே குலம். ஒருவனே தேவன் எல்லோரும் இந்நாட்டு மக்களே. நாமும் சுதந் திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்று கூறி, குதிரையில்லை, யானை இல்லை, கொல் லும் ஆசையில்லையே, கத்தியின்றி, ரத்த மின்றி யுத்தமொன்று வருது. என்று பறைசாற்றி அகிம்சைப் போராட்டம் நடாத்தி அன்னியரின் அதிகாரத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த பாரத தேசத்திற்கு வீர சுதந்திரம் வேண்டிக்கொடுத்த கருணாமூர்த்தி காருண்ணிய சீலன் அண்ணல் காந்தி அடிகளின் அன்புடைமை எத்தகையது. இவை எல்லாம் அன்பு என்னும் ஆயுதத்தின் விமோசனமும் வெளிப்பாடுமல்லவா?

ஒருவர் உங்கள்மீது வசை பாடுகின் றார் என வைத்துக்கொள்ளுங்கள். தன் குறையை தக்கவைத்துக்கொண்டு தகாத வார்த்தைகளால் அன்பின் பெருமையை அறி யாது உங்களை வைதுரைக்கின்றார். நீங்கள் என்ன செய்வீரகள். என்ன செய்ய வேண்டும். புன்முறுவல் செய்யுங்கள். பொறுமைக்கு சிறிது வேலை கொடுங்கள். பேச மறந்து சிலையாக நின்று விடுங்கள். அதுவே தெய் வத்தின் சன்னிதியாகி விடுகிறது. இதனால் நடப்பது என்ன? சில வேளைகளில் உங்களை வெறுத்துரைத்தவரே வாயார மனமார உங் களைப் புகழ்ந்து ஏற்றித் தொழுது வாழ்த்த வும் சந்தர்ப்பம் கிடைத்து விடுகிறது. இதெல் லாம் அந்த ஆருயிரென போற்றப்படுபவருடன் ஒன்றாக விளங்கும் அன்பின் மகிமையல்லவா?

நண்பன் ஒருவர் நோய்வாய்ப்பட்டு மருந்தகத்தில் சிகிச்சைபெற்று வருகின்றார். நாம் அங்கு அவரைப் பார்த்துவரச் செல் கின்றோம். அப்பொழுது அவர் நோயின் தாக் கத்தினால் இளைத்து, மனம் நொந்து, மிகவும் வேதனையோடு காணப்படுகிறார். நாம் அவரை அணுகி அனுதாபத்துடன் அளவளாவி

*உழைப்பில் பலர் பங்கெடுத்துக்கொண்டால் வேலை எளிதாகிவிடும்.*

அன்புடன் பேசுகின்றோம். அவரும் எமது ஆறுதல் வார்த்தைகளாலும் அனுதாபத்தாலும் நோயின் தாக்கத்தைப் பொருட்படுத்தாமல் அமைதியுடன் அகம் மகிழ்ந்து எம்முடன் கலந்து பேசுகிறார். இதனால் அங்கு நிகழும் பெறுபேற்றை நோக்கும்போது "மருந்தாலும் தீரா நோய் தீரலாம்" என்று கவிஞன் பாடிய பாடலே நினைவில் நின்றாடுகின்றது. இயல் பான மன எழுச்சியே மருந்திலும் மேலாக அமையப்பெறுகிறது. இது அன்புக்கு கிடைத்த வெற்றியல்லவா?

இறை வழிபாட்டுக் காலங்களில் அசைவ உணவை மறுத்து சைவ உண வையே உட்கொள்வது எமது சைவ சமயத் தவரின் வழக்கமாக இருந்து வருகிறது. இறை வழிபாட்டிற்கு ஆலயம் சென்றாலும் சரி நோன்பு இருந்தாலும் சரி அதற்கு முதல்நாளே அசைவ உணவை மறுத்து சைவ உண வையே உட்கொண்டு உடலைத் தூய்மை யாக வைத்திருப்பது சைவ மக்களது வழக் கம். இப்படி இருக்கும்போது தினமும் இறை வனுக்கு பூசகர் புரிந்துவந்த சைவப் பதார்த்த நைவேத்திய பூசையைக் குழப்பி சிதறடித்த கண்ணப்ப நாயனார் இறைவன்மீது கொண்ட அன்புப் பெருக்கினால் மாமிசத்தையே நைவேத் தியமாகப் படைத்தார். இதனால் அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொண்ட பூசகரின் கனவில் தோன்றிய இறைவன் கண்ணப்ப நாயனாரின் அன்பின் பெருக்கை காண்பிப்பதற்கு அழைத்த போது தன் கண்ணில் ஒன்றை ஊனமாக் கினார். இதனைக் கண்ணுற்ற கண்ணப்பனார் தன் கண் ஒன்றைத் தோண்டி எடுத்து ஊன முற்ற இறைவனின் கண்ணில் வைத்தார். பூச கர் திகைத்தார். இறைவன்மீது கண்ணப்பனார் வைத்த அன்பின் பற்றுறுதியை எண்ணி வியந்தார். இத்துடன் அன்பின் ஊற்று அடை பட்டு விட்டதா? இல்லை. இல்லவே இல்லை. அன்புக்கு எல்லையே இல்லை. அதை அடைப் பதற்கு தாழ்களே இல்லை என்பதை கண்ணப் பர் மூலம் உலகிற்கு உணர்த்தி வைப்பதற்கு இறைவன் மற்றக் கண்ணையும் ஊனமாக்கி இரத்தம் வடிய வைத்தார். இதனையும் கண்டு குதூகலம் கொண்டு கூத்தாடிய கண்ணப்பர் தனது மறு கண்ணையும் அம்பினால் பெயர்த் தெடுத்து ஈசனின் மறு கண்ணில் பொருத்தி செப்பனிடுவதற்கு அம்பை எடுத்தார். உடனே கருணையே உருவான காருண்ணிய மூர்த்தி ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெரும் ஜோதியாகிய இறைவன் "கண்ணப்ப பொறு கண்ணப்ப பொறு" என்று இரு கரங்களால் பற்றித் தடுத்து அருள் பொழிந்ததுடன் இழந்த கண்களையும் கிடைக்கச் செய்தார். அன்பிற் கும் உண்டோ அடைக்கும் தாழ் என்ற வினா வுக்கு விடையாக கண்ணப்ப நாயனாரின் பேரன்பை உலகறியச் செய்தான் இறைவன்.

தெய்வத்தின் அருளைப்பெற எத்தனையோ விதமான சாதனைகளைச் செய்கிறீர்கள். எத்தனை விதமான சாதனைகள் செய்தாலும் சித்தி, சுத்தி என்கிற இதயத் தூய்மை இல்லை எனில் அனைத்தும் வீண்! ஆகையால் முதலில் இதயம் தூய்மையாக இறைநாமத்தை உச்சரிப்பது அவசியம். இந்த உச்சரிப்பினை இதயபூர்வமாகச் செய்யவேண்டும்.

*அமைதிக்காகவே வியர்வை சிந்தினால், போரில் ரத்தம் சிந்த வேண்டாம்.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (பத்தொன்பதாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## நான்மாடக் கூடலான படலம்

வருணன், தன் செய்கை இழுக்கடைந் தமையால் நாணங்கொண்டு, இரண்டு கண்களுஞ் சிவப்பக், கோபாக்கினி பற்றச், சரீரம் வெம்பிச், சமுத்திரங்களும் நதிகளும் வெந்து வற்ற வெகுண்டு நின்று, சிவபெருமானுடைய திருவிளையாடலைத் தெளியானாகி, ஏழு மேகங்களையும் அழைத்து, "நீங்கள் சமுத்திரங்கள் எல்லாவற்றையுங் குடித்தெழுந்து, இடித்துப் பெய்து, மதுரை நகரம் முழுவதையும் விரைவில் அழித்துவிடக் கடவீர்கள்" என்று பணித்தான்.

உடனே மேகங்களேழும் புகுந்து, பூமி தெரியும் வண்ணஞ் சமுத்திரம் முற்றையுங் குடித்து, உடம்பு கருகி, மின்னின; திக்குகளும் ஆகாயமுஞ் செவிடுபடப், பூமியும் பிலமும் பிளக்க, அட்டகுல பருவதங்களும் வெடிபட, மகா மேருமலை சாய, ஊழிக் காலத்தில் வெடிக்கும் அண்டகடாகத்தின் ஒலிபோல முழங்கின; ஆதிசேடன் தன் படங்களிலுள்ள இரத்தினங்களைச் சிந்தி, உடம்பு நெளிய, அட்ட திக்கயங்களுந் தங்கள் நிலைகெட்டு நடுநடுங்க, இடியிடித்தன; சாம்பர்ப் பூசணிக்காய் போல ஆலங்கட்டிகளைச் சிந்தின; திரண்ட பளிங்குத் தூண்கள்போலத் தாரைகளைச் சொரிந்தன; ஆகாயமும் பூமியுந் திக்குகளுந் தெரியாவண்ணம் பரந்து இருள் சூழ்ந்தது. அவை மதுரைத் திருநகரத்தைச் சூழ்ந்து இவ்வாறு பெய்தலும், அபிடேக பாண்டியனும் பிரசைகளும், "உலக மழியு நாள் இதுவே!" என்று மயங்கி வாடினார்கள். பாண்டியன், "சிவபெருமானே இன்னமுங் காத்தருள்வார்" என்று தெளிந்து, விரைந்து, திருக்கோயிலிலே புகுந்து, சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிக்கீழ் வீழ்ந்து, "எம் பெருமானே! அடியேங்களைக் காத்தருளுக!" என்று விண்ணப்பஞ் செய்தான். செய்தலும், சோமசுந்தரக் கடவுள் முன்போலவே தமது திருச்சடையிலுள்ள நான்கு மேகங்களையும் நோக்கி, "நீங்கள் இம் மதுரை நகரத்தின் நான்கெல்லைகளையுஞ் சூழ்ந்து, நான்கு மாடங்களாகி, ஏழு மேகங்களையும் விலக்குங்கள்" என்று பணித்தருளினார். உடனே அம் மேகங்கள் நான்கும், நான்கு மாடங்களாகி, வளைந்து நான்கு திக்குகளையுஞ் சூழ்ந்து, சந்துவாய் தெரியா வண்ணம் ஒன்றி, ஒரு குடிலாகி, மாடங்களுங் கோபுரங்களுஞ் செய்குன்றுகளுங் கால்கள் போலத் தாங்கத், தாங்கள் மதுரை நகரமுழுவதையும் மூடிக்கொண்டன. அந்த நான்கு மாடங்களுள்ளும் நகரத்தார்களும் மந்திரிமார்களும் பாண்டியனும் அவன் சேனைகளும் இயங்கியற் பொருள் நிலையிற் பொருள்களாகிய பிறவற்றோடு தாழ்ந்து, முன்னையினும் இன்பத்துள் மூழ்கிக் கொண்டிருந்தார்கள். சப்த மேகங்களும், தாங்கள் சமுத்திரம் வறப்பப் பருகிப் பருகி, அம் மாடங்கண் மேலே பெய்யுந் துளிகளெல்லாம் மலைகளிற் பெய்யுந் துளிகள்போல் உடைந்து துள்ளப் பெய்து பெய்து, தங்கள் உடல் வறப்பக் கண்டு, வெட்கி நின்றன. அது கண்ட வருணனும் வெட்கி நின்றான்.

*நற்குணம் உள்ள இடத்தில் வணக்கமும் இன்சொல்லும் இருக்கும்.*

வருணன் நடுநடுங்கி, மிக்க அச்சமும் நாணமும் மேலிட, மானம் ஒடுங்க, உள்ளத்துள்ளே ஒரு மகிழ்ச்சி வந்தெய்தப், பொற்றாமரை வாவிக் கரையை அடைந்தான். அடையுமுன், அவனுடைய வயிற்று நோய் நீங்கிற்று. பின்பு அதிலே ஸ்நானஞ் செய்து கொண்டு, சோமசுந்தரக் கடவுளைப் பூசிக்கக் கருதி, விபூதியும் உருத்திராட்சமுந் தரித்துக், கங்கை முதலிய மகளிர்கள் பொற்கும்பங் களிலே நறுமணங் கலந்த திருமஞ்சனங் கொண்டுவந்து நீட்டக், கற்பகதரு மலர்களையுஞ் சந்தனத்தையுஞ் சுகந்த வர்க்கங்களையும் இரத்தினாபரணங்களையும் பொற் பரிவட்டங்களையும் இவை போல்வன பிறவற்றையும் ஈன்று விடுப்பக், காமதேனு பஞ்சபலத்தையும் பஞ்ச கவ்வியத்தையுந் திருவமுதையுந் தூபத்தையுந் தீபத்தையுங் கொடுக்கப்பெற்றுச், சோமசுந்தரக் கடவுளை விதிப்படி பூசித்துச், சகச்சிரநாமஞ் சொல்லி, முத்துக்களைச் சாத்திப் பிரதஷிணஞ் செய்து, நமஸ்கரித்து, எழுந்து நின்றான்.

சிவபெருமான் திருவுள மகிழ்ந்து, "வருணனே! நீ விரும்பியது யாது; சொல்" என்று பணித்தருளினார். வருணன் விரைந்து தாழ்ந்து, "எம்பெருமானே! தமியேன் ஒன்றினாலும் நீங்காத வயிற்று நோய், உமது பொற்றாமரை வாவியின் கண்ணே ஸ்நானஞ் செய்து, இப்பொழுதே நீங்கப் பெற்றேன், வேதம் முதலிய நூல்களுக்கும், பிரத்தியட்சம், அனுமானம் முதலிய பிரமாணங்களுக்கும், பிரமன் முதலிய தேவர்கள் செய்யுஞ் சோதனைகளுக்கும் அகப்படாத பரஞ்சோதியே! ஐயா! உம்மைச் சோதிக்கத் துணிந்தேனே! அறிவிலாதேனிடத்து யாது குணங் கண்டு என் பிணியைத் தீர்த்து யாது பயன் பெற்றீர்? குற்றமே குணமாகக் கொள்வது உமது குணமோ? எம்பெருமானே! இந்திரன் காலந்தாழ்த்து உம்மைப் பூசித்து அயர்ச்சியோடு மீண்டதும், இ∴தென்னை என்று தமியேன் வினாவியதும், இந்திரன் அதற்கு விடை தந்ததும், அவ் விடைக்குப் பின் தமியேன் வினாவியதும், அவன் சொல்லியபடியே தமியேன் உம்மைச் சோதித்ததும், எம்பெருமானே! உமது திருவருளினாலே தமியேனுடைய பிணிக்கு மருந்தாய் முடிந்தன. பெருங்கருணைக் கடலே! தமியேனுடைய உடற்பிணியாகிய வயிற்று நோயன்றி உயிர்ப் பிணியாகிய மலமாயாகர்மங்களும் நீங்க, முத்திநெறியையும் பெற்றுக்கொண்டேன். இனி தமியேனுக்கு மணியும் மந்திரமும் மருந்தும் வேறு யாவையுள? மெய்மையாக விசுவாசிப் போருக்கு இப் பொற்றாமரை வாவியே பிணி யனைத்தையுந் தீர்ப்பதன்றோ! அடியேன் முன் செய்த அபராதமிரண்டையும் பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்து, பலமுறை துதித்து வணங்கிச், சில வரங்களைப் பெற்றுக்கொண்டு, தன் நகரத்தை அடைந்தான்.

வருணன் விடுத்த மேகங்களை விலக்கும் பொருட்டுச் சிவபெருமானது சடையினின்று நீங்கிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய்க் கூடுதலினாலே, அம் மதுரை நகரம் நான்மாடக் கூடல் எனப் பெயர் பெற்றது.

## (இருபதாவது)
## எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்

அபிடேக பாண்டியனுக்கும் பாண்டி நாட்டார்களுக்கும் போகமோஷங்களைக் கொடுக்கத் திருவுளங் கொண்டு, சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்த வடிவங் கொண்டருள்வாராயினார். வட்டமாகிய குஞ்சிச்சடையும், விபூதி தரித்த திருநெற்றியும், படிககுண்டலந் தரித்த திருச்செவியும்,

*கடினமான உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமன்.*

படிகமாலை தரித்த திருமிடறும், பூணூல் அணிந்த திருமார்பும், விபூதிப் பொக்கணந் தூக்கிய வலத்தோளும், யோகபட்டந் தரித்த இடத்தோளும், கட்டுவாங்கத்தையும் இடை யிடையே பொன் கட்டிய பிரம்பையும் தரித்த திருக்கைகளும், புலித்தோலரைஞாணும், புலித்தோற் கௌபீனமும், புலித்தோலுடையும், உதர பந்தனமும், கிங்கிணியுஞ் சிலம்பையுந் தரித்துப் பாதுகை மாட்டப்பெற்ற திருவடி களும், திருப் புன்முறுவலோடு குறுவேர்வை அரும்புந் திருமுகமும் உடையராகிக், கடை வீதி தெரு, நாற்சந்தி, சூளிகை, உபரிகை, மாளிகை முதலிய இடந்தோறுஞ் செல்வா ராயினார். தெற்கேயிருப்பவர் போல; வடக்கே போயிருப்பார்; கிழக்கே இருப்பவர்போல மேற்கே போயிருப்பார்; யாவருந் தேடிக் காணா வண் ணம் மறைவார்; அதி தூரத்துள்ள பருவதத்தை அதி சமீபத்தில் வருவிப்பார்; அதி சமீபத் துள்ள பருவதத்தை அதி தூரத்திலே போக்கு வார்; முதியோரை இளையோரும் இளை யோரை முதியோருமாக்குவார்; ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணுமாக்குவார்; மலடியைப் பிள்ளை பெறுவிப்பார்; கூன் செவிடு ஊமை குருடு முடங்களைத் தீர்ப்பார்; வெள்ளி செம்பு இரும்பு ஈயம் என்னும் நான்கு உலோகங்களையும் பொன்னாக்குவார்; செல் வர் வீட்டுப் பொருளெல்லாம் வறியவர் வீட்டில் எய்துவிப்பார்; ஒருவரோடொருவர் சினேகிதரா யுள்ளவர் தம்முள்ளே பகைத்துப் போர் செய் யப் பண்ணுவார்; எட்டிமரத்திலே நறுங்கனிகள் பழுக்கச் செய்வார்; நீர் வாராக் காலத்தில் வைகையாற்றிலே நீர் வருவித்து, மீள வற்றச் செய்வார்; ஓடை பொய்கைகளில் உள்ள நன்னீரை உவர் நீரும், கடலிலுள்ள உவர் நீரை நன்னீருமாக்குவார்; மாத்திரைக் கோலை ஆகாயத்திலே வீசி நிறுவி, அதன்மேல் ஊசியை நாட்டி, அதன்மேற் கால் பெருவிரலையூன்றி ஆடுவார்; அவ்வூசிமேலே தலையும் ஆகாயத் திலே திருவடிகளுமாகச் சுழல்வார்; ஆகாயத் திலே கருடனைப்போலப் பறந்து, மேகத்தைப் பிடித்து இடியோடு நீரைப் பிழிந்து காட்டி, மீண்டும் ஆகாயத்தில் விடுப்பார்; இரவிலே தோன்றும் பொருளைப் பகலிலும், பகலிலே தோன்றும் பொருளை இரவிலும் காட்டுவார்; அக்கினித் தம்பஞ் சலத்தம்பம் வாயுத்தம்பஞ் செய்வார்; பிரம்பினாலே தடவிக் கிழவர் களைக் குமாரர்களுங் கிழவிகளை மங்கையர் களுமாக்கிக், கருப்ப முண்டாக விபூதி கொடுப் பார்; வசியம் முதலிய அட்ட கருமங்களைச் செய்வார்; கல்வியில்லாதவருக்கு நாக்கிலே விபூதியைச் சிதறி, எல்லா நூல்களும் விளங் கச் செய்வார்; மிருகங்களுள்ளும் பறவை களுள்ளும் மரங்களுள்ளும் ஒன்றை மற் றொன்றாக்குவார்; பாதாளத்துஞ் சுவர்க்கத்து முள்ள பொருள்களனைத்தையும் மதுரை யிலே காட்டுவார்.

மதுரை நகரத்தார் யாவரும், சித்த வடிவங்கொண்ட சோமசுந்தரக் கடவுள் இவ் வாறே செய்தருளிய திருவிளையாடலிலே சென்ற தத்தங் கண்ணையும் மனத்தையும் திருப்பிக் கொள்ளமாட்டாது, திகைத்துத் தத்தஞ் செய் தொழிலை மறந்திருந்தனர், இந்நிகழ்ச்சி யெல்லாம் அபிடேக பாண்டியன், ஏவலாள ரால் அறிந்து, சித்த சுவாமியைத் தன்னிடத்து அழைத்துக்கொண்டு வரும் பொருட்டுச் சிலரை விடுத்தான். அவர்கள் சென்று, சித்த சுவாமியை அடுத்துத், தாங்களும் அவருடைய திருவிளை யாடலைப் பார்த்து, வியந்து கொண்டிருந்தார் கள். பின்பு பாண்டியன் மந்திரிமார்களை விடுத் தான். மந்திரிமார்கள் சித்த சுவாமியையடைந்து, வணங்கி, அரசன் முன் எழுந்தருளும் பொருட் டுப் பிரார்த்தித்தார்கள். அதற்குச் சித்த சுவாமி, "எமக்கு அரசனால் எய்தும் பயன் யாது?" என்று மறுத்துவிட, மந்திரிமார்கள் தொழுது

*உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர் வெற்றி எதையும் சாதிக்க முடியாது.*

மீண்டு, சித்த சுவாமி மறுத்தமையை அரசனுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள் அரசன், "சர்வலோக நாயகராகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று இம்மை மறுமையின்பங்களை வெறுத்த யோகிகள், இந்திரன் பிரமன் விட்டுணு முதலாயினோரையும் மதியாரே! இப்பூமியை ஆளும் அரசரையா மதிப்பார்?" என்று சொல்லிக் கொண்டிருந்தனன்.

## மௌனத்தின் மருத்துவப் பலன்கள்

மௌனம் உங்கள் ஆரோக்கியத்திற்கு நன்மை விளைவிக்கும் என்பதை அறிவியல் விளக்குகிறது. அதிகமான ஒலி, குறிப்பாக 30 டெசிபெல் அளவுக்கு அதிகமானவை உயர் ரத்த அழுத்தம், மன இறுக்கம், பரபரப்பு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டது. பலரும் படுக்கையை விட்டு எழுந்ததும் குளித்து, காப்பி அருந்தி, செய்தித்தாள்களைப் படித்து அன்றைய தினத்திற்கான பரபரப்பான வாழ்க்கை முறைகளில் ஈடுபடத் தொடங்குகின்றனர். இப்படிப்பட்ட வாழ்க்கை முறையில் மௌனம் உங்களது ரத்த அழுத்தத்தைக் குறைத்து வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சிறந்த வழியில் கையாள வழியமைத்துத் தருகிறது.

மௌனம் உங்கள் "போனை ரீசார்ஜ்" செய்வதற்கு ஒப்பானது. ஆம், உங்கள் மனதிற்கும் "ரீசார்ஜ்" தேவைப்படுகிறது. அது உறக்க நிலையைக் காட்டிலும் மௌன நிலையில் அதிகம் "ரீசார்ஜ்" ஆகிறது.

புறத்திலோ அகத்திலோ எதுவாயினும் மௌனம் முக்கியமானது. சில தருணங்களில் புற ஒலியைவிட, அகத்தில் காணப்படும் சளசளவென்ற எண்ண ஓட்டங்களின் ஒலி அதிகமாகக் காணப்படும். உடனே மனக் கதவுகளை மூடுங்கள். பலமுறை ஆழ்ந்த சுவாசம் செய்யுங்கள். ஓரிடத்தில் அமர்ந்து உங்கள் மனத்தைக் கவனியுங்கள். சள சள ஒலி குறைவதைக் காணுங்கள்.

கண் மண் தெரியாமல் தலை தெறிக்க ஓடிக்கொண்டுள்ள நிலையின் இடையிலும், மௌனம் உங்களை உள் மனதினூடே காண உதவுகிறது. குறிப்பாக நீங்கள் மிகவும் பரபரப்பான "பிஸி" ஆசாமி எனில், சில தருணங்களில் உங்களையும்மீறி அதிகமாகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக உங்களுக்குத் தோன்றும். அக்கணங்களில் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப மௌனம் உதவும்.

மௌனம் உங்களது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இதன்மூலம் உடலினுள் படையெடுக்கும் நுண்ணுயிரி மற்றும் கிருமிகளை எதிர்த்துப் போராட உடலுக்குச் சக்தி அதிகரிக்கிறது.

மௌனம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். மௌனமான நேரங்கள் உங்கள் மூளையின் ரசாயனங்களை ஊக்குவிக்கின்றன. அதனுடைய மிகச் சிறந்த பக்க விளைவாக உங்களால் சிறந்த அளவில் மனத்தைக் குவிக்க முடியும்.

மௌனம் உங்களை மேலும் இளமையாகத் தோற்றமளித்து, சுறுசுறுப்பாக்க வழிகோலுகிறது. அத்துடன் அதிக சக்தியையும் பெறுகிறீர்கள்.

மௌனம் பரபரப்பைக் குறைக்கிறது. இரத்த கார்டிஸோல் மற்றும் அட்ரினலின் அளவுகளானது உலகிலேயே அதிக அளவிலான மரணத்திற்குக் காரணமாக உள்ளது. உங்கள் தினசரி வாழ்வில் 30 நிமிடநேரம் மௌனத்தில் செலவிடுவது உங்களது வாழ்க்கையையே மாற்றி அமைத்துவிடும்.

உடலில் சிறந்த அளவில் ஹார்மோன்கள் உற்பத்தியாவதும், வெவ்வேறு ஹார்மோன் சுரப்பிகளுக்கு இடையிலான தொடர்பு முறைகள் நன்கு அமையவும் மௌனம் வழிவகுக்கிறது.

இரத்த நாளங்களில் கட்டிகள் ஏற்படுவதைத் தடுத்து, இதய நோய்கள் மற்றும் பக்கவாதம் எனப்படும் உடலில் செயற்படாத தன்மைகளையும் தடுக்கும் தன்மை மௌனத்திற்கு உண்டு.

மௌனம் வலியைக் குறைக்கிறது. மேலும் உங்களது மூளையின் செயற்பாட்டை ஒருங்கிணைக்கிறது. இதன்மூலம் உங்களால் உங்கள் மூளையை அதிக அளவில் பயன்படுத்தி, உயர்ந்த அளவில் ஞாபக சக்தியை அதிகரிக்க இயலும்.

*உழைப்பு இல்லாமல் வெற்றி கிடைக்காது.*

# உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

பண்பாடு, கலாசாரம், நாகரிகம் போன்ற பதங்களை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். இவர்களுக்குப் பண்பாடாக நடந்து கொள்ளத் தெரியவில்லையே! இவர்களைப் பார்த்தால் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளைப்போல் இருக்கிறார்களே! ஒரு சபையிலே, பலர் முன்னிலையில், இப்படியா உண்பது; இப்படியா பேசுவது; இப்படியா வெடிச் சிரிப்புச் சிரிப்பது; பெரியவர்கள், மூத்தவர்கள் இருக்கும்போது அடக்க ஒடுக்கமில்லாமல் இப்படியா மட்டு மரியாதையில்லாமல் நடந்துகொள்வது? எங்கே என்ன செய்யலாம்; என்ன என்ன செய்யக் கூடாது; யார் யாருடன் என்ன மாதிரிப் பேச வேண்டும்; யார் யார், என்ன என்ன உடைகளை அணியவேண்டும் போன்ற சாதாரண விடயங்களைக்கூட இக்காலத்தவர் தெரிந்து கொள்கிறார்கள் இல்லையே! இவர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று தான் தோன்றித் தனமாக நடந்துகொள்கிறார்களே, என்று இங்கிதம் தெரிந்தவர்கள் கூறிக் கொள்கிறார்கள்.

இங்கிதம் தெரிந்தவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறோம். ஒரு சமூகத்தில் ஆண்டாண்டு காலமாகப் பாதுகாக்கப்பட்டுப், பின்பற்றப்பட்டு வருகின்ற வாழ்க்கை நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், கலாசார மரபுகள், பாரம்பரியங்கள், விழுமியங்கள் என்பவற்றையே நன்கு அறிந்து அவற்றைப் பின்பற்றி வாழ்ந்து வருபவர்களையே இங்கிதம் தெரிந்தவர்கள் என்கிறோம். வாழும் சமூகம் சீர்குலைந்து போகாமல்; அடிதலை மாறி அலையாமல், வாழுகின்ற முறையில் வாழ்வதற்கும்; சமூகத்தில் ஒழுங்கு, கட்டுக்கோப்பு, உறுதிப்பாடு பேணுதற்கும்; சமூகத்தவரிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, மனித நேய உறவு நிலைபெறுவதற்கும் மக்களுக்கு வழிகாட்டுபவர்களே இந்த இங்கிதம் தெரிந்தவர்கள். சமூகத்தில் மக்கள் யாபேரும் இதமாக, இன்பமாக வாழவேண்டி நிற்பவர்கள், இங்கிதம் தெரிந்தவர்கள். இவர்கள் இதமானவர்கள், பண்பாளர்கள், நன்னோக்குடையவர்கள், நன்றாகப் படித்தவர்கள், உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரண்டையும் அறிந்தவர்கள், உயர்ந்தவர்கள் ஆவர். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று" இது பண்டைத் தமிழரின் கண்டுபிடிப்பு. இத்தகைய உயர்ந்தவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்களோ, அவ்வாறு வாழ்பவர்களுக்கும்; அவர்கள் சொற்கேட்டு நடப்பவர்களுக்கும் வாழ்வில் ஒரு பொல்லாப்பும் நேராது. இத்தகைய உயர்ந்தவர்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதனாலேயே, உலகம் அழியாமல் காப்பாற்றப் பட்டு வருகிறது.

இன்று உயர்ந்தோர் காட்டும் நல்ல வழியில் செல்லாது, தவறான பாதைகளிற் செல்வோரைப் பார்த்து ஏன் அவ்வாறு செய்கிறீர்கள்; இது உங்களுக்கே நியாயமாகப் படுகிறதா, என்று கேட்டால், அதற்கு அவர்கள், "என்ன செய்வது, எல்லாம் பழக்க தோஷம்தான்" என்கிறார்கள். புகைத்தல், மது அருந்துதல், பொய் பேசுதல், புறங்கூறுதல், கோள் மூட்டுதல், வம்பு அளத்தல், சட்டங்களை முறித்தல் போன்ற தீய பழக்கங்களில் இருந்து விடுபடுதல் அத்துணை இலேசான காரியமல்ல என்கிறார்கள். இந்த மாதிரியான நொண்டிச் சாட்டுக்களைச் சொல்லித்

*உழைக்கும் மனிதனின் உறக்கம் இனிமையானது.*

தப்பித்துக்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடு கிறார்களே அல்லாமல், தாம் செய்வது தவறு, அதனால் எவ்வளவோ தீங்குகள் ஏற்படுகின் றன என்பதை உணர்ந்து அவர்கள் திருந்து கிறார்கள் இல்லை. அதுமட்டுமல்ல தாங்கள் செய்யும் தீய செயல்களை எண்ணி வெட்கப் படுவதோ, நாணமடைவதோ கிடையாது. மாறாக, தங்கள் தீய செயல்களை நியாயப் படுத்தவும் முனைகிறார்கள்.

உதாரணமாக, "இந்தக் காலத்தில் யார்தான் மது அருந்துவதில்லை. விருந்துப சாரங்கள், மற்றும் பெரும் பெரும் வைபவங் களிலெல்லாம், மது வகைகள் தாராளமாகப் பரிமாறப்படுகின்றனவே" என்று கூறி தாம் செய்வதை நியாயப்படுத்துவோர் தொகை இன்று அதிகரித்து வருகிறது. "ஒரு வைப வத்தில் எல்லோரும் மது அருந்தும்போது நான் மட்டும் அதனை அருந்தாமல் இருந்தால் அது எப்படி நாகரிகமாகும்". இது இன்னொரு விதமான நியாயப்படுத்தல் ஆகும். அத்துடன் எது நாகரிகம் என்பதற்கும் இது ஒரு புது விளக்கமாகவும் உள்ளது. "விபரீத புத்தி நாச காலம்" என்பார்கள். அதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும்.

"கெடுகுடி சொற்கேளாது; சாகிறவன் மருந்து குடியான்" என்பது மற்றொரு பழ மொழி. கெட்ட குணங்கள், கெட்ட பழக்கங் கள் என்பவற்றிற்கு அடிமையாகிவிட்டால், அவற்றிலிருந்து விடுபடுவது பெருஞ்சிரமம் ஆகும். அதனாலேயே, கெட்ட குணங்களை அரவணைத்துக் கொள்வதையும், கெட்ட பழக்கங்களைப் பழகிக் கொள்வதையும் தவிர்த் துக்கொள்ள வேண்டும் என்று நம் ஆன்றோர் கள் சொல்லி வைத்தார்கள். கெட்ட பழக்கங் கள் பொதுவாகக் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்வதால் ஏற்படு கின்றன. எனவேதான் "கூடாத கூட்டங்கள் கூடவேண்டாம்; கூடங்கள், மாடங்கள் ஏற வேண்டாம்" என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

மது குடிப்பழக்கம், புகைத்தல் பழக் கம் என்பவற்றைவிட, இன்றைய சந்ததி யினரை அதிகம் பீடித்திருப்பது, போதைப் பொருள் பாவனைப் பழக்கம். "இளமையிற் கல்" என்பார்கள். நல்ல கல்வியைத் தான் இளமையில் கற்க வேண்டும் என்பது அதன் பொருள். அதைவிட்டு, இன்று பலர் இளமை யில் போதைப் பொருள் பாவனையைக் கற் றுக் கொள்ளுகிறார்கள். அது மரணதேவனை மாலைபோட்டு வரவழைப்பதற்கு நிகராகும் என்பதை ஏனோ இவர்கள் அறிந்துகொள்ள மறுக்கிறார்கள் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது. இளமை, நல்ல வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தும் பருவம். சிறந்த கல்வியைக் கற்று, வாழ்க்கையின் புகுமுகம் ஆக அமைய வேண்டிய பருவம் இளமைப் பருவம், அத னைத் துஷ்பிரயோகம் செய்தால் பின்னர் வருந்த நேரிடும். போதைப் பொருளிலும், காம இச்சையிலும் நாட்டம் கொள்வோர், தங்கள் வாழ்க்கையைத் தாமே அழித்துக்கொள்வதென உறுதியெடுத்துக்கொண்டவர்கள் ஆகின்றனர். இவர்களுக்கு வேறு பகைவர்கள் தேவை இல்லை. தமக்குத் தாமே பகைவர் ஆகின்ற வாய்ப்பு இவர்களுக்குக் கிட்டுகிறது.

வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் என்பன வற்றை நழுவவிடுவதால் நன்மையும் உண்டு, தீமையும் ஏற்படுகின்றது. போதைப் பொருள் பாவனை, காம இச்சை என்பவற்றைப் பொறுத்த வரையில், கிடைக்கும் வாய்ப்புக்கள், சந்தர்ப் பங்களை நழுவவிடுவதே மேலான செயலாகும். அதுவே அறிவுடைமையும் விவேகமுமாகும்.

மனித மனம், தீயவற்றை நாடுவதைப் பழக்கமாக்கிக்கொள்ள அனுமதித்தலாகாது. மனம் பலவீனம் அடையும்போதே, மனிதன்

கெட்ட பழக்கங்களில் ஈடுபடுகின்றான். எனவே, மனத்தை உறுதியாகவும், வலிமையாகவும் வைத்திருத்தல் அவசியமாகும். "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று நம் முன்னோர்கள் கூறிவைத்த மகுட வாசகத்தை நாம் அடிக்கடி ஞாபகத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

கெட்ட பழக்கங்களுக்கு அடிமை யாதல் ஒரு மனநோய் என்றே கூறவேண்டும். "நோய்க்கு இடங்கொடேல்" என்று ஔவை யார் கூறிவைத்தது, உடல் நோய்க்கு மட்டு மன்று, மனநோய்க்குந்தான். மனநோயை வரவிடாமல் தவிர்ப்பதுதான் புத்திசாலித்தனம். மனநோயே உடல் நோய்க்கும் காரணமாகும்.

மனத்தில் மாசுக்கள், அழுக்குகள், அசுத்தங்கள் என்பவற்றைப் படியவிட்டால், காலப்போக்கில் மனநோய் ஏற்பட வழிவகுக் கும். பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, அகந்தை, மமதை என்பன மனங்களில் குடி கொண்டால் அங்கு தோன்றுகின்ற எண்ணங்கள், கெட்ட எண்ணங்களாகவே அமையும். இக் கெட்ட எண்ணங்கள், கெட்ட செயல்களுக்கு வழிவகுக்கின்றன. மனத்தில் மாசுக்கள் நிறைந் திருக்க அனுமதித்தால், மனநோய் ஏற்படத் தான் செய்யும். கெட்ட பழக்கங்களுக்கும் கெட்ட செயற்பாடுகளில் ஈடுபாடுகொள்ள மனி தர் தூண்டப்படுவதற்கும் மன அழுக்குகளே காரணமாகின்றன. பொறாமையால் உந்தப் பட்ட ஒருவன், தீய செயல்களில் இறங்கித் தனது பொறாமையை வெளிப்படுத்துகிறான். அவ்வாறே கோபம் பாவத்தில் முடியும் என்பார் கள். கோபங் கொள்பவன் இன்னாச் சொல் பேசுகின்றான்; அத்தோடு பாவ காரியங்களை யும் செய்கின்றான்.

ஆனால் மனத்தில் தூய்மை இருப் பின் சிந்தனைகள், எண்ணங்கள், உணர்வுகள் யாவுமே நல்லனவாயும், நன்மை பயப்பன வாயுமே அமையும். தூய எண்ணங்களில் இருந்து பிறக்கும் வாய்ச் சொற்கள், செயல் கள் யாவுமே நல்லனவாயும் எல்லோரையும் வாழ்விப்பனவாயும் அமையும்.

சிலர் தமது கவலைகளைப் பிறரிடம் கொட்டித் தீர்ப்பதையே பழக்கமாகக் கொண் டுள்ளனர். தமது கவலைகளைப் பிறரிடம் கூறுவதால் கவலையின் பழு குறையும் என் கின்றனர். ஆனால் அப்படிக் குறைவதாகத் தெரியவில்லை. காரணம், கவலைகளைப் பல தடவைகள் சொல்லச் சொல்ல அவை மீண்டும் மீண்டும் மீட்கப்படுகின்றன; நினைவில் ஆழப் பதிந்து விடுகின்றன. அதனால் கவ லையை விட்டொழிக்கமுடியாமல் பலர் திண் டாடுகின்றனர். உண்மையில் கவலையை ஒழிக்கவேண்டுமானால், கவலையை மறக்க முயற்சிக்க வேண்டும். பிறருக்கு அடிக்கடி விஸ்தாரமாகச் சொல்வதால், கவலைகள் மேலும் ஸ்திரப்படுமே தவிர, மறக்கப்பட மாட்டாது.

கவலைகள் மறப்பதற்காக என்று சொல்லிக்கொண்டு, வேறு தீய பழக்கங்களில், சிலர் ஈடுபட்டுக் கவலைகளை மட்டுமல்ல, தங்களையே மாய்த்துக்கொள்கிறார்கள். குடிப்பழக்கம், போதைப் பொருள் பழக்கம், புகைத்தல் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபடு பவர்களிடம், ஏன் இப்படி உங்களைக் கெடுத் துக் கொள்கிறீர்கள் என்று கேட்டால், உடனே அவர்கள், வீட்டுக் கவலைகள், குடும்பக் கவலைகள், வேலைத் தலத்தில் ஏற்படும் கவலைகள், பணக் கஷ்டங்களினால் ஏற்படும் கவலைகள் என்பவற்றில் ஒன்றையோ, சில வற்றையோ கூறி அவற்றிலிருந்து விடுபட்டுக் கொஞ்ச நேரமாவது ஆறுதல் பெறுவோம் என்றுதான் இப்பழக்கங்களைப் பழகினோம் என்பார்கள். மூட்டைப் பூச்சியை ஒழிப்பதற்கு வீட்டைக் கொழுத்தியவனின் கதை போலல்லவா

*கடுமையான உழைப்பைத் தவிர, வெற்றிக்கு ரகசியம் வேறு இல்லை.*

இருக்கிறது. பிரச்சினைகள், முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்க முடியாமல்; அவற்றைச் சுமுக மாகத் தீர்த்துக்கொள்ளும் வகையறியாமல், இவ்வாறு கெட்ட பழக்கங்களுக்கு அடிமை யாவது கோழைத்தனம் ஆகும். பகுத்தறிவு படைத்த மனிதனுக்கு இது அழகல்ல. மனி தன் தனது பகுத்தறிவைப் பயன்படுத்தி எது நல்லது? எது கெட்டது? எனப் பகுத்தறியும் பாங்கினைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம். பகுத்தறிவை அடகு வைத்தல், மனிதனுக்கு அடாத செயலாகும்.

## ஞானத்தைக் கற்றுத் தந்தவர்கள்

வெகு காலத்திற்கு முன் பேரரசன் ஒருவன் தன் நாட்டை நீதி நேர்மையுடன் ஆண்டு வந்தான். தன் நாட்டு மக்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால் எப்பொழுதும் கவலை அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. அடிக்கடி சினமும் கொண்டான். அவனுடைய நாட்டிற்குப் பெருந் துறவியான போத்யர் என்பவர் வருகை தந்தார். அவரைச் சிறப்பாக வரவேற்ற பேரரசன் அவரைப் பணிவாக வணங்கினான்.

"துறவியாரே! எனக்கொரு ஐயம். தாங்கள்தாம் அதற்கு விளக்கம் தந்து எனக்கு நல்வழி காட்டவேண்டும். தாங்கள் எப்படி எப்பொழுதும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர்கள்?" என்று கேட்டான். "அரசே! நான் பிறரிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றிருக்கிறேனே தவிர யாருக்கும் அறிவுரைகள் சொன்னது இல்லை. எனக்கு ஞானம் வழங்கிய குருநாதர்கள் அறுவரைப் பற்றிச் சொல்கிறேன் கேள்.

பிங்களை என்ற விலைமகள் இருந்தாள். பேராசை கொண்டிருந்த அவள் எப்பொழுதும் துன்பத்துடன் காட்சி அளித்தாள். திடீரென்று அவள் ஆசையை அடியோடு ஒழித்து எப்பொழுதும் மகிழ்ச்சி உடையவளானாள். இந்த இனிய மாற்றம் எப்படி ஏற்பட்டது என்று அவளைக் கேட்டேன். அதற்கு அவள் "அணில், பாம்பு, வண்டு, அம்பு எய்பவன், பெண் அணிந்திருந்த ஒற்றை வளையல் இந்த ஆறு பேரும் எனக்கு ஞானம் வழங்கினார்கள்" என்று விடை தந்தாள்.

அணில் ஒன்று வாயில் இறைச்சித் துண்டுடன் சென்று கொண்டிருந்தது. இறைச்சி கிடைக்காத மற்ற அணில்கள் அதைத் துரத்தித் துன்புறுத்தின. இறைச்சித் துண்டை அந்த அணில் விட்டுவிட்டது. மற்ற அணில்களால் எந்தத் தொல்லையுமின்றி மகிழ்ச்சியாக இருந்தது. ஆசை ஏதும் இல்லாமல் இருப்பதுதான் மகிழ்ச்சி என்று உணர்ந்துகொண்டேன்.

கரையான்கள் மிகவும் முனைந்து கட்டிய வீட்டில் கரையான்களை விரட்டிவிட்டுப் பாம்பு குடியிருப்பதைக் கண்டேன். குடியிருக்க வீடு கட்டுவது துன்பத்தைத்தான் தருகிறது. இன்பத்தை அல்ல என்று உணர்ந்து கொண்டேன்.

வண்டு எல்லா மரங்களிலிருந்தும் தேனை எடுப்பதுபோல அறிவுடையவன் எல்லோரிடமிருந்தும் ஞானத்தைப் பெறுவான்.

ஒருமுறை வேடன் ஒருவன் அம்பு பூட்டி ஒரு பறவைக்குக் குறி வைத்திருந்தான். தன் குறியிலேயே அவன் கவனமாக இருந்ததால் அருகிலேயே அரசன் வந்ததைக்கூட அவன் கவனிக்கவில்லை.

கையில் ஒரே ஒரு வளையலை மட்டும் அணிந்து ஒரு பெண் வேலை செய்துகொண்டிருந்தாள். அந்த வளையல் எந்த ஓசையையும் எழுப்பவில்லை. பலர் இருந்தால் கலகம். அதனால் எப்பொழுதும் தனிமையாக இருக்கப் பழகினேன் என்றாள் அவள்." இவ்வாறு விளக்கம் தந்தார் துறவி. ஒவ்வொன்றில் இருந்தும் நற்பண்புகளைக் கண்டறிந்து அதைக் கடைப்பிடித்து நாமும் உய்யலாம் என்று உணர்ந்தான் அரசன். துறவியை வணங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

*அளவற்ற உழைப்பே மேன்மை தரும்.*

# வழித்துணை 39

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 சுற்றத்தைக் கண்டிக்க கூர்மையோடு இருத்தல்போல்
சுற்றத்திற் குதவற்கும் சற்றேனும் சலிக்காதீர்
சற்றேனும் சலிக்காமல் சுற்றத்திற் குதவுதல்தான்
குற்றத்தைக் கண்டித்த குறையினையும் போக்கிடுமாம்.

02 களவொன்றை எடுக்கையிலே கள்ளனென்ற பேர்வராது
கண்டுஅதைப் பிடிக்கையில்தான் கள்வனென்ற பேர்கிடைக்கும்
கள்வனென்ற பேர்போக்கக் கலங்கிநாம் அழுவதிலும்
களவெதையும் செய்யாமல் இருந்திடலே நன்றாம்.

03 குற்றத்தைத் தான்புரிந்து கூடவுள்ளோர் தனில்சுமத்தி
பற்றுள்ள உறவுகளைப் பகைவர்களாய் ஆக்கிவிட்டு
நற்பெயரோ டிருக்கின்றோம் என்றெண்ணி நலிவதிலும்
குற்றத்தைத் தானேற்றும் நற்பெயரைக் காத்திடலாம்.

04 தனக்குச் சாதகமாய் நியாயத்தை வகுப்பவர்கள்
கனக்கின்ற மனத்தோடு காலத்தைக் கழித்திடுவர்
உனக்கென்றும் எனக்கென்றும் எண்ணாமல் எல்லோர்க்கும்
ஒன்றே நியாயமென்போர் கனவானாய்த் திகழ்ந்திடுவர்.

05 எனக்கிரங்கி வாவென்ற இறையோனை நாமழைத்தால்
தனக்கிருக்கும் வேலைவிட்டு அவன் எமக்கிரங்கி வரமாட்டான்
பிறர்க்கிரங்கி நாம்செய்யும் தியாகத்தைக் கண்டுவிட்டால்
தனக்கிரங்கினோம் நாமென்று அவன் எமக்கிரங்கி வந்தருள்வான்.

06 செயற்கைக்கோள் தன்னிலேறி இறைமுடியைத் தேடிக்காணார்
அணுவாற்றல் கொண்டிறைவன் அடிதேடி அதுவும் காணார்
பகுத்தறிவுப் பாதைசென்று அவர் உள்ளத்துள் தேடிப்பார்த்தால்
அணுவுக்குள் அணுவாயுள்ளே அவன்தோன்றும் காட்சிகாண்பார்.

*தூய மனச்சான்று உடையவர்கள்தான் நல்வாழ்வு பெறுவர்.*

07 கண்களைத்தானம் செய்தால் செய்தோற்கே பலனுண்டாம்
ரத்தத்தைத் தானம்செய்தால் செய்தோற்கே பலனுண்டாகும்
பால்பழம் இளநீர்கொடுத்தல் வெறும்பரிமாறும் பலனேயென்று
உமதன்புப் பக்திஈயும் உயர்பலன் உமக்கே உண்டாம்.

08 பூப்பறித்துக் கொடுப்பதனால் மரத்திற்கே பலன் அதிகம்
பால்கறந்து கொடுப்பதனால் பசுவிற்கே பலன் அதிகம்
இவைகளால் உமக்கு உள்ளதோ பகிர்ந்தபலன் மட்டுமென்று
அன்போடு பக்திகொள்ளும் முழுப்பலனும் உமக்கேயாகும்.

09 கேட்பது நியாயமென்றால் கடவுளார் கண்திறப்பார்
நியாயத்திற் கப்பால்நாம் கேட்பதற்காய்க் கண்திறவார்
கண்திறவாக் காரணத்தால் கண்கெட்ட கடவுளென்று
நெற்றிக்கண் அவர்திறக்க நாம்வழிவகுத்துக் கொடுக்கலாமோ.

10 கடவுளை வணங்குவது ஒருமுறையென்று எண்ணாதீர்
மானிடராய்ப் பிறந்தோரின் கட்டாய கடமையது
கடமையென்று எண்ணுபவர் இறையடியை அண்மிப்பர்
முறையென்று எண்ணுபவர் பலமுறை பிறந்துழல்வர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**


**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# இசையும் வசையும்

– முருகவேே பரமநாதன் அவர்கள் –

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைபீறிவருக்கை போழ்ந்து
தேமாங்கனிசிதறி வாழைப்பழங்கள் சிந்தும்
ஏமாங்கத மென்னும் இசையால் திசை போயதுவே.

-சீவகசிந்தாமணி.

வருக்கை- பலாப்பழம், தெங்கு- தென்னை, தொடை- தேன்கூடு, இசை- புகழ். ஏமாங்கத நாட்டின் இயற்கை வளத்தை எடுத்துப்பேசி- அதன் புகழ் எட்டுத் திசைகளிலும் பேசப்படுகிறது எனத் திருத்தக்கதேவர் கவி பண்ணியுள்ளார். இது ஒருவிதமான இசை. இதுவே புகழ், கீர்த்தி எனப்படும். இந்த இசைக்கு நேரெதிரான பொருள் தரும் பதம் வசை. இசை புகழ்ச்சி- வசை இகழ்ச்சி. எனவே இசையோடு வாழவேண்டும். வசையோடு வாழக் கூடாதென்பது வெளிப்படை. இந்தப் புகழையும், இகழையும் பாரதியார் தம் தாய்மொழிப் பெருமையிலே எடுத்துப் பேசுகிறார்.

எனக்குத் தெரிந்த புலவர்களிலே கம்பர், வள்ளுவர், இளங்கோவைப் போன்ற சிறந்த புலவர்களை உலகெங்கணும் தேடினாலும் காணமுடியாது. இஃது சத்தியம் வெறுமனே உபசாரத்துக்காகப் பேசவில்லை என்கிறார் பாரதி. இதை நமக்குத் தெளியவைக்க என்ன சொன்னார். உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்றார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

-பாரதியார் கவிதைகள் 22. தமிழ் 2.

இப்படியே யானறிந்த மொழிகளிலே உயர்தனிச் செம்மொழி. இந்தத் தன்னேரில்லாத் தமிழையெல்லாம் ஒதுக்கிவிட்டு வேற்றுமொழி மோகம் கொண்டு - தமிழை இகழ்கிறோம். இதைக் கண்டு நம்மை உலகமே இகழ்கிறதே. உங்கட்கு நாணம், வெட்கம், மானம் இல்லையா என்று கேட்கும் பாணியில் கேட்கிறார். இன்று புலம்மாறிய ஈழநாட்டுத் தமிழர்- தம் தாய்மொழியை வாய்மொழியாகவேனும் பேச வெட்கப்படுகிறார்களே. இங்கிலாந்தில், கனடாவில், அமெரிக்காவில், அவுஸ்திரேலியாவில் என்ன நடக்கிறது. மொழியாளுமையை இழந்து இனமுத்திரையையும் இழக்கிறார்கள். இவர்கள் பேசுவது ஆங்கிலம். பேணுவது தமிழ்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்

-மேலது 1.

இதை அன்றே தன் ஞான தீட்சண்யத்தாற் கண்டு வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ என்று பாடினார். ஏற்பது இகழ்ச்சி என்றார் பாட்டி. இந்த இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும், இம்மியளவும் மதிக்காதவர்கள் அறவோர், ஞானிகள், துறவோர் மற்றவர்களை வியக்கவும் மாட்டார், புகழவும் மாட்டார்.

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே.

-கணியன் பூங்குன்றன் புறம் 192 (யாதும் ஊரே).

புகழேந்திகளாய் வாழ விரும்புமளவுக்கு இகழ்ச்சியை ஒதுக்குவதாய் இல்லை. நாம் நம் வாழ்வில் நல்லனவற்றை முன்னெடுத்துச் சென்றால் புகழ் தானாக வந்தடையும். எனவேதான் வள்ளுவன் வசையொழிய வாழ்வாரே வாழ்வார் என்றார்.

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசை யொழிய
வாழ்வாரே வாழாதவர்.

-திருக்குறள் 240.

தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர்; புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர் என்பது இக்குறட்பாவின் பொருளாகும். எம் ஆளுமைகள் எல்லாம் இல்லாண்மையை மேம்படுத்துவதாய் அமைய வேண்டும்.

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

ஆண்மை- ஆளுந்தன்மை. -குறள் 1020.

இசையுடன் தொடர்புறும் பல வழக்காறுகள் சற்று வித்தியாசமான பொருளில் வழங்குவதை நாம் காண்கிறோம். தமிழிலே இயல், இசை, நாடகம் என முத்தமிழ் உண்டு. இந்த இசை சங்கீதத்தோடு தொடர்புடையது. ஒழுங்கான சுருதியமைவுடன் இன்னிசையாய்ப் பாடுவதுதான் இசைத்தமிழ். பண்ணிசை தேவாரத்துடன் தொடர்புடையது. இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று என்பர். இறைவன் இசை வடிவானவன். இதை நாயன்மார்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

எண்ணதனில் எழுத்தை ஏழி சையைக்காமன்
எழிலழிய எரியு மிழ்ந்த இமையா நெற்றிக்கண்ணனை

-6:60:3.

*மனிதனை பாவ காரியத்தில் இழுத்து விடுவது ஆசையும் கோபமும்தான்.*

ஏழுகொலாம் இசையாகினதாமே. -4:18:7.
ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதமுமாய்
-7:51.10.

ஏழிசைச் சுழல் புக்கோ
-திருக்கோவையார் 20.

தமிழோடிசை பாடல் மறந்தறியேன் என்பது அப்பர் வாக்கு. இசையென்பது புகழைக் குறிப்பதுபோல இனிய சங்கீதத்தையும் குறிக்கிறது.

இன்னிசை வீணையர் யாழினர் ஒர்பால்
இருக் கொடுதோத்திரம் இயம்பினர் ஒர்பால்.
-திருப்பள்ளியெழுச்சி 4. திருவாசகம்.

இசை என்பது புகழ் எனவும் கீர்த்தி எனவும், (இசைவு - பொருத்தம்) பொருள் படுவதைக் கண்டோம். சங்கீத இசை மிக உயர்ந்தது. ஒருவன் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதெல்லாம் அவரவர் கருமங்களை உரைத்துப் பார்ப்பதால் அறியலாம். பெற்றோர் செய்த புண்ணியம் பிள்ளைகளாலே வெளிப்படும்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். -114.

எச்சம்- நன்மக்கள், தக்கார்- நடுவுநிலைமை உடையவர். இந்தப் பிள்ளைகளின் உயர்வும், மேன்மையும்- நன்மக்கள் என்ற மதிப்பும் தாய் தந்தையரின் கணிப்புக்கு உபகாரியாய் அமைகின்றன. பிள்ளைகள் வந்து வாய்க்காவிட்டால் பெற்றோர் வாழ்நாள் முழுவதும் வருந்துவர். சான்றோர் என்கை ஈன்றோர்க்கழகு. இந்தப் பிள்ளைகள் படியாமற், குடித்து, வெறித்து கள்ளன்- காவடி- கயவர் என்று பெயர் எடுத்தால் எப்படி இருக்கும் பெற்றோர்க்கு. பிள்ளைகள் இல்லாதவர். பிரமச்சாரிகள், துறவோர், அறவோர், கல்விமான்களை எப்படிக் கணிப்பது- எது அவர்களை உயர்த்துகிறது என்றால் அவர்கள் விட்டுச் சென்ற புகழ்தான். இதை இசையென்னும் எச்சம் என்கிறார் வள்ளுவர். காந்தி, விநோபா, ரமணர், நேரு, வாஷிங்ரன், கார்ல்மார்க்ஸ், அன்னை திரேசா போன்ற பலர் விட்டுச் சென்ற புகழே அவர்களை உயர்த்துகிறது. இதைத் திருக்குறள் பல இடங்களிலே விதந்து சொல்கிறது.

எச்ச மென் றென் எண்ணுங் கொல்லோ ஒருவரான்
நச்சப் படாஅ தவன்.
-குறள் 1004.

பிறர்க்கு உதவியாக வாழாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பிறகு எஞ்சி நிற்பது என்று எதனை எண்ணுவானோ.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.
-குறள் 112.

நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம், அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

மனந்தூயார்க் கெச்சம் நன்றாகும் இனந்தூயார்க்கு
இல்லை நன்றாகா வினை. -குறள் 456.

மனந்தூய்மையாகப் பெற்றவர்க்கு, அவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியவை நன்மையாகும்; இனந்தூய்மையாக உள்ளவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை.

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசை யென்னும்
எச்சம் பெறாஅ விடின். -குறள் 238.

தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்வர்.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. -குறள் 59.

புகழை விரும்பிய இல்லானை இல்லாதார்க்கு தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கஏறு போல் நடக்கும் பெருமித நடை இல்லை. புகழ் எம்மைத் தேடி வரவேண்டும். நாம் புகழைத் தேடிப் போகக்கூடாது. பழியென்றால் உலகுடன் பெறினும் கொள்ளார் மேலோர். புகழ் எனின் உயிரைக் கொடுத்தும் அதைப் பெறுவர் தக்கோர் எனவே தனக்கென வாழாத பிறர்க்குரியராலேதான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது என்பதை உணர்ந்து எம் வாழ்வை மேற்கொள்வோமாக.

---

ஒரு ஊரிலே இரண்டு வியாபாரிகள் சேர்ந்து வியாபாரம் செய்து வந்தார்கள். இருவரும் மிகுந்த கடவுள் பக்தி உடையவர்கள். தங்களது வருமானத்தில் ஒரு பகுதியை தான தருமங்களுக்கும் செலவு செய்வார்கள். அன்றைக்கும் அடுத்த நகரத்தில் வியாபாரம் முடித்து இருவரும் தங்கள் தங்கள் ஒட்டகத்தையும் அழைத்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டனர். மலையடிவாரத்தை அடைந்தபோது வழிப்பறிக் கொள்ளையர்கள் குழுவொன்று அவர்களைத் துரத்த ஆரம்பித்தது. என்ன செய்வதென்று திகைத்த இருவரும் ஒட்டகங்களை விட்டுவிட்டு இறைவனை வேண்டிக்கொண்டு அருகிலிருந்த ஒரு சிறிய குகையினுள் சென்று ஒளிந்துகொண்டனர். கொள்ளையர்களும் நெருங்கி வருவது அவர்களின் காதுகளில் கேட்டது. ஒளிந்திருந்த வியாபாரிகளில் ஒருவன் "நாமோ இருவர், கையிலே பணம், அவர்களோ பலபேர்" என்று மெதுவாக மற்றவனுக்குக் கூறினான். அடுத்தவனோ "நாம் இருவரில்லை, மூவர்! நாம் இருவருடன் கடவுளும் இங்கே எம்மைக் காப்பாற்ற இருக்கிறார்" என்றான். என்ன அதிசயம்! குகையின் வாயிலில் இருந்த சிலந்தியொன்று திடீரென வேகமாக குகை வாயிலிலே குறுக்கும் மறுக்குமாக வலை பின்னியது. குகையை அண்மித்த கொள்ளையர்களில் ஒருவன் "இந்தக் குகைக்குள் அவர்கள் ஒளிந்திருக்கலாம்" என்றான். ஆனால் அவர்களின் தலைவனோ "அட மூடனே குகை வாயிலிலே சிலந்தி வலை இருக்கிறதே, அவர்கள் போவதென்றால் இப்போதானே போயிருக்கவேண்டும்" என்று கூறி அவ்விடத்தை விட்டு நகர்ந்தனர். வியாபாரிகள் சுகமாக வீடு சேர்ந்தனர்.

படங்களில் பார்ப்பது போலவும், கோயில்களில் காண்பது போலவும் நான்கு கரங்களுடன்தான் இறைவன் வருவான் என்று எண்ண வேண்டாம். மனதைச் சுத்தமாக வைத்து, முடிந்தளவு தான தருமங்களையும் செய்து வாருங்கள். எந்த உருவத்திலும் வந்து அவன் உங்களைக் காப்பாற்றுவான்.

*துயரம் வந்தால் அதைத் தொடர்ந்து வெற்றி வருமென எதிர்பார்ப்பவன் புத்திசாலி.*

# இலட்சுமி கடாட்சம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இலட்சுமி வாசம் செய்யுமிடத்தில் விளங்கும் பொலிவு, தெய்வீகம், அழகு, வளம் இத்தனையும் இலட்சுமி கடாட்சம் எனப்படும்.

பெண் இலட்சுமி கடாட்சமாக இருக்கின்றாள் என்றோ, இல்லம் இலட்சுமி கடாட்சமாக துலங்குகின்றது என்றோ சொல்லிக் கொள்கின்றோம். எங்கு செல்வத்துக்கு அதிபதியான இலட்சுமி மனமுவந்து வாசம் செய்கின்றாளோ அங்கு இலட்சுமீகரம் துலங்கும். அங்கு தூய்மையும், தெய்வீகமும், புனிதமும், பேரழகும், பொலிவும் அமைந்திருக்கும். நிறைந்திருக்கும்.

எந்த ஒரு வீடு, அழகாகக் கூட்டி, கழுவி, முன்றிலில் கோலமிட்டு, தீபமேற்றி, மலர்கள் பரவிக் காணப்படுகின்றதோ அந்த இடம் அவ்வழியே போவோர், வருவோரை நிச்சயம் தன்பால் ஈர்க்கும். காரணம் அங்கு இலட்சுமி வாசம் செய்ய வந்துவிடுவாள்.

நாம் எம்மை மாத்திரம் அழகுபடுத்தினால் போதாது. நாம் வாழும் இல்லத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக அழகுபடுத்தி ஆசாரமாக வைத்திருத்தல் மிக அவசியம். தூய்மையான இடங்கள் தேவர்களால் ஆசீர்வதிக்கப்படுகின்றன.

இலட்சுமி திருமகள் எனப்படுபவள். அவள் விரும்பி உறையும் இடங்கள் பல. பூரண கும்பம், மஞ்சள், குங்குமம், மாக்கோலம், சந்தனம், வாழையிலை, மாவிலை தோரணம், வெற்றிலை, பசு, கண்ணாடி, உள்ளங்கை ஆகியவற்றில் இலட்சுமி நித்திய வாசம் செய்கின்றாள். அழகு, அடக்கம், ஆற்றல், முயற்சி, கடும் உழைப்பு, தர்ம சிந்தனை, பொறுமை, தெய்வபக்தி ஆகிய நற்குணங்கள் உடைய மனிதரையே மகாலட்சுமி நேசிக்கின்றாள்.

ஸ்ரீ லட்சுமியை வில்வத்தால் அர்ச்சித்து பூசிப்பது விசேடமானது. இவ்வண்ணம் அர்ச்சிக்கும்போது, வில்வத்தை தலைப்பக்கமாக பூசிக்க வேண்டும். தாமரை மலரால் பூசிக்கும்போது, தாமரை மலரின் பூ உள்ள பக்கமாக வைத்து அர்ச்சித்தல் முறையாகும்.

இலட்சுமி கடாட்சமும் எமக்குச் சேர வேண்டிய காலம் வந்தால் தான் வந்து சேரும் என்பதற்கு ஒரு முனிவருடைய கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு காட்டில் ஒரு முனிவர் வசித்து வந்தார். அவருடைய பன்னசாலை தூய்மையாக அழகாக, பசுமையாகக் காட்சி அளித்தது. முற்றத்தில் துளசிச் செடிகள் வளமாக வளர்ந்திருக்க, பூஞ்செடிகள் ஆங்காங்கே பூத்துக் குலுங்கி நின்றன. எந்நேரமும் திருவிளக்கு சுடர்விட்டெரிந்து கொண்டிருந்தது. இக் காட்சியைக் கண்ணுற்றுக் களித்த மகாலெட்சுமி, தான் அங்கு வாசம் செய்ய எழுந்தருளினாள். அவள் வருகையைக் கண்ட முனிவர் இலட்சுமியை வரவேற்று உபசரித்தார். இன்று தொடக்கம் உமக்கு அட்ட ஐஸ்வரியங்களையும் வர்ஷிக்கப் போகிறேன் என்றாள் திருமகள், முனிவரை நோக்கி. அவர் சற்று சிரித்தார். "பற்றற்ற பரமஞானிக்கு, பொன்னும் பொருளும் வேண்டாம், தாயே! உன்னைத்

*துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித இயல்பு. அதை நீக்குவது தெய்வீகப் பண்பு.*

தியானிக்கும் பக்தி நிலையை எனக்குத் தந் தருளினால் போதும்" என்று சொல்லிவிட்டார் முனிவர்.

மகாலெட்சுமியும் முனிவரை விடுவதாக இல்லை. "முனிவரே! நீர் முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனாக, இப்பிறப்பில் அஷ்ட ஐஸ்வரியங்களையும் யான் உமக்கு தந்தாக வேண்டும். நீர் விலகினாலும், அட்ட ஐஸ்வரியங் கள் உம்மைப் பின்தொடரும்" என்று பதில் அளித்தாள் மகாலெட்சுமி.

முனிவர் கூறினார் "தேவி! உன் சித் தம் அதுவானால், யான் உன்னை விட்டு விலக வழி தேடுவேன்" என்றார்.

முனிவர் நீண்ட நேரம் சிந்தித்தார். விடிந்ததும் ஜபதபங்களை முடித்துக்கொண்டு பண்ணசாலையை விட்டு வெளியேறினார். எப்படி யாவது அந்நாட்டு மன்னனின் சீற்றத்துக்குள் ளாகி, சிறைதண்டனை பெற்றுவிட்டால், தேவி எவ்விதம் தன்னிடம் தங்க முடியும் என எண்ணித் தன்னுள் நகைத்துக் கொண்டார் முனிவர்.

காட்டிலே வேட்டையாடச் சென்ற மன்னன் மரநிழலில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட முனிவர், உடனே அங்கு சென்று மன்னனின் மகுடத்தை எட்டி உதைத்தார். இது கண்ட மந்திரி முனிவரை வெட்ட வாளை உரு வினார். மன்னன் முடியிலிருந்து பாம்பொன்று சீறி வெளியே சென்றது. முனிவர் மன்னனைக் காப்பாற்றிவிட்டார் என்ற செய்தி ஊர் எங்கும் பரவியது. மன்னன் முனிவரைப் பல்லக்கில் அழைத்துச் சென்று அரண்மனையில் தங்க வைத்தார்.

அருந்தவசிக்கு அரண்மனைவாசம். தேவியின் லீலை முனிவருக்குப் புரிந்து விட்டது. தேவி! என்னோடு விளையாட வேண் டாம். நான் உன்னைவிட்டு விலகியே தீரு வேன். இது முனிவரது உறுதி.

அடுத்தநாள் உத்தரவின்றி அந்தப் புரத்தினுள் நுழைந்த முனிவர், அங்கிருந்த அரசியை வலியப் பிடித்திழுத்து வெளியே கொண்டு வந்து தள்ளுவதற்கும் மண்டபம் இடிந்து விழுவதற்கும் சரியாக இருந்தது.

மீண்டும் முனிவருக்கு அரச உப சாரம். இம்முறை முனிவரை மன்னன் கௌர வித்து கனகாபிஷேகம் செய்வித்தான். தேவி முகம் மலர்ந்தாள்.

முனிவரோ! செய்வதறியாது திகைத் தார். பேரின்பத்தை மறந்தார். சிறிது சிறிதாக இந்த உபசாரங்கள் அவரது மனசிற்குப் பிடித் துக் கொண்டன.

தேவி! நீ நிரந்தரமாக என்னுடன் தங்கிவிடு என வேண்டினார்.

ஆனால், திருமகளோ! அதற்கு மேல் அவருடன் வாசம் செய்ய விரும்பவில்லை. அவரது புண்ணிய பலன் முடிந்துவிட்டது.

மறுநாள் முனிவர் மன்னனுக்கு அளித்த பூசைப் பிரசாதம் மன்னனை மயங்கி விழச் செய்தது. அதில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளது என்றார்" வைத்தியர். வேந்தன் வெகுண்டான். முனிவரை நாட்டை விட்டே துரத்திவிட்டான்.

முனிவர் சிந்தித்தார். "தேவி! புகழ் வேண்டாம் - பொருள் வேண்டாம் என்றேன். இல்லை என அள்ளித் தந்தாய். இப்போது பொருள் வேண்டும் என்றேன் எட்ட விலகுகின் றாய்!" முனிவர் தனக்குள் நகைத்துக் கொண் டார். முன் ஜன்ம வினைப்பயன்களின் பலன் தான் இவை என எண்ணித் தேறினார் முனி புங்கவர்.

இதுபற்றி நீங்கள் என்ன எண்ணு கிறீர்கள்? இதை யான் உங்களுக்குச் சொல்ல வைத்ததே யான் செய்த புண்ணிய பலன் தான்.

*வாழ்க்கையின் குறிக்கோள் அறிவைப் பெறுவது மட்டுமல்ல. அதைச் செயலாக்குவதேயாகும்.*

# வானதி

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

வானிலிருந்து எம்மை நோக்கி ஓடி வருகின்ற நதியே இங்கு வானதி எனச் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளது. அந் நதி மண்ணில் வீழ்ந்து பாயும்போது அது மண்ணதி எனப் பெயர் பெறுகின்றது. எனவே வானதியானது உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்திற்கும் மற்றும் மரம் செடி கொடிகள் எல்லாவற்றிற்கும் அவசியம் தேவைப்படுகின்றது. வானதியானது பூமியில் வீழ்ந்து பாயவில்லையாயின், மேற்குறித்தவை யாவுமே அழிந்துவிடும். இறைவனைத் தீக் கடவுள் எனவும், நெருப்பான மேனியன் எனவும் திருநாவுக்கரசு நாயனார் பாடியுள்ளார். நெருப்பான மேனியுடைய இறைவனை உயிர்கள் எவ்வாறு அணுகி அருள் பெறல் முடியும். எனவே, இறைவன் உயிர்கள்மீது கருணை கூர்ந்து, தன்னில் பிரிவில்லாத சத்தியை உயிர்களைத் தாங்குமாறு செய்து அச் சத்தியோடு தொடர்பு கொண்டார். உயிர்களை நீரில் திளைத்து விளையாடச் செய்து மகிழ்ந்தார். உயிர்களும் மகிழ்வோடு வாழ்ந்தன. பூமியும் குளிர்ந்தது. மண்ணதியும் பெருகியது. தனது கருணையாகிய கடலைத் திறந்து, பூமியை நோக்கி நீராக ஒழுகினான் இறைவன். சத்தி, அருள், கருணை, இரக்கம், நீர் என்னும் சொற்கள் யாவும் ஒரே பொருளான நீர் என்பதையே குறிப்பன. நாம், நெஞ்சில் இரக்கம் இல்லாதவரைப் பார்த்து "ஈரமில்லா நெஞ்சினன்" என்று கூறுகின்றோம். ஈரம் என்பது நீரிலிருந்து மட்டுமே வருவது என்பதை நாம் அறிவோம். அருள் என்பதும், கருணை என்பதும் இரக்கத்தால் வெளிப்படும் சக்திகள் என்பதாம். கடவுளிடம் இருந்து பிரிந்த சத்திதான் நீராக, மழையாகப் பொழிகிறது. இதனால் உலகம் உய்வடைகிறது - என ஞானியர் கூறுவர். நீர் மூலம் எதுவெனக் காணின் அது வான் மழை ஆகும். வானின் சிறப்பு மழையேதான். இதனால் "வான் சிறப்பு" என திருவள்ளுவரும், திருமந்திரம் அருளிய திருமூலரும் தமது பாயிரப் பகுதிகளில் அவற்றினை வாழ்த்திப் பாடியுள்ளனர். திருக்குறளில் காணும் கடவுள் வாழ்த்துப் பாடியதும் அதற்கடுத்த அதிகாரத்தில் வள்ளுவர் "வான்சிறப்பு" பற்றிய வாழ்த்தினைப் பாடியுள்ளார். நாடு நலம் பெறவே வான்மழையைப் பாடினார் வள்ளுவர். மழை பொழிதல் என்பது கடவுளின் கருணையால் நடைபெறும் செயல். கடவுள் வாழ்த்தில் கடவுளைப் பாடிய வள்ளுவர், வான்சிறப்பில் சத்தியைப் பாடியுள்ளார். இதனால் சிவனின் சத்தி வடிவமே மழையாகும்.

அருட்சத்திதான் உயிர்களோடு தொடர்புகொண்டு உயிர்களைக் காப்பது. அத் தொடர்புதான் மழை. மழை பெய்வதால் பூமியில் பயிர் பச்சைகள் செழித்து வளர்கின்றன. பயிர்கள் துளிர்விடுகின்றன. உயிர்கள் வாழ்கின்றன. அவ்வுயிர்கள் தாகம் தீர்க்க நீர் அருந்துகின்றன. உணவு உண்கின்றன. எங்கே நீர் உண்டோ, அங்கே உயிர்கள் உண்டு. எங்கே உயிர்கள் உளவோ அங்கே நீர் உண்டு.

*தானியத்தை வாங்கும் முன் கோணியைத் தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி.*

**நீரின்றி அமையாது உலகு எனின், யார் யார்க்கும்**
**வான் இன்றி அமையாது ஒழுக்கு.**

-குறள் 20.

நீருள்ள பூமியில் மட்டும் மனிதன் வாழ்வதுபோன்று, ஏனைய கிரகங்களாகிய சந்திரன், செவ்வாய், வியாழன் முதலியவற்றிலும் நீர் காணப்படின் மனிதர் அங்கேயும் வாழமுடியும். அதற்காகவே மேற்படி கிரகங்களில் நீர் உண்டா என விஞ்ஞானிகள் இன்று ஆராய்ந்து வருகின்றனர். அங்கெல்லாம் நீர் இருப்பின் மனிதனும் அங்கே வாழலாம் என்பதைக் கண்டறிய முற்படுகின்றான். எனவே, அருட்சத்தியின் செயல்வடிவங்கள் அண்டத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் வியாபித்துள்ளது. வள்ளுவர் "நீரின்றி அமையாது உலகு" எனப் பாடியமை, நிலவுலகை மட்டுமே குறிக்காது உலகம் முழுவதையும் அதாவது அண்டம் முழுவதையுமே குறித்துள்ளது. எனவே அண்டம் முழுமைக்கும் நீர் பொதுவானது. இது உறுதிபடக் கூறப்பட்டுள்ளது. உலகில் உயிர்கள் வாழும் காலம் மட்டும் அவற்றிற்கு நீர் தேவைப்படும். நீரில்லாமல் உயிர்கள் வாழ்ந்து இறைவனையடைய முடியாது. அதனால் உயிர்கள் தம் பிறவிகளை அறுக்கவும் முடியாது. எனவே, நீரினை இறைவன் நமக்குத் தந்தது நாம் தன்னையடையும் நோக்கம் கருதியேயாம். வெறும் உலக வாழ்க்கைக்கு மட்டுமல்ல நீரின் பயன்பாடு என்பதை உணர்தல் வேண்டும்.

"வானச் சிறப்பு" என்னும் அதிகாரம் திருமூலர் அருளியுள்ள திருமந்திரப் பதிப்பில் காணப்படும் ஓர் பாயிரப் பகுதியாகும். பொதுப் பாயிரத்தில் அவர் அருளிய இரண்டு திருமந்திரங்கள் மழையின் சிறப்பினை எடுத்தியம்பும். இரண்டு விதமாக மழை பொழிவதை திருமூலர் குறிப்பிட்டுள்ளார். முதலாவது புறப்பொழிவு, இரண்டாவது அகப் பொழிவு என்பதாகும் அவை. புறப்பொழிவு என்பது நாம் புறத்தில் காணும் வானதி அல்லது வான் மழையைக் குறித்தது. இம் மழையானது இறைவனின் மறுவடிவமேயாகும். திரோதான சத்தி மறைப்புச் செய்வதால் நமக்கு புற மழையில் இறைவன் தெரிவதில்லை.

உயிர்கள் கீழ் இறங்கும்போது மறைப்புச் சத்தியின் செயலாக அது அமையும். பின் உயிர்கள் இறைவனோடு இரண்டறக் கலந்து மேற் செல்லும்போது அதே சத்தி அருட்சத்தியாக செயற்படும். எனவே திருமூலர் மறைப்புச் சத்திக்கு ஒரு திருமந்திரம் அருளி உள்ளார். அருட்சத்திக்கு ஒரு திருமந்திரம் அருளியுள்ளார். இத் திருமந்திரங்கள் இரண்டும் வானச் சிறப்பு என்னும் அதிகாரத்தில் பாடியுள்ளார். முதலில் மறைப்புச் சத்தியாக வானதி பொழிவதைப் பாடினார். இது உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அத் திருமந்திரம் வருமாறு.

**அமுதூறு மாமழை நீர்தனாலே**
**அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்**
**கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை**
**அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாமே.**

-திருமந்திரம் 248.

இங்கே, அமுதூறும் பல மரங்கள் பூமியில் தோன்றும் என்பதனால், மழை பொழிவதால் பல மரங்கள் உற்பத்தியாகும் எனக் கூறப்பட்டுள்ளது. இறைவனது கருணையினால் பல மரம் செடி கொடிகள் வளர்கின்றன. எனவே இறைவனது சத்தியைத் தாய் என்று உருவகம் செய்து, அத் தாயானவள் இறைவனை விட்டுப் பிரிந்து வந்து பூமியில் பல தடவைகள் மழையாகப் பொழிவதையும் கூறினார். எனவே, "அகிலாண்டமும் பன்முறை ஈன்றும் அழகு முதிர முதிரா என் அம்மை"-

*தீர்மானிக்க மனம், வழிவகுக்க அறிவு, செய்து முடிக்க கை தேவை.*

என குமரகுருபரர் பாடியுள்ளார். இங்கே பன் மரங்கள் வளர்வதாகக் கூறிய நாயனார், பின்னர் அடுத்தவரியில் கமுகு, தெங்கு, கரும்பு, வாழை என பயன்தரும் மரங்கள் வளர்வது பற்றியும் கூறியுள்ளார். காட்டில் வளரும் மரங்களுக்கும் மழை தேவைதானே. காட்டு மரங்கள் செழித்து அடர்ந்து வளர்ந் தால்தான் முகில் கூட்டங்கள் உருவாகி மழைக்குரிய கருமூலங்கள் உருவாகும். எனவே பயனற்ற மரங்களுக்கும் மழை தேவைப்படுவதால் அவற்றின் வளர்ச்சியும் பெய்யும் மழையில் தங்கியுள்ளது. எனவே, மரங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும். முதலாவது; உயிர்களுக்கு நேரடி யாகப் பயன்தரும் மரங்கள். இரண்டாவது; உயிர்களுக்கு மறைமுகமாகப் பயன்தரும் மரங்கள். எனவே, பயன் தராத மரம் எதுவும் இல்லை என்பதை திருமூலர் கூறியுள்ளார். இவ்வாறு மரங்கள் வளரவில்லையாயின் பூமி எல்லாம் வரண்டு காஞ்சிரங்காய் போல மக் களுக்குத் துன்பமே மிகும் என்று இத் திரு மந்திரம் கூறியுள்ளது.

மறைப்புச் சத்தியின் மழை புற மழை யாகப் பொழிவதன் சிறப்பினைக் கூறிய நாய னார், அடுத்த திருமந்திரத்தில் இறைவனின் அருட்சத்தி பற்றிக் கூறியுள்ளார். அருட்சத்தி யால் உயிர்களை மேல் ஏற்றுவது பற்றிக் கூறியுள்ளார்.

**வரையிடை நின்றிழி வானீர் அருவி**
**உரையில்லை உள்ளத்து அகத்து நின்று ஊறும்**
**நுரையில்லை மாசில்லை நுண்ணிது தெள்நீர்**
**கரையில்லை எந்தைக் கழுமணி யாறே.**

-திருமந்திரம் 249.

சிரசாகிய மலையினின்றும் பாயும் ஆகாய கங்கையே இதுவாகும். அதனால் இந் நதி நீர் தூய்மையானது. இந் நதிக்கு எல்லையும் இல்லை. இது வாலறிவு என்னும் ஞானமாகிய அருவியாகும். அறிவு என்னும் ஆகாயத்தினின்றும் பொழியும் இம் மழை அக மழையாகும். உரையிட்டுச் சொல்லவும் முடியாததாய், உயிர்களின் அகத்தே பொழிய வும், அது ஆறாகப் பெருக்கமடைந்து, இற வாத இன்பத்தை உயிர்களுக்கு வழங்கும் நுரை மாசு பாசி முதலிய மாசுக்கள் அற்ற தூய்மை மிக்க தெளிந்த நீர் இந் நீராகும். இந் நீர் சிவபெருமானிடமிருந்து சூக்குமமாகப் பொழியும் திருவருள் என்னும் நீராம். எனவே, இது "அகப்பொழிவு" எனப்படுகிறது. தூய்மை மிக்க தெளிந்த நீராவது மல மாசுக்களாகிய மும்மலங்களின் கலப்பின்றிய நீர் இதுவாகும். எனவே இந் நீர் பாவங்களைப் போக்கும் "கழுமணி"- ஆறு ஆகும். எனவே அம் மழை இறைவனின் திருவருள் வடிவமாகும்.

உலகில் மழை பெய்வதனால் மட்டும் உயிர்கள் தமது வாழ்க்கையினை திருப்தி யாக அமைத்துக்கொள்ள முடியாதும் போக லாம். எனவே, உயர்ந்த நோக்கத்தை அடைய வேண்டுமானால், அறம் செய்தல் வேண்டும். வானச் சிறப்பின் பின் தானச் சிறப்பினைக் கூறிய திருமூலர், பொருள் வைப்பு முறை தவறாது, மழை பெய்து செழித்துள்ள நாட் டில் வாழும் மக்கள் மத்தியில் அறம் செய்யும் வசதிகள் ஏற்படும். நாட்டில், தானியம் உற் பத்தி செய்பவர், அது உற்பத்தி செய்யா தோருக்கு தானியத்தைத் தானமாக வழங்க முடியும். அல்லது செல்வத்தை தானமாக வழங்கலாம். இச் செயல்களால் அறம் வள ரும். அதனால், "தானச் சிறப்பு"- என்னும் அதிகாரத்தை அடுத்து, "அறம் செய்வான் திறம்" என்னும் அதிகாரம் அருளப்பட்டுள்ளது. பின்னர் அதன் எதிர்மறையாக "அறம் செய் யான் திறம்" என்னும் அதிகாரம் அருளப்பட் டுள்ளமை சிறப்புடையதே. அத்துடன் மக்கள் அறம் செய்யாமல் விட்டு விடுவார்கள் என்னும்

*மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாக பேசவும் தெரியாது.*

ஐயப்பாட்டினால் நாயனார் வைப்புமுறை ஒழுங்கில் "அறம் செய்யான் திறம்" என்பது பற்றியும் அருளியுள்ளமை நோக்கத்தக்கது.

இனி "தானச் சிறப்பு" என்னும் பகுதியை நோக்குவோம். இப் பகுதியில் நாயனார் ஒரே ஒரு திருமந்திரம் அருளிச் செய்துள்ளார். அது வருமாறு.

**ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.**

-திருமந்திரம் 250.

"என்ன தானத்திலும் சிறந்தது அன்ன தானம்" என்று கூறினர் பெரியோர். பிறர் பசியைப் போக்குதல் என்பது அறங்களில் முதன்மை மிக்க அறமாகும். நாயனார் பிறர்க்கு உண்ண இடுவதாகிய அறத்தை முதலில் எடுத்துக்கொண்டார். முற்காலத்தில் எல்லா ஊர்களிலும் அன்னமளிக்கும் அன்ன சத்திரங்கள் விளங்கின. அதனால் ஆதரவற்றவர்கள் நாள்தோறும் பசியாற வழியேற்பட்டது. முற்காலத்தில் அன்னம் என்னும் உணவு இக்காலம்போல் வியாபாரப் பொருளாக இருக்கவில்லை. அன்னம் மட்டுமல்ல ஏனைய உணவுகள் எதுவும் சமைத்த உணவாக விற்கப்படுவதில்லை. அன்ன சத்திரங்களில் ஆதரவற்றவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டது. உணவு விற்பது கேவலமாகக் கருதப்பட்ட காலமது. இத் திருமந்திரத்தில் காட்டப்பெற்ற பசியாற்றுதல் என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டே வள்ளலார் அவர்கள் தருமச்சாலை கட்டி அதற்கு முன்னுரிமை கொடுத்தார். அதன் பலன் பல வருடங்கள் நிலைத்தன.

அத்துடன், பசியாற்றுவிக்கும்போது இனம், மதம், ஜாதி பேதங்களைப் பாராது சமவுரிமையுடன் எல்லோரையும் வரவேற்று உணவளித்தல் வேண்டும் என்றும் இத் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. நாயனார் "ஆர்க்கும் இடுமின்" என்றுள்ளார்.

**வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை; மற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

குறள் 221.

திருவள்ளுவர் வறியவர்களுக்கு வழங்கி அறம் செய்க. அதுவே கொடை என்றும், ஏனைய அறங்கள் எல்லாம் வருவதை எதிர்பார்த்துச் செய்யும் குறிப்பான நோக்கமுடையது என்றும் பாடினார். ஆனால் திருமூலர் எல்லோருக்கும் வழங்குமாறும் அதுவே கொடையெனவும் அறமெனவும் சற்று உயர்வாகவே அருளியுள்ளார். அத்துடன் அறம் என்பதில் பிறர் பசி போக்குதலே சிறப்புடையது எனவும், சாப்பிடும்போது வேறு யாராவது ஒருவரையேனும் உடன் வைத்துக் கொண்டு சாப்பிடுவது அறச் செயலாகும் எனவும் அருளியுள்ளமை பாடலில் காணலாம். தனியே சாப்பாடு கொடுப்பது சாப்பிடுபவரின் உடன் தேவைகளைப் புரிந்துகொள்ள முடியாது போய்விடும். உடனிருந்து சாப்பிட்டால்த் தான் உணவின் சுவையையும், தேவைகளையும் புரிந்துகொண்டு, விருந்தாளிக்கும் அவ்வாறே உணவிடலாம் என்பதை உணர்தல் வேண்டும். தனியே சாப்பிடும்போது பசிக்குச் சாப்பிடுவது என்பது போய், ருசிக்குச் சாப்பிடுவது என்னும் நிலை ஏற்படும். அதிகமாக மீதமின்றியும் உண்ணும் நிலையும் இதனால் ஏற்பட இடமுண்டு. எனவே "பார்த்திருந்து உண்மின்"- என்றார் நாயனார். "செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்போர்" பற்றி திருவள்ளுவரும் பாடியுள்ளார். தமிழர்களின் நெறிமுறையும் இதுவேயாகும். தலைவனோ அல்லது அரசனோ யாராகிலும் சேர்ந்து உண்பதே பண்டைய மன்னர் காலத்திலும் முறையாக இருந்துள்ளது. பழைய உணவினைப் பிறர்க்கு இடுதல் கூடாது. பழைய உணவினை

*நாணயமாக நடப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் அஞ்சவேண்டியதில்லை.*

தானும் உண்ணுதல் கூடாது. அதனால், "பழம் பொருள் போற்றன்மின்"- என நாயனார் கூறியுள்ளார். பழைய உணவினைப் பிறர்க்கு வழங்குவது அறம் ஆகாது. அடுத்து, "வேட்கை யுடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்"- என்பதையும் அதன் பொருளையும் நோக்கு தல் வேண்டும். அதாவது, "வேகமாகச் சாப்பிடு தல் கூடாது"- என்பதைக் கூறியுள்ளார். ஆகவே மெல்லச் சாப்பிடுதல் வேண்டும். ஏனெனில், உங்கள் பக்கத்தில் இருந்து உண்பவர் தனது தேவைக்கேற்ற அளவு உணவினை உண்ண முடியாமல் போய்விடும். அதனால்த்தான் சாப் பிட்டு முடிந்ததும் இலையை மூடி உடனே எழுந்து செல்லல் முறையற்ற செயல் எனக் கருதப்படுகிறது. உடன் எழுந்தால் பக்கத்தில் அமர்ந்து உண்பவரும் அவரோடு சேர்ந்து எழுந்துவிட நேரிடும். அதனால் உடனிருந்தவர் முழுமையாக உண்ண முடியாது போய்விடும். அதனால் பாவத்தையும் ஏற்கவேண்டிவரும்.

"காகம் ஒரு பறவையினத்தைச் சேர்ந் தது. ஆயினும் அக் காகம் தாம் உண்ணும் போது தன் இனத்தினையும் கூவி அழைத்து எல்லாம் சேர்ந்து உண்ணும் வழக்கம் உடையது. இதனை நாம் நேரிலும் காணலாம். காக்கைக்கு இருக்கும் பகுத்தறிவு மனிதரிடம் இல்லை என்பதுபோல இது அமைந்துள்ளது. மனிதன் ஆறறிவு உடையவன். பறவைக்கு ஆறாவது அறிவு இல்லை. இருப்பினும் பறவை யின் இச் செயல் பாராட்டத்தக்கதே. எனவே பகிர்ந்துண்ணுதல் மனிதப் பண்பாடாகும்.

தானச் சிறப்புடன் விளங்குவதாகிய ஓர் சமுதாயம் உருவாக வேண்டுமானால் வானமும் நன்கு மழை பொழிந்து வழங்குதல் வேண்டும். எல்லோரும் பயிர் செய்யமாட்டார் கள். எனவே பயிர் செய்யாதோருக்கு பயிர் விளைந்தோர் கொடுத்து உதவி செய்தல் சிறப்புடையது.

**தானம், தவம் இரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்.**

-குறள் 19.

வானம் வழங்காது விட்டால் தவமும் தூய வாழ்க்கையான அறமும் இந்த பெரிய உலகில் நடைபெறாமல் போய்விடும். துர்ப்பாக் கியம் நிகழும், அடுத்து அறம் செய்வாரது உயர்ந்த தன்மை பற்றி திருமூலர் பாடியுள் ளார். இங்கு அறம் என்பது; இல்லை என்னாது ஈவாரது தன்மை பற்றிக் கூறியுள்ளார். பாடல் வருமாறு.

**யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.**

-திருமந்திரம் 252.

நம் சிந்தனைக்குரிய ஓர் பாடலாக இப் பாடல் அமைந்துள்ளது. மிக இலகுவான முறையிலும், செலவின்றியும் அறம் செய்வது எப்படி என்று தெரிந்துகொள்ள விரும்புவோர் இப் பாடல் வரிகளைப் படித்து அனுபவித் தால் அது புரியும். ஆடம்பரமான முறையில் தான் அறம் செய்ய வேண்டும் என்பதில்லை. அப்படிச் செய்தால்த்தான் அது அறம் என்று கூறத் தகுமோ எனின் அதுவும் தேவையற்றது. பின் எப்படிச் செய்தால் அறமாகும் எனின் இப் பாடல் வரிகள் சுட்டும் செயல்களை அமைதியாகச் செய்தால் அதுபோதும். இறைவனுக்கு ஓர் பச்சிலையாகிய இலையை மட்டும் இட்டு வணங்கினாலே போதும். பச்சிலை இலகுவில் கிடைக்கும். மலர்கூடக் கிடையாது போகலாம். இங்கு மலர் இட்டு வணங்குதல் வேண்டும் என்பதில்லை. இறை வழிபாட்டில் அன்புதான் முக்கியம். அளவு முக்கியமல்ல. எனவே இறைவனுக்குப் பச் சிலை இடுதல் ஓர் அறச் செயலாகும். அவ் வாறு இடுபவரின் உள்ளத்தின் உயர்ந்த

தன்மைதான் இங்கு கணக்கிடப்பட்டுள்ளது. அதுபோல் பசுவுக்கு ஓர் கைப்பிடியளவு புல்லினை அல்லது இலை தழைகளையேனும் உணவாகக் கொடுக்கும் மனிதனின் மாண்பு மிகு உள்ளத்தின் தன்மை இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பசுவினைப் பேணுதல் நம் மரபாகும். பசு தெய்வப் பிறவி என்பதை அறிவோம். பசுவினைப் பேணுதல் பெரும் அறமாகும். திருமூலர் தனது திருமந்திர - பொதுப் பாயிரப் பகுதியில் பசுவினை வாழ்த்தும் இடமாக, இங்கு பசுவுக்கு வாயுறை கொடுத்தல் அமைந்துள்ளது. நாம் உண்ணும் போது ஆதரவு அற்றவர்க்கு ஒரு கைப்பிடி கொடுத்துவிட்டுச் சாப்பிட்டாலே அது போதும் என்றாகிறது. அதுவும் செய்ய இயலாதவர் பிறர்மீது எக்காரணம் கொண்டும், எப்போதும், எக்காலத்தும், எதற்கும் இன்னுரையல்லாத சொற்களைப் பேசி அவர்களைப் புண்படுத்துதல் வேண்டாம். பிறரோடு இன்னுரையாகிய இனிமைமிகு, அன்பான பேச்சினையே பேசுதல் அவர் செய்யுமோர் அறமாகும்.

எனவே, நாட்டில் அறமும், தவமும் நிலைக்க வேண்டும். அதற்கும் நாடு நலம் பெறல் வேண்டும். மாதம் மும்மாரி பொழிய வேண்டும். இன்னொரு பாடலில் முத்திக்குரிய வழிபற்றி திருமூலர் கூறியுள்ளார். பாடல் வருமாறு.

**திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி**
**இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு**
**கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்**
**விளைக்குந் தவம், அறம் மேற்றுணை யாமே.**

-திருமந்திரம் 258.

நாம் வினையாகிய கடலில் மூழ்கி விடாமல் நம்மைக் கரை சேர்ப்பது திருவருள் என்கின்ற தோணி. இத் தோணியை நாம் ஓட்ட வேண்டுமானால் இரண்டு துடுப்புக்கள் தேவை. அவற்றுள் ஒரு துடுப்பு தவம்; இன்னொரு துடுப்பு அறம். இல் வாழ்க்கையில் இருந்துகொண்டு அறம் செய்யலாம். துறவு வாழ்க்கையில் இருந்து கொண்டு தவம் செய்யலாம், இவையே மறுமைக்குத் துணை ஆகும்.

அடுத்து தருமம் (அறம்) செய்யாத வரது இயல்பு கூறப்படுகிறது.

**இருமலுஞ் சோகையும், ஈளையும், வெப்பும்**
**தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்**
**உருமிடி நாக, முரோணி, கழலை**
**தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே.**

-திருமந்திரம் 263.

அறத்தின் பெருமையை உடன் பாட்டில் கூறியுள்ள நாயனார், அதன் இன்றியமையை மேலும் வலியுறுத்திக் கூறும் நோக்கோடு "அறம் செய்யான் திறம்"- என்னும் தலைப்பில் எதிர்மறையில் சில திருமந்திரப் பாசுரங்களை அருளிச் செய்துள்ளார். அவற்றில் ஒன்று (திருமந்திரம்) மேல் உள்ளது.

பாடல் வரிகள் வருமாறு:

**"அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்**
**திறம் அறியார் சிவ லோக நகர்க்குப்**
**புறம் அறியார்"**

"இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்பும்..." என்னும் - இங்கு முதற் கூறப்பட்டுள்ள- பாசுரக் கருத்து வருமாறு. அறம் செய்யாதார் நோய் வாய்ப்பட்டு தமது வாழ்வில் பல துன்பங்களை அனுபவிக்க நேரிடும். சில நோய்களாகிய இருமல், சோகை, கோழை (சளிநோய்) சுரமும் ஆகியவை அறம் செய்யாதவர்களது வாழ்வில் அவர்களைப் பீடிக்கும். மரணம் விளைவிக்கும் மின்னலும், இடியும், பாம்புக் கடியும், தொண்டை நோயும், வயிற்றுக் கட்டியும் ஆகியவை தருமம் செய்வாரது பக்கம் அணுகாது அகலும் என்பதாம்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| சிவா அருட்செல்வி | துன்னாலை | 5000. 00 |
| த. அபிராமி | பருத்தித்துறை | 3000. 00 |
| கி. பாலசுப்பிரமணியம் | அமெரிக்கா | 10000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 11000. 00 |
| பா. சித்ரா | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| திரு குமரதேவன் | அராலி | 2000. 00 |
| முருகேசு சுவாமி அடியார் | கிளிநொச்சி | 5000. 00 |
| மயூரன் அஞ்சலி | லண்டன் | 10000. 00 |
| திரு N. ஜெயக்குமார் | லண்டன் | 10000. 00 |
| சி. சரஸ்வதி | லண்டன் | 1000. 00 |
| ஹேமகுமார் கஜரூபி | மல்லாவி | 5000. 00 |
| மகாலட்சுமி, மாதவன், சிவாகரன் | திருநெல்வேலி | 1000. 00 |
| வசந்தகுமார் அட்சாயினி | பிரான்ஸ் | 10000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| வி. துஷிகரன், வி. கஜிதரன் | சுன்னாகம் | 5000. 00 |
| ம. ஸ்ரீகாந்தன் | அச்சுவேலி | 10000. 00 |
| இ. ஜெயராசா (சுப்பகூஸ்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| S. சுந்தரலிங்கம் 'செல்வம் பற்றிக்கடை) | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ராசம்மா சிவக்கொழுந்து | வசாவிளான் | 20000. 00 |
| செ. கனகரெத்தினம் | திருகோணமலை | 500. 00 |
| திரு முத்துகணேஸ் | இணுவில் | 4புட்டி பருப்பு, 5 பெட்டி அங்கர் |
| கி. ரஜிதா | வவுனியா | 1000. 00 |
| கருணபூசணி | மானிப்பாய் | 1000. 00 |
| K. கமலசிங்கம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| திரு கனகரட்ணம் குடும்பம் | மலேசியா | 5000. 00 |
| ச. கஜந்தன் | யாழ்ப்பாணம் | 500. 00 |

*எனக்கு வேண்டும் என்பது ஆசை. எனக்கு மட்டும் வேண்டும் என்பது பேராசை.*

| | | |
|---|---|---|
| ப. புவனேஸ்வரி | தும்பளை | 1000. 00 |
| K. யோகநாயகி | வதிரி | 10000. 00 |
| மு. கஸ்தூரி | நல்லூர் | 5000. 00 |
| செல்வி ப. ஆத்மிகா | நீர்வேலி | 2000. 00 |
| இ. ஜெயக்குமார் | பருத்தித்துறை | 10000. 00 |
| N. கேதீசன் | கொழும்பு | 5000. 00 |
| சி. மோகன்ராஜ் | இந்தியா (சென்னை) | 1000. 00 |
| ச. கனகம்மா | நீர்வேலி | 1000. 00 |
| வி. சாரதாதேவி | கனடா | 4000. 00 |
| சரஸ்வதி நடேசன் | நீர்வேலி | 5000. 00 |
| இராம ஜெயபாலன் | சங்கானை | 1000. 00 |
| செ. வாகீசன் | இணுவில் | 1000. 00 |
| செ. ஜெகநாதன் | நல்லூர் | 500. 00 |
| திரு முருகேசம்பிள்ளை குடும்பம் | பருத்தித்துறை | 3000. 00 |
| சி. வாணி | நெல்லியடி | 10000. 00 |
| ஸ்ரீ கமலாம்பிகை | சுன்னாகம் | 1000. 00 |
| ரா. கமலபூபதி | மல்லாகம் | 1000. 00 |
| S. கணேஸ்வரி | கரவெட்டி | 10000. 00 |
| த. மிதுஷா | அச்சுவேலி | 1000. 00 |
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 500. 00 |
| சி. தங்கவடிவேல் சிற்றி வெதுப்பகம் | பருத்தித்துறை | |
| | (மாதாந்தம் 1மூடை வகையில்) | 12மூடை மா |
| சுதர்ஷன், ஹரிசன் | கனடா | 25000. 00 |
| அன்ரனி தேவகுமார் | மாதகல் | 6000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 500. 00 |
| மா. விஸ்வநாதன் | புத்தூர் | 1000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் மகாத்மாவீதி | நெல்லியடி | 1000. 00 |
| ஆ. பார்த்தீபன் | உரும்பராய் | 1000. 00 |
| த. புஸ்பராசா | உரும்பராய் | 1000. 00 |
| ப. ஆனந்தமூர்த்தி | வண்ணார்பண்ணை | 1000. 00 |
| மு. அப்புலிங்கம் கோண்டாவில் | மரக்கறி, 1புட்டி பருப்பு, | 1மூடை அரிசி |
| திரு கதிர்வேலன் | தலைமன்னார் | 500. 00 |
| திருமதி சுகந்தி வாசுதேவன் | அளவெட்டி வடக்கு | 5000. 00 |
| க. சத்தியவாணன் | சுன்னாகம் | 1புட்டி அரிசி 500. 00 |
| தி. காசிபதி | பிரான்ஸ் | 2000. 00 |
| இ. முருகதாஸ் குடும்பம் | சாவகச்சேரி | 5000. 00 |
| R. ஷெம்பிகா | நீர்வேலி | 2000. 00 |

(தொடரும்...

*விரோதி உன் குறைகளை பிறரிடம் சொல்வான், நண்பன் உன்னிடம் சொல்வான்.*

# நாயன்மார் பாடல்களில் காணப்படும் சைவவாழ்வியல் சிந்தனைகள்

– திரு **முருகவேள் துஸ்யந்தன்** அவர்கள் –

## அறிமுகம்

சைவ சமய வளர்ச்சியில் நாயன்மார்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். பல்லவர் காலத்திலே பிற மதங்களின் எதிர்ப்பையும் தாண்டி சைவத்தை வளர்த்தெடுத்த பெருமையும் இவர்களையே சாரும். அந்தவகையில் அறுபத்துமூன்று நாயன்மார்கள் காணப்பட்டாலும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருமே சிறப்பானவர்களாகவும் தமிழர் பண்பாட்டு மரபிலே மிகப் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியவர்களாகவும் காணப்படுகின்றனர். அதாவது தமிழர் பண்பாட்டு வரலாற்றிலே கி.பி. 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் 9ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி "பக்திநெறிக் காலம்" எனப் பேசப்படும். இக்காலத்திலே சைவபக்தி இயக்கத்தினை தோற்றுவிக்க முன்னின்று வழிநடத்தியவர்கள் நாயன்மார்களேயாவர். பல்வேறு ஊர்களுக்கும் சென்று சிவபக்தியை பரப்பியதுடன் அன்றைய பண்பாட்டு வரலாற்றிற்கு முக்கிய பங்களிப்பு செய்தனர். அத்துடன் இவர்களின் பாடல்கள் சிந்தனை, செய்முறை என்பவற்றில் எழுச்சியும் மக்கள் இவ்வுலகில் நல்லவண்ணம் வாழவும் தீமைகள் அகலவும் பல்வேறு வாழ்வியல் சிந்தனைகளை சித்தரிப்பனவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருஞானசம்பந்தர் பாடலில் வாழ்வியல் சிந்தனைகள்

மூன்று வயதிலே ஞானப்பாலுடன் சிவஞான அமிர்தத்தைக் கலந்து உமையால் ஊட்டப்பெற்றமையால் ஞானக்குழந்தையாகிய சம்பந்தர் அச்சம் கொண்டு அவலப்பட்டு துன்பங்களை துயரங்களை தொடர் கதையாகச் சந்தித்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ்கின்ற சமுதாயத்திற்கு வழிகாட்டி, நெறிகாட்டி அபயமளிக்கும் பாடல்களாக சம்பந்தர் அருளிய கோளறு பதிகம் காணப்படுகின்றது. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற உறுதிப்பாட்டினை இவரது பாடல்களிலே காணலாம். அதாவது சைவசமயம் உலகியல் வாழ்க்கையில் சாபக்கேடோ, தண்டனையோ என்று குறிப்பிடவில்லை. வரப்பிரசாதம் என்றே கூறுகின்றது. அறநெறி நின்று அன்பைக் கடைப்பிடித்து ஒழுகி வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்றும், அவ்வாறு வாழ்பவர்களுக்கு நற்கதியாகிய வீட்டு இன்பம் கிடைக்கும் என்பதை,

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில் நல்ல கதிக்கும் யாதுமோர் குறைவில்லை..."*

எனும் பாடல் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

மேலும் துன்பத்தையுடைய இல் வாழ்க்கையிலுள்ள துன்பத்தை விட்டு இன்பத்தைத் தரவல்ல ஓர் வழியை அறிந்து அதன்படி நடக்க வேண்டுமெனவும் துன்பத்தை நீக்கி இன்பத்தையடைய வழி எதுவென சம்பந்தர் கண்டாரோ அதனையே இங்கும் கூறுகின்றார்.

*தோல்விகளைக் கண்டு நீ பயந்தால், வெற்றி உன்னைக் கண்டு பயப்படும்.*

கடவுளை வணங்கி அவனைச் சரணாகதி அடைவதுதான் ஒரே வழி என்பதை "துக்கமிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்துநீர்..." என்ற பாடல் சுட்டுகின்றது. அத்துடன் நெஞ்சிலே பிறக்கின்ற கள்ளத்தனமும் வஞ்சகமும் நிறைந்த எண்ணங்களை விட்டொழித்து விட வேண்டும். அதேவேளை இறைவனை வழிபட்டு நமச்சிவாய மந்திரத்தை உச்சரித்தால் வினைகள் நீங்கும் என்கின்றார்.

*"நம்புவா ரவர் நாவின விற்றினால்*
*வம்ப நாள்மலர் வார்மது வொப்பது..."*

என்பது இதற்குச் சான்றாகும்.

அதேவேளை அக்காலத்திலே வாழ்ந்த சிவனடியார்களை சமமாக எண்ணியமை சமுதாய ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்துவதுடன் கோயிலில் நுழைய முடியாத அளவிற்கு சாதி நிலையில் புறக்கணிக்கப்பட்டிருந்த பாணரை சம்பந்தர் தம் தொண்டர் கூட்டத்தில் தம் பாடல்களை யாழில் இசைக்கச் செய்தார் என்பதிலிருந்து சாதி மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை களைந்தமையை அறிய முடிகின்றது.

அதாவது சம்பந்தர் அந்தணர்களை நன்கு மதித்தார் என்பதிலிருந்து அவர்கள் உயர்ந்த பண்புள்ளவர்கள் மனித சமூக வாழ்வுக்கு வழிகாட்டுவார்கள். ஆகவே அந்தணர்கள் நன்றாக வாழவேண்டும் என்றும் பசுக்கள் வாழவேண்டும் என்றும் "வீழ்க தண்புனல்" என்று மழைவளம் குறையக்கூடாது என்றும் "வேந்தனும் ஓங்குக" என்று அரசனுக்கு வாழ்த்துக் கூறியதுடன் "ஆழ்க தீயதெல்லாம்" என்று தீமையானது எதுவென்றாலும் அது முழுவதுமாக ஒழிய வேண்டும் ஏனெனில் மக்கள் ஒழுக்கக்கேடு உடையவராகி விடுவார்கள் என்கின்றார். இவ்வாறாக ஏராளமான வாழ்வியல் சிந்தனைகளை சம்பந்தர் பாடல்களில் காணமுடிகின்றது.

## நாவுக்கரசரின் பாடல்களில் வாழ்வியல் சிந்தனை

நாவுக்கரசருடைய "சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து" எனத் தொடங்கும் பதிகமானது நாட்டிலே பிறப்பினால் உயர்வு தாழ்வு இருக்கக்கூடாது என்றும் "சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்கள்" என்பதன்மூலம் சமுதாயத்தில் சாதி, இனம் என்பவற்றைக் களைந்ததுடன் சாதி பேதம் காட்டக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார். மேலும் நீதியோடு வாழவேண்டும் ஓதிய நூல்களில் உண்மையை உணரவேண்டும். ஒழுக்கமற்றவர்கள் மக்களேயில்லை என்பதை,

*"நீதியால் வாழமாட்டேன்*
*நீத்தலும் தூயன் அல்லேன்*
*ஓதியும் உணரமாட்டேன்..."*

குறிப்பிடுகின்றார்.

அத்துடன் அப்பர் தனது பாடல்களிலே பயனுள்ள வாழ்க்கை வாழ்தல் பொதுநலப் பணிகளை கடமையாகக் கொள்ளல், ஒப்புரவு அறிதல், உலக நடைபோற்றல், மூத்தோர் சொல் போற்றல், கொடைத் தன்மையை வளர்த்தல், நடுநிலையான ஆட்சியைக் கடைப்பிடித்தல், தவறான உறவு கூடாது, நோயாளியை ஒதுக்கக்கூடாது, தீண்டாமை கூடாது போன்ற இன்னோரன்ன வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் கூறியுள்ளார். இதில் பயனுள்ள வாழ்க்கை வாழுதல் என்பதனை பலர் கூடி வாழும் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பயனுள்ள வாழ்க்கை

வாழவேண்டும் எனக் கூறியுள்ளார். இதனோடு பழி பாவங்களுக்கு அஞ்சவேண்டும் எனவும் அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் இப்பாடல் அமைகின்றது.

*"நடலை வாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர்*
*சுடலை சேர்வது சொற்பிர மாணமே..."*

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

மூத்தோர் சொல் போற்றல்" என்ற சிந்தனையை வலியுறுத்தியுள்ளார். சமுதாயத்தில் அறிவாலும் அனுபவத்தாலும் சிறந்திருக்கும் சான்றோர்கள் கூறும் நெறிகளைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும். இல்லையேல் துன்பம் ஏற்படும் எனக் கூறியுள்ளார். இதனை, "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்" என்ற பாடலில் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் நோயாளியை ஒதுக்கக் கூடாது என்பதனை "அங்கமெல்லாம் குறைந்தழுகுதொழு நோயராய்..." என்ற பாடலில் விபரித்துள்ளார்.

## சுந்தரர் பாடல்களில் வாழ்வியல் சிந்தனை

*"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடச்*
*தீதிலாத் திருத்தொண்டர் தொகைதர..."*

எனப் பெரியபுராணம் போற்றும் சுந்தரர் "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்..." எனத் தொடங்கும் பாடலின் மூலம் சமுதாய புரட்சியில் தகுதியற்றவரைப் புகழ வேண்டாமென்ற எதிர்ப்புணர்வை காட்டியுள்ளார். அத்துடன் அன்பின் நெருக்கமாக தோழமை, வாழ்வில் இன்ப துன்ப நிகழ்வுகளால் ஏற்படும் அவலப் பெருமூச்சு சமூகத்தில் நல்வழிகாட்டும் ஆசானுக் குரிய போதனைப்பண்பு என்பவற்றை "அழுக்குமெய் கொடுன் திருவடி யடைந்தேன்..." எனும் பாடலில் மூலமும் துன்பம், துயரம், அழுகை என்பவற்றை "விழித்தலைப் படுவன் முயல் கின்றேன்..." எனத் தொடங்கும் பாடல்மூலமும் தெளிவுபடுத்துகின்றார்.

சுந்தரர் தனது அனுபவங்களை பாடல்களில் கூறி அதன்வழி மக்களுக்கு வாழ்வியல் சிந்தனைகளைக் கூறுகின்றார். அதாவது எத்தகைய இடர் வந்தாலும் மனந்தளராது மன உறுதியுடன் இருக்கவேண்டுமென்றும் சொன்ன வாக்கைக் காப்பாற்ற வேண்டுமென்றும் பிழை செய்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறியது மட்டுமன்றி "மானை நோக்கியவர் கண் வயப்பட்டு..." என்பதன்மூலம் பெண்ணாசையால் ஏற்படும் பாதிப்புப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலக நிலையாமை, உறவு நிலையாமை, மரணம் பற்றிய அச்சம், சிற்றின்ப நாட்டம் பற்றிய கண்டனம் காணப்படுவதுடன் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்..." என்பதன் மூலம் சமுதாய ஏற்றத் தாழ்வுகளைப் புறக்கணிக்கின்றார். அத்துடன் "திருப்பருப்பதம்" எனும் பத்துப் பாடல்களிலே விலங்கியல் வாழ்வியலைக் காட்டுவதனூடாக மனித வாழ்வியல் பண்பாட்டு சிந்தனைகளை அழகாக வெளிப்படுத்துகின்றார்.

## மணிவாசகர் பாடல்களில் வாழ்வியல் சிந்தனை

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பதற்கிணங்க தொல்லை தரும் பிறவித் தளையை நீக்கும், அல்லல் அறுக்கும், ஆனந்தமாக்கும் என்றும் பல மலர்களில் இருந்து எடுக்கப்பட்ட தேன் எவ்வாறு உடற் பிணியை அகற்றுமோ அதேபோல

திருவாசகத்தேன் உயிருக்கு ஏற்படும் பிறவிப்பிணியை அகற்றவல்லது என்கின்றார். இதனை "உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து..." எனும் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. அத்துடன் உள்ளம் உருகி வழிபட்டால் இறையருள் கிடைக்கும் எனவும் தெய்வத்தை உணராதுவிடின் தீவினை ஏற்படும் என்பதை "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு" என்பது உணர்த்துகின்றது.

மேலும் மணிவாசகர் தனது பாடல்களிலே தானாகவே நின்று தன்னை வெளிப்படுத்தும் வகையிலான தள நிலையைக் கொண்டுள்ளார். இது தனி மனிதனுக்கு வேண்டிய வாழ்வியல் அம்சமாகும். அத்துடன் இவரது பாடல்கள் தனது அனுபவங்களையும் உணர்வுகளையும் தத்துவஞானப் பரப்பையும் உரைக்க முற்படுவதுபோல் இருப்பதென்பது மக்கள் வாழ வழி காட்டுவதாய் இருக்கின்றது என்பதாகும்.

**முடிவுரை**

மக்களை நல்வழிப்படுத்தி அறவழியிலே செல்லவும் சமூகம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று தங்களது வாழ்க்கையின் அனுபவத்தைக் கொண்டு நற்கருத்துக்களை கூறியுள்ளதுடன் மனிதனின் ஒழுக்கத்திற்குத் தேவையான பல்வேறு கருத்துக்களையும் அன்பு, கருணை, ஈகை, ஒழுக்கம், விருந்தோம்பல், சமூக நல்லிணக்கம், உலக நிலையாமை போன்ற மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு வாழ்வியல் சிந்தனைகள் மற்றும் அறப் பண்புகளை தம் பாடல்கள் ஊடாக வெளிப்படுத்தியதுடன் இன்றுவரை இவை பின்பற்றப் படுகின்றமையும் குறிப்பிட்டுக் கூறவேண்டியதாகும்.

## விதியைப் படைப்பவன் நீதான்

உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை அறிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளே குடிகொண்டிருக்கின்றன.

துக்கங்களும் கஷ்டங்களும் சில சமயம் நேரிடுவது நம்முடைய இயற்கைக் குணங்களைப் பலப்படுத்தவே ஆகும். அவை பரீட்சைகளே ஆகும். நம்மைத் தயார் செய்து கொண்டு அவற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

நீ எந்தளவுக்கு உயர்ந்தவனாக ஆக வேண்டுமென நினைக்கிறாயோ அந்தளவுக்கு கடுமையான சோதனைகளைக் கடந்துசெல்ல உன்னைத் தயார் செய்துகொள்.

இரக்கமுள்ள இதயம், ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை. பிறரது பாராட்டையும் பழிச்சொல்லையும் கண்டு மகிழ்பவனும் பயப்படுபவனும் மகத்தான செயல்களைச் செய்ய முடியாது.

எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போரிடு. வெளியில் நடப்பதை மட்டுமல்ல உனக்குள் ஏற்படும் தீமைகளோடும் போரிட்டுக்கொண்டே இரு. உண்மையை, அன்பை, தூய உள்ளத்தை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது.

நீங்கள் மட்டும் உண்மையானவர்களாக இருந்தால் போதும். யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை.

*வென்ற பிறகும் சமாதானம் பேசுபவனே உண்மையான வீரனாகின்றான்.*

# சைவத்தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில்
# காசிவாசி செந்திநாதையர்
# (1848 - 15.05.1924)

**— திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் —

யாழ் மண்ணின் நடுவே செம்மண் வளமும் நன்னீர்ச் செறிவும் மிக்க குப்பிளானில் அன்று முதல் சைவமும் தமிழும் பொலிவுடன் விளங்கும் பேறு பெற்றது. இத்திருவூரின் பெருமையை உலகறியச் செய்யவென்றே அறம் காக்கும் அந்தணரான சிந்நய ஐயர் வாழ்ந்தார். ஐயரின் இனிய இல்லறவாழ்வின் பயனாக 1848இல் அவதரித்தவர் செந்திநாதர் எனும் சற்புத்திரர். இறையருட்சித்தப்படி செந்திநாதருக்குச் சைவத்தையும் தமிழையும் அதன் சிறப்புகளையும் உலகறியச் செய்ய வேண்டிய நியதி அவரின் கருவிலேயே உதயமானது.

அன்பும், பண்பும் கல்வி ஆர்வமும் குடிகொண்ட குடும்ப வளம்பெற்ற செந்திநாதர் புன்னாலைக்கட்டுவனில் வாழ்ந்த மாமனாரான கணபதி ஐயரிடம் ஆரம்பக்கல்வியை ஐந்து வயதில் கற்கலானார். தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் அடிப்படைக் கல்வியை ஐயந்திரிபறக் கற்றார். இதனால் இவரின் ஆரம்பக் கல்வியூற்று சிறப்பாக அமைந்தது. இவரின் பத்து வயதில் கல்வி வளர்ச்சியின் அடுத்தபடியான ஆங்கிலக் கல்வியையும் கற்க வேண்டியதால் யாழ் மத்திய கல்லூரியிற் சேர்ந்தார். இடைநிலைக் கல்வியையும் சிறப்புடன் கற்றுத் தேறினார். மேலும் தமது ஆர்வத்தினால் நல்லூர் சம்பந்தப் புலவரிடம் செந்தமிழின் இலக்கண இலக்கிய வளத்தையும் தமதாக்கினார். சைவப் பற்றுதியை மேம்படுத்தத் தந்தையார் செந்திநாதையரையும் அழைத்துச் சென்று தில்லைச் சிதம்பரம் முதலான சிவாலய தரிசனையை 1871 இல் நிறைவு செய்தனர். ஐயரின் கல்விச் சிறப்பு வண்ணையில் ஆறுமுகநாவலரின் தமிழ் மற்றும் ஆங்கில பாடசாலையில் ஆறு வருட ஆசிரியர் பணியில் இணைத்தது. பாடசாலையிற் கற்பித்த காலத்தில் நாவலர் எங்கு பிரசங்கம் செய்தாலும் அங்கு சென்று பிரசங்கத்தைக் கருத்திற்கொண்டு தம்மை நாவலரின் பாதைக்கு இட்டுச் சென்றார். இதனால் நாவலரின் "விவிலிய குஞ்சிதம்" எனும் நூலை இவரே அச்சிட்டு வெளியிட்டார். இக்காலத்தில் (1872 - 1878) இவர் இல்லறத்தில் இணைந்து ஒரு புதல்வியை மழலைச் செல்வமாக அடைந்தார். இவரின் துணைவி குறுகிய காலத்தில் மறுமையடைந்தார். இதனால் செந்திநாதையர் 1878இல் இம்மண்ணிலிருந்து வெளியேறி இந்தியாவை அடைந்தார். அங்கு சென்றதும் வடமொழியில் தமது சிறப்பை நிலை நிறுத்த எண்ணினார்.

மலையாள தேசத்து பிரதம நகரான திருவனந்தபுரத்து தலைமை நீதிபதியின் பேருதவியும் ஆறுமுகநாவலரின் நற்சான்றுகளும் அணிசெய்ய அவ்விடத்துச் சுப்பாசாஸ்திரிகள் மற்றும் அரண்மனைச் சாத்திரிகளிடமும் "காவியம், தர்க்கம், வியாகரணம் முதலிய வடமொழிக் கருவி நூல்களைக் கற்றறிந்தார். திருவனந்தபுரத்தில் கற்று வரும் காலத்தில் நாவலர் சிவகதியடைந்ததையறிந்தார். இவர்

*பிரிவு உறவை வளர்க்கும். ஆனால் அடிக்கடி பிரிவது கசக்கும்.*

நாவலர் மீதிருந்த பக்தியும் தணியாத பேரன்பும் காரணமாகத் தமது பிரிவு ஆற்றாமையால் பல இரங்கற் பாக்களைக் காணிக்கையாக்கினார். அவற்றுள் மூன்று பாடலை அறிவோம்.

வெண்பா

*"வன்றொண்டன் நாவலர் கோன் வாழ்வா வதுமாய*
*மென்றுரைத்த தேவாரத் தின்பொருளை - நன்றியுடன்*
*சிந்தைசெய்தேன் நாவலனே செத்தாய்நீ யென்பதனாற்*
*புத்திநொந்து போதமிக்க போது"*

*"நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப*
*என்னதவஞ் செய்தேனோ யானறியேன் - அன்னதனு*
*ளுள்ளசில வாசகங்க ளுற்றுணரும் போதெல்லாம்*
*வெள்ளம் பொழியும் விழி"*

கட்டளைக் கலித்துறை

*"தேவாரம் யான்சொலக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்*
*பூவாதி கொண்டு புரிசிவ பூசைப் பொலிவழகும்*
*பாவாணர் மெச்சச் செயும்பிர சங்கமும் பார்த்தினிநான்*
*நாவார வாழ்ந்திடு நாளுமுண்டோ நல்லை நாவலனே"*

செந்திநாதையர் தமது கவித்தேடலை நிறைவு செய்ததும் திருச்செந்தூர், பழனி முதலான திருத்தலங்களில் தரிசித்து இன்புற்றார். இவர் தந்தையின் அழைப்பை ஏற்றுத் தாயகம் வந்தார். இவ்விடம் வந்ததும் ஐயரின் சிறப்பை அறிந்த கொழும்பு தம்பையா முதலியாரின் வேண்டுதலுக்காகக் கொழும்பு சென்றார். அங்கு 1880இல் முதலியாரின் தரும சத்திரத்தில் ஆறுமாத காலமாக வைதிக, சைவ சித்தாந்த மரபில் பிரசங்கங்கள் செய்து யாவரையும் தம்பால் ஈர்த்தார். பிரசங்க நிறைவில் கதிர்காமஞ் சென்றார். அங்கு உபவாசம் இருந்து பன்னிரு நாட்களில் கந்தபுராணம் முழுவதையும் படித்து முடித்தார். யாவராலும் வெகு சிறப்பாகப் போற்றப்பட்டார். 1882இல் மீண்டும் இந்தியா சென்று திருநெல்வேலியில் சைவசமயம் தமிழ் இலக்கண இலக்கிய போதனாசிரியராகப் பணியேற்றார். 1883இல் திருநெல்வேலியில் இயங்கிய "கஜனமனோரஞ்சனி" என்னும் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணி செய்தார்.

ஒரு சமயம் திருநெல்வேலி திருஞான சம்பந்தர் திருக்கோயிலில் "ஞானத்தின் திருவுருவை" என்னும் பெரியபுராணத் தொடரில் அரிய பிரசங்கத்தைச் செய்தார். அது "கஜன மனோரஞ்சனி" எனும் பத்திரிகையில் வெளி வந்தது. இதனையறிந்த கோயமுத்தூர் சைவ சித்தாந்த சபையினரின் அழைப்பை ஏற்று அவ்விடஞ் சென்றார். அவர்களின் வேண்டுதலில் மேலைச் சிதம்பரம் என்னும் பேரூரில் அமைந்த சைவசித்தாந்த சபையில் பெரிய புராணத்தில் அரிய பிரசங்கம் செய்தார். மேலும் திருமலைப் பேட்டையிலும் சொற்பொழிவாற்றினார். தொடர்ந்து காசியில் வழிபட்டார். பின்னர் தாயகத்தை அடைந்தார்.

1886இல் கந்தபுராண நவநீதம் என்னும் நூலை எழுதினார். இதனை சேர்.பொன் அருணாசலம் மற்றும் சிலரின் உதவியுடன்

*உன் பொறாமையால் மற்றவர்கள் தாழ்வதில்லை. நீதான் தாழ்வாய்.*

அச்சிட்டு வெளியிட்டார். அடுத்தவருடம் இணுவில் சைவசித்தாந்த வல்லுனரான பிரம்மஸ்ரீ நடராசையரிடம் சிவஞான சித்தியாரை அதன் உரையுடன் பாடங்கேட்டு அறிவை மேம்படுத்தினார். பின்னர் சென்னைக்குச் சென்று "ஞான போத விளக்கச் சூறாவளி" என்னும் நூலை எழுதி வெளியிட்டார். பின்னர் சேலம் மாவட்ட திருப்பாற்றூரில் "அமிர்த போதினி" என்னும் வார வெளியீட்டை 1888இல் ஆரம்பித்தார். அக்காலத்தில் சென்னையிலுள்ள கிறிஸ்தவர் சிலர் "சிவனும் தேவனா" என்னும் துண்டுப் பிரசுரத்தை விட்டனர்.

இதற்கு மறுத்துக் கண்டனம் விடுக்குமாறு "இந்துலகுலேக" சங்கத்தலைவரான செட்டியாரொருவர் கேட்டார். ஐயர் இதன் மறுப்பாக "சிவனும் தேவனா? என்னும் திருநாவுக்கு ஆப்பு" என்னும் நூலை எழுதிக் கொடுத்தார். இதுவும் "வஜ்ரடங்கம்" என்னும் வேறொரு நூலும் "கிறிஸ்துமத கானைகுடாரி" என்னும் பெயரோடு அச்சங்கத்தினால் வெளியிடப்பட்டது. செந்திநாதையரின் சிறப்பை அறிந்த அச் சங்கத்தினர் இவரை அழைத்துப் பிரசங்கஞ் செய்வித்து இவருக்குப் பெரு மதிப்பளித்து "கிறிஸ்தவ மதகானைகுடாரி" என்னும் பட்டமும் வழங்கினர். அங்கு கூடிய அதி உத்தமர்களான பெரியார்கள் வழங்கிய எழுத்துருவான விருதில் பின்வருமாறு கூறிச் சிறப்பித்தனர். பாடல் இதுவாகும்.

"நிறைகல்வி தவவொழுக்கஞ் சான்றாண்மை கண்ணோட்ட நெடுரு மன்பு
பொறை மேன்மைச் சிவஞான முதிர்ச்சியநு பூதிமுதற் குணங்களெல்லாம்
குறையாம நிறைசெந்தி நாதமறை யோய் நின்னைக் குறித்தி யாமிட்ட
மறைவாய்மைச் சித்தாந்த சிகாமணியாம் பெயர் பிறர்க்கு வழங்கலாமோ"

மேற்கூறிய இச்செய்யுளால் செந்திநாதையருக்கு "சித்தாந்த சிகாமணி" என்னும் பட்டத்தை ஆவ்வூர் முத்துக்குமார தேசிகர் என்பவர் அளித்துள்ளமை ஐயரின் பேறாகும்.

செந்திநாதையர் 1888இல் "ஞானரத்தினாவளி" என்னும் நூலை எழுதி வெளியிட்டார். மேலும் "வீரபத்திராஸ்திரம்" என்னும் நூலையும் எழுதினார். 1888 முதல் 1898 வரையான பத்து வருடம் காசியில் வசித்து வந்தார். இதனால் இவர் காசிவாசி செந்திநாதையர் என அழைக்கப் பெற்றார். அக்காலத்தில் சிதம்பரம் "பிரம்மவித்யா" போன்ற பத்திரிகைகளில் வைதீக சித்தாந்தத்திற்கு மாறான வெளியீடுகளைக் கண்டித்து எழுதியனவற்றை இந்து சாதனம், விவேக திவாகரன், நாகை நீலலோசனி, விஜயத்துவஜம், வெற்றிக்கொடியோன் முதலான பத்திரிகைகளிலும் வெளியிட்டார். இவர் இந்து சாதனத்தில் வெளியிட்ட வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயம் என்னும் கட்டுரைத் தொகுப்பை யாழ் நல்லூர் த. கயிலாசபிள்ளை அவர்கள் செந்திநாதர் இயற்றியவை என்னும் முகவுரையோடு அச்சிட்டு வெளியிட்டார்.

1898இல் காசியிலிருந்து புறப்பட்டு திருவொற்றியூரிலும் பழவேற்காடு என்னும் சிற்றூரிலும் வசித்தார். அக்காலத்தில் பெரியார் ஒருவரின் சென்னை ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் சொற்பொழிவாற்றினார். இவர் சிவாலய தரிசனையில் பிரசங்கங்கள் செய்தும் வந்தார்.

வள்ளல் இராமலிங்க சுவாமிகளின் பாடல் காரணமாகப் புலோலி கதிரவேற்பிள்ளைக்கும் சிலருக்கும் சென்னைப் பிரதம நீதிமன்றில் ஒரு வழக்கு நடைபெற்றது. இந்த வழக்கில் காசிவாசி செந்திநாதையரும் ஒரு சாட்சியாகத் தோன்றினார். இதனால் கதிரவேற்பிள்ளை வழக்கில் வெற்றி பெற்றார்.

*எதிரியை வெல்வதைவிட அவனைப் புரிந்துகொள்வதே மேல்.*

இதனால் பிள்ளையவர்கள் ஐயருக்குக் கடிதம் மூலம் குறிப்பிட்டுப் பல பாடல்களையும் எழுதினார். அவரின் கடிதம் பின்வருமாறு:

"நீதிபதி முதற்பலரும் வியப்புறச் சுவாமிகள் எழுந்தருளித் திருவாய் மலர்ந்தருளிய வாக்கன்றோ எனக்கு இப்பெருஞ் செயத்தை உண்டாக்கிற்று. இ்.து எல்லாரும் அறிந்ததொன்றே சுவாமிகள் பரங்குன்று நோக்கி என்னைப் பார்த்து" "நின்வழக்கு நினக்குச் செயமாகவே முடியும் அங்ஙனமின்றி மாறுபடவரின் நீறுகண்டிகைவேல் மயில் என்பன வற்றை வேண்டிலன்" என அன்பால் நைந்து அருளிய ஆசிமந்திரம் என் மனத்தை விட்டகலாது. இத்துணை அன்பும் ஆர்வமும் உள வேல் எனக்கு அபஜெயமும் எய்துவதாமோ. என்பதன் நிறைவில் செந்திநாதையரின் இயல்பான தத்துவங்களையும் பெருமையையும் புகழ்ந்து பல பாடல்கள் பாடினார்.

1906இல் தேவகோட்டையைச் சேர்ந்த அரு.சோம. சோமசுந்தரச் செட்டியார் அரு. நா. இராமநாதச்செட்டியார் ஆகியோரின் பொருள் உதவியினால் "செந்திநாதையர் சுவாமி யந்திரசாலை" என்னும் பெயரில் அச்சுயந்திர சாலையை நிறுவினார். தாம் எழுதிய "நீலகண்டப்பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு ஸ்ரீசீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ய மாட்சி வைதீக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடை, விவிலியகுற்சிலக் குறிப்பு முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். மேலும் பல போலி நூல்களுக்கான கண்டனங்களையும் வெளியிட்டார். மேற்கூறிய நூல்கள் 1910இல் வெளிவந்தன. மேலும் இவர் இயற்றிய "மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம்" என்னும் நூல் சாம்பவஸ்ரீ சதாசிவ பண்டித சிவாச்சாரியாராலும் "சிவஞானபோத வானரலங்காரதீபம்" "தேவாரம் வேதாசாரம்" என்பவை புரவைச்சுந்தர முதலியார் புதல்வர் ஏகாம்பர முதலியாராலும் "தத்துவ விளக்கம் மூலமும் உரையும்" மதுரை - காரைக்குடி ஆ.வி.பழ. சிதம்பரச்செட்டியாராலும் "சைவவேதாந்தம்" வெ.வெள்ளைச்செட்டியாராலும் வெளியிடப்பட்டன. இவ்வாறான அரிய நூல்களால் காசிவாசி செந்திநாதையரின் சைவப்பணி இன்றுவரை நிலைத்துள்ளது.

இவ்வரிய சிவப்பணியாற்றிய காசிவாசி செந்திநாதையர் தமது 76ஆம் வயதில் 15.05.1924 சிவசிந்தனையுடன் இயற்கை எய்தினார். இன்றுவரை சைவ உலகம் போற்றும் சைவச் சான்றோனால் எம் மண் சிறப்பு அடைகிறது.

## சரணமய்யா

பல்லோரும் போற்றும் உன் திருநாமங்கள்
பல்கலையும் அருள்புரியும் ஒரு திருமுருகனே
எல்லோர்க்கும் உறவினனே எளியோர்க்கும்
எளியோனே தமிழர் தம் தலைவனே முருகா
கல்லினுள் மாணிக்கமாய் சொல்லினுள்
ஞானச்சுடராய் கடைந்தெடுத்த அமுதமாய்
செல்வச்சந்நிதியில் உறைந்தருள் பாலிக்கும்
ஆறுமுகப்பெருமானே சரணமய்யா.

*-ஜெயகேமலதா-*

*நாம் நம் செயல்களால் வாழ்கிறோம். ஆண்டுகளால் அல்ல.*

# இயங்கும் இயக்கமே இறைவன்

– **திரு இராம ஜெயபாலன்** அவர்கள் –

இறைவனுடைய முழு ஆளுமை (சர்வ வல்லமை)யும் ஆற்றலும், இயங்கும் இயக் கங்களுக்குள்ளேயே இருக்கின்றது தவிர இயக்கங்களுக்கப்பால் அவன் வல்லமையற்றவனாக இருப்பதும், இயக்கங்களுக்கு அவன் தந்த முக்கியத்துவம் கருதியதேயாகும். இந்தவகையில் இறைவன் படைப்புக்களை உடனுக்குடன் நிகழ்த்துவதில்லை, விதியின் நிகழ்ச்சி நிரலில் உயிர்கள் சங்கிலித் தொடர்ச்சியாக பிறந்து இறக்கின்றன. மேலும் உயிர்கள் உருவான விதமும், அதுபோல் படைப்புக்கள் அனைத்தும் உருவான விதமும் பரிணாமம், ஆனாலும் ஒரு கருவிலே உருவாகும் குழந்தை கைகளை கால்களை அசைத்து இயங்குவதற்கு அக் குழந்தையின் உள்ளுறுப்புக்களின் இயக்கங்களும், உருவாகி வளர்ச்சியடைவதே காரணம். மேலும் மரபணுவே இயக்கங்கள் அனைத்தின் தீர்மானத்தைக் கொண்ட திட்டமிடுதலாக இருப்பதுபோல் இயற்கையின் இயக்கங்கள் அனைத்தும் அணுக்கள் படைக்கப்படும்போதே இறைவனால் தீர்மானமாகிவிட்டது. எவ்வாறாயினும் இறைவன் என்றோ தீர்மானித்த படைப்புக் களின் இயக்கங்கள் இன்றுவரை தொடர்கின்றது. காரணம் இயக்கங்களுக்குள் மனித வாழ்வியக் கங்களும் கூட அடங்கியுமுள்ளன, இதனால் பரிணாமங்களும் தொடர்கின்றது.

**இயங்கும் இயக்கம்:**

நாம் காலை எழுந்தவுடன் எமது உடலை அசைத்துப் பல்வேறு தேவைகளுக்காக இயங்குகின்றோம். இரவானதும் தூங்கி ஓய்வு எடுக்கின்றோம். ஆனாலும் எமது உடல் உள்ளுறுப்புக்கள் இடைவிடாது தொடர்ந்து இயங்கிக்கொண்டு இருக்கின்றது. அவ்வாறு இயங்குவதாலேயே நாம் உயிர் வாழ்கின்றோம். இதுபோலத்தான் அனைத்து உயிர்களின் இயக்கமும் தவிர எமது உடல் பஞ்ச பூதங்களால் உருவானமையால், இயற்கையில் உள்ள பஞ்சபூதங்களும் சீராக இயங்கினால் மட்டுமே, எமது உடல் மட்டுமல்ல உயிர்கள் அனைத்தும் உயிர் வாழ முடியும்.

**பஞ்ச பூதங்கள்:**

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையுமே பஞ்ச பூதங்களுக்குள் அடக்கிவிட முடியுமே தவிர பஞ்ச பூதங்களில் சக்தியாக இருப்பது நெருப்பு. மேலும் ஞாயிற்றுத் தொகுதியின் சூரிய நெருப்பே ஞாயிற்றுத் தொகுதியின் இயக்கத்திற்குக் காரணம், தவிர உயிர்களுக்கும் உயிர்களின் இயக்கங்களுக்கும் சூரியனே நேரடியாகவும் மறைமுகமாகவும் காரணமாகின்றது. அதாவது தாவரங்கள் முழுமையாக பஞ்ச பூதங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்குவதாலேயே தாவரங்கள் சக்தியைப் பெறுகின்றன, அதாவது மண்ணில் வேரை ஊன்றி நீரை உறிஞ்சி, மண்ணிற்குமேல் (ஆகாயம்) வளர்ந்து காற்றைச் சுவாசித்து சூரிய ஒளியால் சக்தியைப் பெறுகின்றது. தவிர உணவின்மூலம் சக்தியை (தாவரங்கள்) மற்ற உயிர்களுக்குத் தருவதால்,

மற்ற உயிரினங்கள் பஞ்ச பூதங்களுக்கு நேரடியாக கட்டுப்படவேண்டிய தேவைகளை மட்டுப்படுத்துகின்றது. இதனால் அசைந்து இயங்கும் சுதந்திரம் உயிரினங்களுக்குக் கிடைக் கின்றது.

**ஆண் பெண்:**

மனித வாழ்வியல் இயக்கத்திற்கும் மனித முன்னேற்றங்கள் மற்றும் பரிணாமங்கள் அனைத்துக்கும் ஆண் பெண் உறவும் இணைந்து வாழும் பரஸ்பரம் வாழ்வியல் ஒத்துழைப்புக்களுமே காரணம், எவ்வாறாயினும் ஆண் பெண் என்பது உயிரின பரிணாமம் அசைந்து இயங்க முடியாத தாவரங்களிலேயே இறைவன் ஆண் பெண்ணை அறிமுகப்படுத்தி, அவற்றின் இனப்பெருக்கத்திற்கும் இனப் பரம்பலுக்கும் பல்வேறு இயற்கை காரணிகள்மூலம் அனுசரணை வழங்குகிறான். தவிர மற்றைய உயிரினங்களில் பெரும்பாலானவற்றில் அவற்றின் தாய் மட்டுமே தமது குஞ்சு குட்டி குழந்தைகளை பாதுகாத்து வளர்க்கின்றது. ஆண்கள் சோம்பேறிகளாகவே இருக்கின்றன. மனிதர்களில் ஆரம்ப காலமும் அவ்வாறே இருந்தது. மேலும் மனிதர்களில் ஆண்கள் பெண்களுடன் இணைந்து குழந்தைகளை காக்கத் தொடங்கிப் பின் குடும்பத்திற்கு ஆண்களே தலைமை தாங்கத் தொடங்கிய பிற்பாடு தாமே முதன்மை இயங்கியாகவும் பெண்களைச் சார்ந்து இயங்குபவனாகவும் வகுத்துக் கொண்டான். தவிர அவனது அறிவியல் முன்னேற்றங்களில்கூட இத்தகைய அனுபவத்தைக் குறியீட்டு அறிவாக பிரதியீடு செய்ததை பூரணங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவும் உள்ளது. அதாவது சூரியனை ஆணாகவும், நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மீண்டும் பூமிக்கு மழையாகக் கிடைப்பதால் ஆறுகளைப் பெண்களாக புராணங்களில் பதிவாக்கியுள்ளமை இதற்கு முக்கிய சான்றாகும்.

**இன்ப துன்பங்கள்:**

தாவரங்கள் பஞ்சபூதங்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதால், அவைகளுக்கு இன்ப துன்பங்களை இறைவன் வைக்கவில்லை, மாறாக பல்வேறு இயற்கை அனுசரணை மூலம் அவற்றின் இனத்தை இறைவன் காக்கின்றான். மேலும் மற்றைய உயிரினங்களுக்கு காமமும் பசியும் அவற்றை வாழ்வியக்கங்களுக்குள் வைத்திருக்கக் காரணமானாலும் நோவும் வலியும் மரண பயமுமே தம்மை பாதுகாத்து வாழவேண்டும் என்ற அதீத நிர்ப்பந்தமே அந்த உயிரினங்களை வாழ்வியக்கங்களுக்குள் வைத்திருக்கக் காரணமாகும்.

இந்தவகையில் மனிதர்களுக்கு பசிக்கு மேலதிகமாக சுவையின்பம் கிடைப்பதால் அவன் விதம் விதமாக சமைத்து சுவைத்து உண்பதுபோல் அழகாக உடையணிந்து அழகுக்கு அழகு சேர்த்து கவர்ச்சிகூட்டி விதம் விதமான இரசனைகளில் புணர்வின்பத்தையும் வடிவமைத்து தவிர வாழ்வில் முன்னேறி இவைகளை அடையவேண்டிய ஆர்வத்தினால் பல்வேறு மனித இயக்கங்களுக்குள் தன்னை ஈடுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப் பட்டான். இவ்வாறு இன்பங்கள் மனித இயங்கியல்களை வடிவமைப்பதுபோல் துன்பங்களும் கூட மனிதர்கள் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் தற்காத்து வாழவேண்டும் என்ற

*ஏமாற்றிப் பெறுகின்ற எல்லாம், பெற்றவரையே ஏமாற்றிப் போய்விடும்.*

உணர்வே, பற்றுப் பாசமாகவும் பரிணாமமடைந்தது. மேலும் தம்மைப்போல் பிறரை நேசிப்பதால் மனித நேயமும் உயிர்கள் அனுபவிக்கும் துயர்கள் கண்டு இரங்குவதால் கருணை உணர்வும் உருவானது.

இந்த வகையில் இயங்கியல் என்பது இறைவனின் படைப்பில் உருவாவதை கந்தபுராணம் மிக அற்புதமாகப் பதிவுசெய்துள்ளது. அதாவது முருகன் நெருப்பிலே அவதரித்து பூவிலே குழந்தையாகின்றான் என்று கூறுவதினூடாக, கனிகளுக்குத் தாயும் தந்தையுமாக இருப்பது பூக்கள் ஆகவே முருகன் பிறப்பைக் காமத்தால் களங்கப்படுத்த முடியாத இயக்கமாக பரிணாம மடைய வைத்து, இயற்கை உணர்த்தும் தியாக வாழ்வுக்கு தாய்மையை எடுத்துக்காட்டாக காட்டியுள்ளதுடன், ஆன்மீக மற்றும் வாழ்வியல் இயக்கங்களையும் ஒரே கற்பனைக் கதையூடாக வும், ஒருங்கிணைத்து சொல்லியிருப்பது புராண ஆசிரியரின் அறிவியல் பன்முகத்தன்மையை காட்டுகின்றது.

இவ்வாறே புராணங்கள் தாயை தந்தையை இறைவனாகவும், கருணையே அவன் இயல்பாகவும் காட்டுவது இயங்கும் இயக்கங்களை இறைவனாக காணும் உயரிய நோக்கமாகும்.

**உழைப்பும் உயர்வும்:**

வானம் பார்த்த பூமியாக, விதைத்துவிட்டு, மழையை நம்பிக் காத்திருந்து அறுவடை செய்து மகிழ்ந்த மக்கள்தான் முதலில் காலத்தைக் கணிக்கக் கற்றுக்கொண்டவர்கள் அதாவது மொழியறிவு முக்கியமாக எழுத்தறிவு வளர்ச்சியடைய முன்னர், காலத்தை உடல் அசைவின் சைகை மொழிகளாலும் பெண்ணை மழையைக் குறிக்கும் குறியீடாகக்கொண்டு, நடராஜர் உருவில் பல்வேறு வடிவில் காலச் சக்கரத்தை வரைந்தும் மேலும் பல்வேறு பரிணாமங் களில் வானத்தில் நடக்கும் மாற்றங்களையும் படங்களாகவும் குறியீடாகவும் வரைந்து வருடா வருடம் நடக்கும் மாரி கோடைகளை மட்டுமல்ல நீண்ட காலத்தில் நடக்கும் இயற்கை அனர்த் தங்களையும் கணிக்கக் கற்றுக்கொண்டார்கள். மேலும் வானில் நடக்கும் சூரிய கிரகணம் சந்திர கிரகணம் போன்றவற்றையும்கூட தமது குறியீட்டு அறிவுமூலம் துல்லியமாக இன்றும் கணிப்பது கணிப்பீடுகளின் உண்மைத் தன்மையைக் காட்டுகின்றது. இந்த வகையில் கடலில் பயணம் செய்த மக்கள்தான் நட்சத்திரங்களைக் கொண்டு திசைகளை மட்டுமல்ல காலத்தையும் கணிக்க உதவியவர்கள்.

மேலும் புராணங்களில் சிவபெருமான் கங்காதேவியை தலையில் சூடினான் என்ற கற்பனைக் கதையூடாக மிக அற்புதமான அறிவியல் உண்மைகள் பொதிந்து இருக்கின்றது. அதாவது இறைவனே நேரடியாக, மழையை வானில் இருந்து உற்பத்தி செய்து உடனுக்குடன் பெய்விக்கின்றான். இதை மனிதர்களாலோ வேறெந்த சக்தியாலோ, கணிக்கவோ அறியவோ முடியாது என்று நம்பி கற்பனையில் வாழ்ந்த மக்களைக் கற்பனைக் கதையூடாகவே அறிவூட்டியிருப்பது அற்புதம். அதாவது நீர் என்பது பூமிக்கு மட்டுமே உரியவளம். சூரிய ஒளியால் ஆவியாகி மீண்டும் மழையாகக் கிடைக்கின்றது. இதை காலத்தைக் கணித்தும், தெய்வ சக்திகளின் அறிவுறுத்தல்களுடன் காலத்தே பயிர் செய்து பயன்பெற முடியும் என்பதுடன் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து பாதுகாப்பாக வாழமுடியும் என்பதையும், காட்டுகின்றது.

**ஆன்மீகமும் அற நெறிகளும்:**

மனித அறிவியல் வளர்ச்சியில் மனிதன் தனது அனைத்துக் கலைகளையுமே, ஆன்மீக சக்திகளின் துணையுடனேயே, பாதுகாத்து மீட்டு எடுத்துப் பயன்படுத்தினான். தவிர மனித வாழ்வின் அரசியலமைப்பு மற்றும் சிவில் சட்டங்களையும் அறநெறிகளாக, ஆன்மீக சக்திகளின் முன் அறிக்கையிட்டு, அரசனே சட்டத்தை மதித்து செயற்படும் வழக்கத்தை கொண்டிருந்தமை அன்றைய வாழ்வியக்கமாகும். தவிர அரசர்கள் காலத்தில் வாழ்வியக்கத்தில் வீரம் தவிர்க்க முடியாதிருந்தது. இதனால் எல்லாக் கடவுளர்களுக்குமே பலியிடுதல்கள் இருந்துள்ளது. காரணம், வீரர்களுக்கு யுத்த ஓர்மத்தை ஊட்டுவதற்காகவும், எதிரிகளை அழிக்கத் தயக்கம் காட்டாமல் இருக்கவும் யுத்தப் பயிற்சியாகவே இருந்து வந்துள்ளது. காலப்போக்கில் இவை வன்முறையைத் தூண்டுவதாகக் கருதி, நடைமுறை களில் இருந்து நீக்கப்பட்டாலும், மாதிரி உருவங்களை அமைத்து தேவ அசுர யுத்தமாக மனித வாழ்வியலில் இருந்து அந்நியப்படுத்தி கற்பனை உலகங்களில் நடைபெற்றதாக புராணங்களில் பதிவு செய்யப்பட்டும் உள்ளது. தவிர நீதி நியாயங்களுக்காக தருமத்திற்காக மனிதர்கள் வீரத்துடன் செயற்பட வைக்கத் தூண்டுவதாகவும் அமைந்திருக்கின்றதேயன்றி, புராணங்களை சிலர் இனரீதியான யுத்தங்களாக, இந்துமதத்தின் மேல் இருக்கும் காழ்ப் புணர்ச்சியால் சித்தரிப்பதில் எந்த அடிப்படையும் இல்லை. காரணம், சகல கலைகளையும் கற்றுத்தேர்ந்த முனிவர்களின் பிள்ளைகளையே அசுரர்களாக காட்டப்பட்டுள்ளதுடன், அந்த முனிவர்களும் பிரம்மனின் வம்சத்தில் வந்தவர்களாகவே காட்டப்பட்டுள்ளது. இதனால் அசுரர்கள் அனைவரும் பிராமணரே.

**தெளிவுரை:**

ஒருவர் விமானத்தை உருவாக்கிவிட்டு அதில் பயணம் செய்வது ஆபத்து என்று பிரச்சாரம் செய்யமாட்டார். அதுபோல் இறைவனும் அனைத்துப் படைப்புக்களையும் பஞ்ச பூதங்களுக்கு கட்டுப்படும் இயங்கியல் அமைப்பில் படைத்து பரிணாமமடையச் செய்துவிட்டது. தனது படைப்பை தானே குறைத்துக்காட்டமாட்டார். எவ்வாறாயினும் படைப்புக்கள் காரணமாக பிறவிகள் உருவாகி உயிர்கள் பல்வேறு துன்பங்களை நிலை யாமை காரணமாக அடைகின்றன, அனுபவிக்கின்றன. இதனால் இயங்கியலை வென்று வாழவும் முயற்சிக்கின்றன. இதனால் ஆசைகளை ஒறுத்து புலன்களை அடக்கி, இம்மை மறுமை இரண்டிலும் துன்பமில்லா நிலையை அடைய முயற்சிக்கின்றன. இதில் முக்கிய மானது துறவறம். மேலும் துறவற நெறிகளை உருவாக்கியவர்கள் பல தத்துவங்களை உலகுக்குத் தந்தும் உள்ளனர்.

இந்த வகையில் "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வர மாட்டார்" என்கின்ற உண்மையை மனித சமூகம் ஏற்றுக்கொண்டு கற்பனை வாதங்களில் இருந்தும் அறியாமை மூடத்தனங்களிலிருந்தும் விடுபட வேண்டும். மேலும் இறந்த ஒருவர் மீண்டும் இந்த உலகத்திற்கு வரவேண்டுமெனில் கருவில் உருவாகி வரவேண்டும் என்ற உண்மையை புரிந்துகொள்ளும்போதே உலக அமைதி கிடைக்கும்.

*வேதனைகளை ஜெயித்துப்பார் அதுவே ஒரு சாதனையாகும்.*

# அம்மா என்பது சும்மாவா?

**– திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

பூமாதேவி எமக்களித்த மகோன்னதமான வரங்களில் அற்புதமானது "தாய்" என்ற பேறு ஆகும்.

தாய் என்ற ஸ்தானம், பேசாத தெய்வங்களிலும் பார்க்க ஒருபடி மேலானதாகும். எப்படி என்று பார்ப்போமே!

*கோயில் தெய்வம் பேசாது*
*குதலை மொழி கேளாது*
*நோய் மருந்து தராது*
*நோன்பு கொள்ளாது*
*சேய் என்றால் இரங்காது*
*செம்மை மொழி தராது*
*ஆயுங்கால் இவையெல்லாம்*
*அன்னையிடம் கண்டோமே!*

தெய்வங்கள் ஆலயங்களில் பள்ளி யறைக்குச் சென்று தூங்குமாறு பாவனை செய்து ஒவ்வொரு நாளும் திருப்பள்ளி யெழுச்சி பாடி துயிலெழுப்பி திருவருள் பாலிக்குமாறு பூஜை ஆற்றுகின்றோம். ஆனால் ஒவ்வொரு நாளும் தாயானவள் ஆற்றுகின்ற சேவை இரவு பகல் முழுவதுக்குமானதாகும். இருபத்து நான்கு மணித்தியாலமும் கனவிலும் நினைவிலும் கணவன், குழந்தைகள், பெற் றோர், சாப்பாடு, உடை, நடை, பாவனை, படிப்பு, குளிப்பு, ஆரோக்கியம், பாதுகாப்பு, அன்புப் பகிர்வு, பாசப்பகிர்வு, இன்ப துன்பப் பகிர்வு, இறைவணக்கம், பள்ளியறைப் பரா மரிப்பு, அடுத்தடுத்த பிரசவங்கள் இவ்வாறாக ஒவ்வொரு தாயும் கசங்கிக் கலங்கிப் போகி றாள். ஒவ்வொரு தாயின் பிரசவ வேதனையை யும் தாய்க்கு இனாமாகக் கொடுத்த மாதிரி இறைவன் ஏன் ஆணுக்குக் கொடுக்கவில்லை என்பது இறைவனுக்கான விண்ணப்பமாகும். ஒவ்வொரு மாதமும் அந்த மூன்று நாட்கள் தாயானவள் படும்பாடு ஆண்களுக்குப் புரி வதில்லை. வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்யக்கூடிய பரோபகார சிந்தனை பெரும் பாலான வீடுகளில் ஆண்களுக்கு இருப்பதும் இல்லை. அதுபற்றி அவர்கள் பொறுமையாக இருந்து சிந்திப்பதுமில்லை. இதுபற்றி தாயான வள் எவரிடமும் முறையீடு செய்ய ஒரு போதுமே முனைவதில்லை.

இந்த நூற்றாண்டிலே, தாய்மார் தமது பிள்ளைகளுக்காக வாழ்ந்து வாழ்வையே நிறைவு செய்த பதிவுகளே ஏராளம் ஏராளம் உள்ளன.

கணவனும் பிள்ளைகளும் தினமும் காலை ஏழு மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பி கடமைக்குச் சென்று மாலை ஏழு மணிக்கே வீட்டுக்கு மீண்டும் திரும்புகின்றார்கள். களைத்து விழுந்து ஆளைவிட்டால் போதும் என்று ஏதோ சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குப் போய் விடுகிறார்கள். மனைவி சாப்பிட்டாரா? அம்மா சாப்பிட்டாரா? சுகமா இருக்கிறீர்களா? என்று

எவருமே அம்மாவைப் பார்த்துக் கேட்பது இல்லை. இதுதான் இன்றைய நிலைப்பாடு. தாயானவளுக்குச் சாப்பாடு இருக்கிறதா என்று எவருமே எட்டிப் பார்ப்பதில்லை. அவள் சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக எலும்பும் தோலுமாய் தன்னைக் கவனிக்காத ஒரு பிராணி கட்டைக்குப் போகுமட்டும் அவளது கைகளும் கடமையும் ஓய்வதில்லை. பல ஆண்கள் வீட்டிலே பகலில் நிற்பதில்லை. இரவுக்கு மட்டும் வருவதுமுண்டு. ஒரு சில ஆண்கள் தெய்வங்களாகத் திகழ்கிறார்கள். அவர்களை வீழ்ந்து வணங்கியே ஆக வேண்டும். அடேயப்பா! என்ன செய்ய! கிளி மாதிரி வீட்டிலே மனைவி இருக்கக் குயில் களைத் தேடிப் போவோரும் இருக்கவே செய் கிறார்கள். ஒரு கணவன் தடம் புரளுவானாக இருந்தால் வீட்டுக்கும் அது நல்லதல்ல! ஊருக்கும் ஏன் நாட்டுக்கே நல்லதல்ல! எத்தனையோ பிள்ளைகளது தந்தைக்கான பெயர் கடவுள் சாட்சியாக உண்மையான தாக இருக்கும் என்று இந்த மண் தன்னைக் காப்பாற்றியே கொள்கிறது. காரணம் இந்த விடயத்தில் ஒரு பெண்ணானவள் தனது கௌரவத்தைக் காப்பாற்ற மரணம் வரை போராடியிருக்கிறாள். முடியவில்லை. ஆண் ஆனவன் தனது வீரியத்தினாலும், பதவி பட்டம் நியமனம் காரணமாகத் தாய்மையின் தெய் வீகத்தை வதம் செய்துவிட்டு இப்போதும் வாடாமல் கொள்ளாமல் வீதியில் மாலை மரியாதைகளோடு இல்லறத்திலும் துறவறத் திலும் கொடிகட்டிப் பறக்கிறார்கள். நடக்கட் டும்! இயற்கை தனது பொறுமையை இழக்க அதிகநாள் செல்லாது! வேஷங்கள் எப்படித் தான் விளம்பரமானாலும் தலையில் எழுதப் பட்ட விடயம் ஒருபோதும் மாறாது. மேடை யிலும் பாடையிலும் அந்த விடயம் உச்சரிக் கப்படும். எனவே எந்தப் பெண்ணையும் குறிப் பாக தாயவளைப் போஷிக்க மறந்தும் எண் ணாதீர். மாறாகப் பூஜியுங்கள். இந்தக் காரியங்கள் பெரிய பெரிய இடங்களில் வலு கச்சிதமாக அரங்கேறுகிறது. ஆனால் மூலத் தானங்கள் மன்னிப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனை நம்புவதற்கு மூர்த்திகள் ஒருபோதும் சயனிப்பதில்லை. சமாளிப்பதுமில்லை. ஒரு தலைவன் அவன் எவராக இருந்தாலும் அக மும் புறமும் தூய்மையாக ஒளிரவும் மிளிர வும் இயங்குவாராக இருந்தால் அறத்தினது உச்சம் அதுவானதாகவே இருக்கும். அந்தத் தூய்மை அகத்தில் சுடர்விடுமானால் ஒவ் வொரு தலைவனுடைய முகத்திலும் தெய் வீகம் பிரகாசிக்கும். பிரவாகிக்கும். இவ்வாறு தெய்வீகம் பிரவாகிக்கும் ஒரு தலைவனைத் தற்காலம் பிரசவிக்கவில்லை என்பது ஒரு கசப்பான சம்பவமாகும்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற"**

குறள் 34.

ஆமாம்! மனம் சுத்தமாகவும், குற்றம் அற்றதாகவும் இருக்கவேண்டும். அது ஒன்று ஒருவனுக்கு இருந்தாலே பெரிய அறமாகும். மாசினையே மனதில் வைத்துக்கொண்டு பெரும் எடுப்பில் தடல்புடலாகச் செய்யப்படும் அத் தனை தரும காரியங்கள் அனைத்துமே ஆர வாரமேயாகும். இவ்வாறான ஆரவாரமுள்ள ஒரு புதல்வனை ஈன்றெடுத்தமைக்காக அந்தத் தாயானவள் புளகாங்கிதமடையமாட்டாள். மாறாகப் புண்பட்டுப் போவாள்.

ஒரு தாயை எமது மரணத்திற்கு அப் பாலும் உணரவேண்டுமாயின், ஒவ்வொரு குடிமகனும் இல்லறத்துக்குள் சென்றேயாக வேண்டும். இல்லறம் என்பது ஒரு வாழ்க் கையை வாழ்ந்து பார்க்கின்ற பரீட்சையாகும். இந்தப் பரீட்சையானது ஒவ்வொரு நாளுக்கு மான தடைதாண்டல் ஆகும். வெற்றிபெறுவது

*அழகு என்பது மனதுதானே தவிர முகமல்ல.*

சுலபமல்ல. இல்லறத்தின் வெற்றிதான் துற வறத்திற்கான பாதையாகும். ஒரு தாயான வள் எல்லோருடைய கடமையையும் செய்து முடிக்கும்போது துறவறத்திற்கான சித்தியடை கின்றாள். தனது உடலையும் தனது அன்பை யும் தனது குடும்பத்திற்காக முழுமையாக அர்ப்பணித்த பெருமதியோடு தனது முது மைக்கு வித்திடுகின்றாள். இப்போது அவளது இளமை எல்லாமே கணவனிடமேயும் பிள்ளை களிடமேயும் விளைந்து தாய் மெலிந்து உடைந்து களையிழந்து, வலுவிழந்து போகின்றாள்.

வீட்டிலே தனித்துப் போகின்றாள். கணவன் வேலையிலே திளைத்து களைத்து விழுந்து வருகின்றார். நேரமாகி விடுகிறது. பிள்ளைகளும் வேலைகளுக்குப் பொறுப்பாகி, வயதாகி திருமணமாகி, பிள்ளைகளும் அப்பா அம்மாவாகி, குழந்தைகளுக்குப் பொறுப்பாகிட தாய் அடிக்கடி களைப்பாகி, படுக்கைக்குப் பாரமாகி விடுகிறார்கள். தாயைப் பார்ப்பதாகச் சொல்லி பறையடித்து மேடையிலும் முழங்கு வார்கள். ஒரு மாதத்திலே, ஐந்து நாள் கொழும்பு! பத்துநாள் சுற்றுலா! பத்துநாள் வெளிநாடு! மூன்றுநாள் திருவிழா! இரண்டு நாள் செத்தவீடு! பாராட்டு விழா! பகல் நேரம் ஏதோ பெரிய உலாத்துவேலை. தாயைப் பார்க்க, சீராட்ட, பாராட்ட, நீராட்ட பகல் ஒரு சம்பள ஆள். இரவு ஒரு சம்பள ஆள். இவர்களே சமையலும் சாப்பாடும். இதைவிட வேறு வழியும் இல்லை. இது ஒருவகையான பராமரிப்பு. மாதாந்தம் பராமரிப்புச் செலவாக 90,000/= கொடுக்கவேண்டும். படிப்பு தந்த பாடம் இதுவாகும். கொஞ்சம் விலாசமான வர்கள் என்றால் இதையே ஒரு ஆய்வாக செய்து உச்சப் புள்ளியும் எடுத்துவிடுவார்கள்.

இதனுடைய மறுபக்கம் ஆனது ஒரு உண்மையான சம்பவம். வலி வடக்குப் பிரதேசத்தில் நடைபெற்ற எமக்குப் பாடம் கற்பிக்கும் ஒரு சம்பவம்! இது மேடைக்கு வராது!

ஆம்! தந்தை ஒரு வாகன சாரதி. கடுமையான கும்பழாவளை பக்தன். தாய் இல்லறத் தர்மம் பேணும் பதிவிரதை. நான்கு பிள்ளைகள். தாய் படுக்கையானார். தந்தை ஏற்கனவே மரணம். சாந்தன் என்பவர் இளைய மகன். அம்மாவைத் தானே பார்க்கவேண்டும் என்று விரதம் பூண்டு, தாயார் இறக்கும்வரை, அவரைச் சீராட்டி, நீராட்டி, மலசல விமோசன பராமரித்து, மூவேளை அமுதூட்டி, மன நிறை வோடு சிவப்பேறாக்கி இன்று ஒரு பிரமச்சாரிய தர்மவானாக வரமாகின்றார். இலங்கையில் வணங்கப்படவேண்டியவர்.

**நிலையாய் நிற்கும் செல்வச் சந்நிதி வேல்**

கூடாத வார்த்தை எதையும் பகராதே
குறை கூறி எவரையும் தான் திரியாதே
நீடாளி சூழ் இலங்கை தலையோடு அமர்ந்தோனே
நிலை நிற்கும் ஸ்ரீ செல்வச் சந்நிதிப் பெருமானே
ஊடாடும் பக்தர் நெஞ்சில் உறைந் தோனே
உயிர் உடமை காத்திடும் சந்நிதி வேல் பெருமானே
வாடாது எவர் மனமும் காத்து என்றும் அருள்வோனே
வரம் கொடுக்கும் சந்நிதி வேற் பெருமானே.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

*எதையும் விட்டுவிடாதே, கற்றுக்கொள்.*

# சைவப் பெருமக்கள் கலியுகவரதன் முருகனை வேண்டி அநுட்டிக்கும் தலையாய விரதம் கந்தசஷ்டி

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –



ஐப்பசி மாதம் வளர்பிறையில் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் சஷ்டி திதி ஈறாக ஆறு நாட்கள் கந்தப்பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப்படுகின்ற விரதம் "கந்தசஷ்டி" ஆகும்.

கந்தப் பெருமான் சூரபத்மனைத் தலைவனாகக் கொண்ட அசுரப் படையை வாட்டி அழித்த திருவிளையாடலைத்தான் கந்த சஷ்டி விரதமாகவும், விழாவாகவும் அனுஷ்டித்து கொண்டாடப் படுகிறது.

பரமேஸ்வரனுக்கும் - பார்வதிதேவிக்கும் குமாரனாக உதித்த முருகப் பெருமான் தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் போன்ற கொடிய அசுரத் தலைவர்களையும் அசுர குலத்தையும் ஆறுநாள் போரில் அடக்கி ஒடுக்கி சம்ஹாரம் செய்தார். வேலினால் சூரபத்மனைப் பிளந்த முருகப்பெருமான் அவனின் ஒரு பகுதியை மயில் வாகனமாகவும், மற்றொரு பகுதியை சேவற் கொடியாகவும் தமதாக்கி ஆட் கொண்டு தேவலோகத்தைக் காத்தருளினார்.

"ஆறா றையு நீத்ததன் மேனிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர் வித்தவனே"

என்பது இந்த சூரசம்ஹாரத்தை எடுத்து உரைக்கும் கந்தரநுபூதிப் பாடலாகும்.

உலகிலே ஜீவராசிகளுக்கு தாயாய், தந்தையாய், இறைவனாய் இருந்து பரிபாலிக்கும் கந்தவேள் யாரை அழிப்பது? யாரைக் காப்பது? மறக்கருணையால் அசுரர்களின் அசுர இயல்பை அழித்து தேவ இயல்புடன் அவர்களை ஆட்கொண்ட திருவிளையாடலே சூரசம்ஹாரம். பிளக்க பிளக்க முளைத்த சூரன் ஈற்றில் கடலில் மரமாக வளர்ந்து நின்றான். கடலில் மரமாக வளர்ந்து நின்ற சூரனை கந்தப் பெருமான் சஷ்டியில் அறுத்தார் என்பது

பிறவிதோறும் முளைத்த அவனது ஆணவத்தை அழித்து அவனை ஆட்கொண்டார். என்பதே சூரசம்ஹாரத்தின் ஊடகக் கருத்தாகும்.

எமது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட ஒருபுற உபசாரத் திருவிளையாடலே கந்தவேளுக்கும் அசுரப் படைக்கும் இடையில் நடந்த போரும் சூர சம்ஹாரமும்.

பிரபஞ்ச வாழ்வும் ஒரு தொடர்ச்சி யான போராட்டமே ஒவ்வொருவரின் உள்ளத் தில் எழுகின்ற தேவ இயல்புக்கும் அசுர இயல்புக்கும் இடையில் இடையறாத போரும் பூசலும் சம்ஹாரமும் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

எம்மில் எழும் அகங்கார, காம, குரோத மதமார்ச்சர்ய விருத்திகளே அசுரத் தலைவர்கள் என்றும் தீய எண்ணங்களே அசுரப்படை என்றும் இந்த அசுர இயல்புடன் தொடர்ச்சியாக விடாது போராடி அடக்கி ஒடுக்கி அழித்து நற்பேறு அடைய வேண்டும் என்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

நாம் உடம்பைப் பெற்று இறைவனை வணங்கி முத்தியடைவதற்கே என்பது ஆன் றோர் மொழியாகும். கந்தசஷ்டி விரதம் முருகப்பெருமானுக்கு உரிய விரதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி அனுஷ்டிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பலனைப் பெறுவர் என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு. கந்தசஷ்டி விரதம் ஆறு நாட்களை உள்ளடக்கியது. ஆறு நாட்களும் முழு விரதமிருப்போர் பூரண உபவாசமிருந்து, ஏழாம்நாட் காலை பாரணை பண்ணுவர்.

அவ்வாறு அனுஷ்டிக்க இயலாதவர் கள் முதல் ஐந்து நாட்களும் பால், இளநீர், பால்பழம் ஏதாவது உட்கொண்டு ஆறாவது நாளாகிய சஷ்டியிலாவது பூரண உபவாசம் இருக்க வேண்டும்.

இவ்வாறு அனுஷ்டிக்க இயலாதவர் கள் தம் தேக மனநிலைக்கு ஏற்ப திரிகரண சுத்தியுடன் இயன்றமட்டும் அனுஷ்டிக்க வேண்டியதுதான். மனச் சுத்தமும் ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையுமே முக்கியம்.

இந்த விரத நாட்களில் கந்தசஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா, கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ், சண்முக கவசம் ஆகியவற்றில் மனதுக்கு உகந்த பாடல் களைப் பாடி கந்தப் பெருமானின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

ஆகவே இந்த கந்தசஷ்டி நாட்களில் மட்டுமன்றி, வாழ்நாள் முழுவதும் முருகப் பெருமானை நினைந்து அவன் அருட்பாடல் களைப் பாடிப் பரவி உலகிலே தாண்டவமாடும் அநீதிகள், தீமைகள், அறியாமைகள் யாவும் ஒழிந்து, அழிந்து எல்லோரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திப்போமாக.

**இறைவனை முழு மனத்துடன் கெட்டியாகப் பற்றிக்கொண்டால், அந்த பக்தனை இறைவன் நழுவ விடமாட்டான். இறைவனை சதா சிந்தித்தால் இடையூறுகள் விலகும். தீவினைகள் தொலையும். தீய பழக்கங்கள் நம்மைச் சங்கிலி போல இறுகப் பிணைத்திருக்கின்றன. அதிலிருந்து விடுபடமுடியாமல் துன்பப்படுகிறோம். இந்தச் சங்கிலியை உடைத்தெறிந்து நம்மை விடுவிப்பவன் இறைவன். இறைவன் காந்தம், நாம் இரும்பு. கண்ணுக்குத் தெரியாமல் காந்தம் இரும்பைக் கவர்வதைப் போல, இறைவன் தன் கருணையால் நம்மைக் கவர்ந்தபடியே இருக்கிறான். சொல், செயல் சிந்தனைகளில் தூய்மையாக இருப்பவர்களால்தான் நன்றாக ஆன்மிக சாதனைகள் செய்ய முடியும். அத்தகையவர்களுக்கு இறைவன் எளியவன் என்பது பிரத்தியட்ச அனுபவமாக இருக்கிறது. இறைவன் எளியவன் என்பதை நம்மால் உணர முடியவில்லை என்றால் அதற்கு தவக்குறைவுதான் காரணம்.**

*நம்மீது நம்பிக்கை இருக்கும்வரை வாழ்க்கை நம் வசம்.*

# கதிர்காம யாத்திரை
# -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

**-செல்வி சி. நிலா அவர்கள்-**

கதிர்காம உற்சவத்தைக் காணவேண்டும் எனும் பேராவலுடன் எமது குழுவினர் அனைவரும் ஆயத்தமாகிக்கொண்டிருந்தவேளை எனது மனதில் நான் கதிர்காமத்துக்கு வந்து முருகனை வழிபடுவேன் என்று ஒரு கணமும் நினைக்கவில்லை. ஏனெனில் இன்றும் கூட ஆச்சிரமத்திற்கு வந்து போகும் பல முதியோர்கள் இன்னும் தாங்கள் கதிர்காம தரிசனம் செய்ய முடியவில்லை. தாங்களும் கதிர்காமத்திற்குப் போகவேண்டும் சுவாமி அவர்கள் போகும்போது தங்களையும் அழைத்துக்கொண்டு போங்கள் என்று ஐயாவிடம் கூறுவதையும், கூறியவர்களின் பலரை ஐயா அழைத்துக்கொண்டு வந்தமையையும் நான் அறிவேன். அவ்வகையில் எனக்கும் இப் பாக்கியம் கிட்டியது என்பது அவன் அருள் என்றே கூறவேண்டும். இக் கூற்றிற்கு அமைவாக ஐயா அவர் களும் நான் கதிர்காமத்தானை வணங்காவிடினும் என்னோடு வரும் இத்தகைய எண்ணத் தோடு வருபவர்கள் வழிபட்டால் அதுவே நான் வழிபட்டதுக்கு சரி என்று கூறுவார்.



இவ்விடத்தில் கதிர்காமக் கந்தனைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். வள்ளியை முருகன் இங்கேதான் காதலித்து கரம்பிடித்தான் என இந்துக்கள் நம்புகின்றனர். ஒரு காலத்தில் வட இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் எள்ளாளனுடன் போர்புரியச் சென்ற சிங்கள மன்னனான துட்டகைமுனு கதிர்காம வேலனை வணங்கி வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது.


*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது.*

அதற்கமைவாக இன்று கதிர்காம உற்சவத்தில் சுவாமி வெளிவீதி வரும்பொழுது துட்டகைமுனுவின் உருவச் சிலையை சுவாமிக்கு முன் கொண்டுவருவதை நடைமுறைப் படுத்துகிறார்கள். கதிர்காம தல வரலாற்றைப்பற்றி நான் அதிகம் எழுதவில்லை. ஏனெனில் கூடுமானவரை அநேகரும் அறிந்திருப்பார்கள். இருந்தாலும் அங்கே உள்ள ஒரு சில சிறப்பைக் கூறி எனது அனுபவத்தைத் தொடரலாம்.

கதிர்காமத்தின் கருவறையுள் அதிசக்தி வாய்ந்த சடாட்சர யந்திரம் இருப்பதாகவும் அது தமிழ் சித்தர் மரபில் முதனிலையில் வைத்துப் போற்றப்படும் போகரால் உருவாக்கப் பட்டதெனவும், அவரால் வழிபடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அங்கே பூசை செய்வோரை கப்புறாளை என்றும் அவர்கள் வாய்கட்டி மௌனபூசை செய்வர். அவர்களைத் தவிர வேறு ஒருவரும் கருவறைக்குள் உட்செல்ல முடியாது. திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் தனது திருப்புகழில் "வனமுறை வேடர் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உடையோனே" என்று பாடி இருப்பது குறிப்பிடத்தக்கது. வேடர்களால் நடத்தப்பட்ட பூசை வழிபாடுகளை முருகன் மனமுவந்து ஏற்றிருக்கின்றான். அதற்கமைவாக இன்றும் அங்கே வேடர் வழிபாடு இடம் பெறுவது காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய அருட் சிறப்போடு விளங்கும் வேலவனது உற்சவத்தைக் காணும் ஆவலுடன் நாம் அனைவரும் ஆயத்தமானோம். சுவாமி தான் பின்னால் வருவதாகவும் நீங்கள் முன்னே போய் வழிபாட்டில் ஈடுபடுமாறு கூறி தெய்வேந்திர அண்ணனை இவர்களைக் கூட்டிக் கொண்டுபோய் சுவாமி வீதியுலாவைப் பார்ப்பதற்கு வசதியாக ஓர் இடத்தில் இருக்கவை என்று கூறியதற்கிணங்க அவருடன் ஆலய வளாகத்தை அடைந்தோம்.

ஆலய சுற்றாடலைப் பார்த்தபொழுது எனக்கே நான் காலையில் வந்து பார்த்த இடம் தானா? என்ற சந்தேகம் வந்துவிட்டது. காரணம் ஆலய வளாகம் முழுவதும் வர்ண மின்குமிழ் களால் அலங்கரிக்கப்பட்டு அதன்மூலம் கிடைக்கும் ஒளி வெள்ளத்தால் அப் பிராந்தியம் முழுவதும் ஜெகஜோதியாக மின்னியது.



*உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை, தீமையையும் விரட்டுகிறது.*

அதோடு மட்டுமல்ல ஆலய வீதியைச் சுற்றி உள்ள சிறு சிறு ஆலயங்கள்கூட பார்ப் பதற்கு ரம்மியமாக விளங்கியது. அதனைப் பார்வையிட்டபடி ஆலயத்தின் வெளிப்புறம் அமைந்த மேடையைப் பார்த்தபொழுது உற்சவம் காணவந்த மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஏன் இவ்வளவுபேரும் வெளியே இருக்கிறார்கள் என்று எம்மை அழைத்துச் சென்ற தெய்வேந்திர அண்ணனிடம் கேட்டேன். அவரும் சுவாமி வீதி வலம் வரும்பொழுது நடை பெறும் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கு வசதியாக அனைவரும் முன்கூட்டியே வந்து இருக்கிறார் கள் என்றார். அவற்றைப் பார்வையிட்டபடியே ஆலய வாசலை அண்மிக்க அதன்முன் உள்ளே ஒரு பகுதியில் இருக்கைகள் போடப்பட்டு பலர் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் எங்கே இருக்க வேண்டும் என்று கேட்டபடி ஆலய உட்பிரகாரத்தை அடைந்தோம். அங்கே இருபக்கமும் கயிறு கட்டி யாரும் உள் நுழையாதபடி தடையை ஏற்படுத்தி இருந்தார்கள். நாமும் கயிற்றுக்கு வெளியே ஓர் இடத்தில் அமர்ந்தோம்.

நாம் இருந்த இடத்தில் இருந்து பார்த்தபொழுது ஆலய உள் வீதியில் நடைபெறும் அனைத்து விடயங்களையும் காணக்கூடியதாக இருந்தது. நான் இருந்த இடத்துக்கு முன் பாக புத்த விகாரையும், அதற்குப் பக்கத்தில் பிள்ளையார் ஆலயமும், அதன் அருகே முருகன் ஆலயமும் காணப்பட்டது.

இரவு உற்சவத்திற்குரிய முன் ஆயத்தங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஆலயத் தோடு தொடர்புபட்டவர்கள் அனைவரும் வெள்ளை வேட்டி, சேட்டுடன் காணப்பட்டார்கள். அப் போது ஐயாவும் கணேசமூர்த்தி அண்ணனும் எமக்குப் பின்புறமாக வந்து "போகும்போது என்னைப் பார்க்க வேண்டாம் உற்சவம் முடிய எல்லோரும் போகும்போது நீங்களும் தங்கும் இடத்துக்கு போங்கோ" என்று கூறிவிட்டு சற்று தூரமாக போய் இருந்தார்கள். சந்நிதியில் இருந்து ஐயா வந்து நிற்கிறார் என்று அறிந்த மாத்தளையில் பிரபல வர்த்தகரும் சிறந்த சமூகசேவையாளரும் தெய்வானை அம்மன் ஆலயத்தில் உற்சவ காலங்களில் நடைபெறும் அன்னதானச் செயற்பாடுகளுக்கு தன்னாலான ஆதரவை நல்கி வருபவருமான "சண்" என்று அழைக்கப்படும் சண்முகநாதன் என்பவர் ஐயாவிடம் வந்து சுவாமி நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். எங்களோடு வந்து இருங்கள் என்று கூறி ஐயாவையும் கணேசமூர்த்தி அண்ணரை யும் கயிற்றின் ஊடாக தாங்கள் அமர்ந்திருந்த பிள்ளையார் ஆலய வெளி வாசற்படிக்கு அழைத்துச் சென்றார்.



புத்தகத்தைத் தலை குனிந்து பார், உன்னை தலை நிமிர்ந்து நடக்க வைக்கும்.

அந்த இடத்தில் அன்னதான செயற்பாட்டில் ஈடுபடும் பல பெரியவர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களும் ஐயாவை வரவேற்று தங்களோடு அமரச் செய்தனர்.

இரவு ஆலய உற்சவம் ஆரம்பமாவதற்கு முன் சுவாமியின் வெளிவீதி உலாவில் பங்கு பற்றும் யானைகளை ஆற்றில் குளிக்க வைத்து சுவாமியின் பேடகத்தை சுமந்துவரும் யானையை முன்னிறுத்தி ஒன்றன்பின் ஒன்றாக ஆலய வளாகத்துள் வந்து முதலாக விகாரையை வணங்கி அடுத்ததாக பிள்ளையாரை வணங்கி கடைசியாக முருகன் வாயிலிலும் வணங்கி பெரிய யானை சுவாமி கொண்டுவந்து ஏற்றும் இடத்தில் நிறுத்தப்பட்டது. அதற்கு முன்பாக பிள்ளையார் ஆலயத்தில் யானைகள் ஒன்றன் பின் ஒன்றாக முன் கால்களை மடித்து மண்டிபோட்டு வணங்கி எழும்போது ஆலய வாசலில் நின்ற பெரியோர்களும் ஐயாவும் யானைக்கு விருப்ப மான கரும்புத் துண்டுகளை அதற்குக் கொடுத்து அதன் நெற்றியைத் தடவி வணங்குவார்கள். இச் செயற்பாட்டில் ஐயாவையும் ஈடுபடச் செய்தது எமக்கெல்லாம் ஒரு அதிசயமாகவே இருந்தது.







அதன்பின் முருகனாலயத்தில் பூசை வழிபாடு இடம்பெற்று இறுதியாக பெரிய கம்பளம் ஒன்றால் மூடப்பட்ட முருகனது யந்திரம் அமைந்த பேழையைத் தாங்கிவந்து அலங்கரிக்கப்பட்ட யானையில் ஏற்றப்பட்டது. ஏற்றப்பட்ட பேழையைச் சுற்றி அடியார்கள் கொண்டு வந்த மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு மறைக்கப்பட்டது. இச்செயற்பாடு இடம்பெறும்போது பிள்ளையார் வாசலில் பெரிய தட்டம் ஒன்றில் வைத்திருந்த மஞ்சள் நிறமுடைய நீளமான ஆண்டாள் மாலையை யானையின் அருகே ஐயா தலையில் தூக்கிச் சென்று உயர்த்திப் பிடிக்க கப்புராளை அந்த மாலையை சுவாமியின் பேழையைச் சுற்றிச் சாத்துவார். இது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆலயத்தோடு தொடர்பில் உள்ளவர்களைத் தவிர வேறு எவரையும் இச் செயற்பாட்டில் உள்வாங்குவதில்லை. ஆனால் விநாயகராலயத்தில் இருந்து இக் கைங்கரியம் இடம்பெறுவதால் அவர்களும் இதைத் தடுப்பது இல்லை. சுவாமி தட்டில் மாலையுடன் முன் செல்ல அவர் பின் பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்தவர்களும் செல்வதைப் பார்க்கும்போது எமது ஐயாவுக்கு கதிர்காமத்தில் இத்தனை உயர்வா! என்று எண்ணத் தோன்றியது. கதிர்காம யாத்திரையில் எந்த இடத்திலும் ஐயா இல்லாமல் ஒன்றும் நடக்கவில்லை. அவ்வகையில் ஐயா முதன்மையானவராக உள்ளார். முற்றுமுழுதாக எனது மனதில் உதித்த எண்ணக் கருத்தையும், நேரில் பார்த்துத் திளைத்த செயல்களைத்தான் எழுத்துருவில் தந்திருக்கின்றேன். (தொடரும்...

*தவறே செய்யாத மனிதன் இல்லை. தவறை திருத்திக்கொள்ளாதவன் மனிதனே இல்லை.*

# நட்டு விடு பூமலர

வேல் தனைக் கையேந்தி
வினைதனை கூறாக்கி
சொல்லும் தமிழ் மொழி தனை
கூராக் கியாழ மாக்கி
பல் நெடுங் கால மதை
வாழ வைத்த சோதியே
சொல் லுக்கு மந் திரமுன்
சர வண பவ என்னுமே!

மயிலே றிவந்து நீவிளை யாடும்
அழகென்ன
ஒயிலாக வள்ளி தெய்வ யானை
யுட னமர்ந்த லெழிலென்ன
விழியா லேயெனை ப்பார்க்க
வினை யெலா அகன்ற தென்ன தமிழ்
மொழியாலே யுனைப் பாட
என்ன தவம் செய்தனனே!

நின்றும் கிடந்தும் நடந்தும்
சென்றுமு னைத்து திக்க
நன்றும் தீதும் எனக் கிருக்க
யான் செய்த பாவமென்ன
கன்றும் தன் தாய் நாடி
உடன் தானிருக்க
என்னே உன் கருணை வெள்ளம்
மலை போல் திறந்திடவே.

ஒன்று மில்லானை சுடரொளி
யாய் நின்றானை
வன் பழுத் தெமை யாண்ட வேல்
கரம் கொண்டானை
என்று மிலாச் சுந்தர தேவனை
தாழ் பணிந்தே
பன்னி ருவிழியானை பங்க மிலானை
பார்த்தே கை தொழுவோம்!

எங்கை தொழு தேத்த மிடரெலா
தான் நீங்க
பங்க மிலா மனத்தானை பார்வதி
யாள் புத்திரனை
எங்கு மொழி வீசும் தமிழ்
தந்த சுடரானை
சங்க மிக்க யாம் தொழுவோம்
சரணா கதிதா னடைந்தே!

சிக்கித் தவிக்கின் றோமீள
வழி தெரியாமல்
வக்கித்து நிற்கின் றோம்
வாழ வழிபுரியாமல்
பக்கத் தில்நீ இருந்தும்
மேது மறியாமல்
சொக்கித் தான்போய் நின்றோ
முன் சோதி வடிவம் கண்டே!

கரங் கூப்பித் தொழுதா தெல்லாம்
கிடைத்துவிடு மென்றெ ண்ணாதே
உரத்த குரலில் ஒலியெழுப்பி
நீ யழைத் திட்டாலும்
பரம் பொருளை பற்றிடவே
பக்கு வமாய் பணிசெய்
நிரந்தர மாய் வீடுபேறு
முன் புகழும் சேர்ந்திடுமே!

வளை யோசை மாந்தர் தம்
வலையினிலே வீழ்ந் திடாமல்
களை யெடுத்து பயிராக்கி
விதை நெல்லா யாக்கிவிடு
விளை கின்ற பயிரெல்லாம்
வீணாகிப் போகாது
நாளை நின் பாதத்தில்
நட்டு விடு பூமலர!

– திரு பொ. பாலேஸ்வரன் –

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

